# சிதம்பரக் கல்லூரி

PRINCIPAL
CHITHAMBARA COLLEGE
VALVETTITURAI

S. YOGACHANDRAN
PRINCIPAL
CHITHAMBARA COLLEGE
VALVETTITURAI




funcation.

## வல்வெட்டித்துறை

உடலோடு உறவாடும் உயர்ந்த ரக

உங்களுக்குத் தேவையான சகல விதமான

* பிடவைத் தினுசுகளுக்கும்

* கூறைச்சேலை வகைகளுக்கும்

* றெடிமேட் ஆடைகளுக்கும்

* மற்றும் வகைப் பிடவைத் தினுசுகளுக்கும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ள

## இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

# ஞானம் ரெக்ஸ்ரைல்ஸ்

18 A மக்கள் நவீன சந்தை    தொலை பேசி: 7619

மின்சார நிலைய வீதி,    யாழ்ப்பாணம்


1977 ம் ஆண்டு வெளிவந்த மலர்.

S. MEENAKSHISUNDARAM
SIVAN KOVILADY
VALVETTITURAI


# கல்லூரி கீதம்.

திருவளர் கலைதரு சிதம்பரக் கல்லூரி
சேண்புகழ் ஓங்கியே வாழ்க!
மெஞ்ஞான இன்பம் மிகுஞான நிலையை
விஞ்ஞானந் தந்திட வாழ்க!
கல்வியே கண்ணெனும் நன்மகா வாக்கியம்
கற்பவர் நெஞ்சினை யள்ள
சிதம் பரப் பிள்ளை வள்ளல்
செயலரசு தையல் பாகர்
சேவா நிலையமே வாழ்க! மணிக்கொடி
வல்வை மாநகர் எடுத்தே
வான்புகழ் ஓங்கியே வாழ்க
வாழ்க வாழ்க வாழ்க!
சிதம்பரக் கல்லூரி வாழ்க — எங்கள்
சிதம்பரக் கல்லூரி வாழ்க!

வகுப்பறைகள்



ஆய்வு கூடங்கள்



B*MEENAKSHISUNDARAM
SIVAN KOVILADY
VALVETTITURAI

# பொருளடக்கம்.

சமர்ப்பணம் I

ஆசிச் செய்திகள்:

மேலதிக செயலாளர் - கல்விஅமைச்சு — இ. பாஸ்கரலிங்கம் II
வடமாநில கல்விப் பணிப்பாளர் — க. சிவநாதன் III
பருத்தித்துறை தேசிய பேரவை உறுப்பினர் — க. துரைரத்தினம் IV
வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தலைவர் — து. நவரத்தினம் V
யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் — சி. கந்தமூர்த்தி VI
பழைய அதிபர் — தை. அருள்சுந்தரம் VII
யா/சிதம்பரக் கல்லூரி பெற்றுர் ஆசிரியர் சங்க செயலாளர் — ச. சித்திரவேல் VIII
யா/சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை செயலாளர் IX
,, வல்வை கிளை செயலாளர் X

அதிபரின் அறிக்கை XI

பரிசில் பெறுவோர் விபரம் XVII

கட்டுரைகள்:

கல்வியும் இறை வழிபாடும் — பண்டிதர் சங்கர வைத்தியலிங்கன் 1
சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை - 12-ம் தரம் உயிரியல் விஞ்ஞானம் 4
அணுசக்தியின் சில பிரயோகங்கள் - 12-ம் தரம் ,, 7
மின்காந்த அலைகள் - 12-ம் தரம் கணித விஞ்ஞானம் 10
அன்பும் அறிவும் - 11-ம் தரம் உயிரியல் விஞ்ஞானம் 13
வெற்றிக்கு ஓர் எண்ணப் பாதை - 11-ம் தரம் கணித விஞ்ஞானம் 15
மனித சுதந்திரம் - தே. உ. க. த. ப. வகுப்பு முதலாம் வருடம் 19
நினையாத நெஞ்சு உண்டோ? உருகாத உள்ளம் உண்டோ? - தே. உ. க. த. ப. வகுப்பு முதலாம் வருடம் 20
பஞ்சாமிர்தம் - ,, 21
இக்கால விஞ்ஞானத்தின் வியப்புகள் ,, 22
பேயா? அது எங்கே? எனக்குக் காட்டுங்கள். ஆனுல் கடவுள் இருக்கின்றுன் - தே. உ. க. த. ப. வகுப்பு முதலாம் வருடம் 24
செய்திட்டத்தில் நமது பங்கு - ,, 26
பூமியை வெட்டிக் குடைகிறுர்கள்; பெற்றேலியம் எடுத்துக் குவிக்கிறுர்கள் - 10 C வகுப்பு 28
வெள்ளிக்கிழமை - 10 B வகுப்பு 31
பாசத்தின் முடிவு - தே. க. த. ப. வகுப்பு 34
மூலகங்களின் மகாநாடு - 8 A வகுப்பு 36
நான் கண்ட கனவு - 7 B வகுப்பு 37

| | | |
|---|---|---|
| தனக்கு வந்தாற் தெரியும் | - 6 வகுப்பு | 38 |
| Our Science Club | - H. N. C. E. 1stYear | 39 |
| Mahathma Gandhi | - H. N. C. E. Science | 40 |
| Facts about Our Body | - Grade 9 A | 41 |
| An Autobiography of a Manioc Plant | - Grade 8 A | 42 |
| Our School Library | - Grade 7 A | 43 |
| The Fisherman | - Grade 6 | 44 |
| Advice to Students | - Sidney Smith | 45 |
| எமது நூலகம் | — நூலக பொறுப்பாளர் | 46 |
| எமது சாரணத் துருப்பின் மைதானக் காட்சி | — ஆ. விஜயரஞ்சன் | 43 |
| தொழில் முன்னிலைப் பாடமும் எமது கல்லூரியும் | — கோ. சற்குணபாலன் | 50 |
| அறிக்கைகள்; | | |
| இந்து மாணவ மன்றம் | | 53 |
| க. பொ. த. உயர்தர மாணவர் மன்றம் | | 54 |
| தேசிய உயர் கல்விச் சான்றிதழ் வகுப்பு விஞ்ஞான மன்றம் | | 55 |
| மாணவர் முதல்வர் மன்றம் | | 57 |
| எங்கள் சாரணர் குழு | | 53 |
| விளையாட்டுத்துறை | — செ. யோகச்சந்திரன் | 60 |
| சிதம்பரப்பிள்ளை இல்லம் | | 61 |
| குமரகுரு இல்லம் | | 62 |
| இரங்கநாதன் இல்லம் | | 63 |
| சின்னத்தம்பி இல்லம் | | 64 |

# சமர்ப்பணம்

எமது கல்லூரி தொடங்கி எண்பது ஆண்டுகள் ஆகின்றன. சிறு சிறு கொட்டில்களாகத் தொடங்கிய எமது பாடசாலையை மாடமாளிகைகள் கொண்ட முதலாந் தரக் கல்லூரியாக உருவாக்குவதற்குப் பெருமுயற்சி செய்தவர் முன்னாள் முகாமையாளர் திரு. ஞா. தைரியல்பாகர் அவர்கள். அவருக்குப் பக்கத்துணையாயிருந்து கட்டிடங்கள் கட்டுவதற்குப் பெரும் பொருளீந்தவர்கள் வல்வைப் பெருமக்கள். இன்னும் பெற்றோர் ஆசிரியர் சங்கமும், பழைய மாணவர் சங்கங்களும் பெரும் பொருள் சேர்த்து எமது கல்லூரி வளர்ச்சிக்குப் பேருதவி செய்தவை. அச் சங்க உறுப்பினருக்கு எமது கல்லூரி என்றும் கடமைப் பட்டுள்ளது.

எங்கள் கல்லூரி வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா என்பவற்றுக்குரிய காலநிலை கழிந்து பல்லாண்டுகள் ஆகின்றன. இவ்வளவு காலமும் எமது கல்லூரி செய்த சேவை அளவிடற்கரியது. வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள். கணக்காளர்கள், அரசாங்க நிர்வாக சேவை உத்தியோகஸ்தர்கள். (C. A. S.), ஆசிரியர்கள், மற்றும் அரசாங்க உத்தியோகஸ்த்தர்கள் பலர் எமது கல்லூரியின் பழைய மாணவர்களாயிருப்பது கல்லூரி செய்த சேவைக்கு அறிகுறியாகும். பல்லாண்டு காலம் அருஞ் சேவையாற்றிய எமது கல்லூரி வளர்ச்சி பயன்பாடுகள் ஆகியவற்றை வெளியிடுவதற்கேற்ற சாதனமாக விளங்குவது இம்மலராகும். பல வருடங்களாக கல்லூரி மலர் வெளி வராதது வருந்துதற்குரியது. எனினும் இம்முறை வெளி வருவதற்குப் பெரிதும் முயன்றவர்கள் உயர்வகுப்பு மாணவர்கள். அவர்கள் சேர்த்து உதவிய நிதி உதவி கொண்டும், பெற்றோர் ஆசிரிய சங்கம் கொடுத்துதவிய நிதி உதவி கொண்டும் இம் மலர் வெளிவருகின்றது. அன்னார்க்கு எமது கல்லூரி பெரிதும் நன்றியறிதலுடையதாக இருக்கின்றது.

இம்மலர் வெளிவருவதற்கு ஆசிச்செய்தியனுப்பிய பெரியார்க்கும் விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்கட்கும் தமது கலைப்படைப்புகளைத் தந்துதவிய மாணவர்கள் பெரியோர்களுக்கும் இம்மலரை வெளியிடுவதற்குறுதுணை புரிந்த மற்றும் பெரியோர்களுக்கும் எமது கல்லூரி பெரிதும் கடமைப்பட்டுள்ளது, குறுகிய காலப்பகுதியில் சிறந்த முறையில் இம்மலரை அச்சிட்டுதவிய ஊழியன் அச்சகத்தார்க்கும் நன்றியறிதலுடையவர்களாக இருக்கின்றோம்.

இதழாசிரியர்

# மேலதிக செயலாளர் - கல்வி அமைச்சு

அவர்களின்

## ஆசியுரை

சிதம்பரக் கல்லூரிப் பரிசளிப்பு விழா நடைபெறவிருப்பதையும் அதனை யொட்டி மலர் ஒன்று வெளியிடப்படுவதையும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பரிசளிப்பு விழாவோடு புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட சித்திரகூடம் கடற்றொழிற் கூடம் நூல் நிலையம் ஆகியனவற்றின் திறப்பு வைபவமும் நடைபெறுவது மகிழ்ச்சி தருகின்றது.

எவ்வெப் பள்ளிக் கூடங்களில் நல்ல நூல்நிலையங்கள் அமைந்துள்ளனவோ அவ்வப் பளளிக்கூடங்களிலுள்ள மாணவர்கள் நல்ல கட்டுரைத் திறன், பேச்சுத் திறன் ஆகியன கைவரப் பெறுவது மட்டுமன்றி மிகுந்த பொது அறிவு படைத்தவர்களாகத் திகழ்வதையும் கண்ணூரக் கண்டு வருகின்றோம். சிதம்பரக் கல்லூரியும் இவற்றைக் கருத்திற் கொண்டு நல்ல நூல் நிலையம் ஒன்றை அமைத்துள்ளமை பாராட்டுக்குரியது.

அண்மைக் காலத்தில் நாம் ஏற்படுத்திய கல்விச் சீர்திருத்தத்திலே முக்கிய இடமளிக்கப்பட்டுள்ள தொழில் முன்னிலைக் கல்வி, செயல் திட்டம் ஆகியனவற்றிற்கு இயையவும் அவை நன்கு செயற்படுவதற்கு அனுசரணையாகவும் கடற்றொழில் கூடமொன்றினை அமைத்துள்ளமையையும் பாராட்டுகின்றேன்.

பரிசளிப்பு விழா இனிது நிறைவேற வேண்டுமெனவும் இக்கல்லூரி பல துறைகளிலும் விருத்தியடைந்து நாட்டுக்கு நல்லன செய்ய வல்ல நற்பிரசைகளை மேன்மேலும் உருவாக்க வேண்டுமெனவும் மனமார விழைகின்றேன்.

இ. பாஸ்கரலிங்கம்

வடமாநில

# கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

யா/வல்வை சிதம்பராக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத நூல் நிலையம், சித்திரகூடம். கடற்றெழில் கூடம் ஆகிய புதிய நிலையங்களின் திறப்பு விழாவும், பெற்றேர், ஆசிரியர், மாணவர் ஆகிய முத்திறத்தாரின் பெருமகிழ்ச்சிக்குரிய பரிசளிப்பு விழாவும் ஒருங்கு சேரும்போது அரிதின் முயன்று பெற்ற பேறுகளையெல்லாம் வரலாற்று முறையில் பொறித்து வெளிக்காட்டும் ஒரு சிறந்த கல்லூரி மலரையும் வெளியிட்டு மகிழ்தல் போற்றப்பட வேண்டும், அம் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிப் பெருமிதத்துடன் வெளிக் கொணரும் உங்கள் நறு மலருக்கு எனது மனமுவந்த நல் வாழ்த்துக்கள் உரியன.

க. சிவநாதன்

பருத்தித்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் அவர்களின்

# ஆசிர் செய்தி.

சிதம்பரக் கல்லூரி பெருந்தகை சிதம்பரப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, காலத்தால் வளர்ந்து, இன்று இவ்வூருக்கு நிழல்தரு மரமாக இருந்து வருகிறது. ஊரில் உயர் கல்விக் கூடம் இல்லாமையினாலும், வறுமையினால் சிதம்பரப்பிள்ளை அவர்கள் இங்கிருந்து பருத்தித்துறைக்கு நடந்து சென்று படித்துப் பெரியவரானார். தான் அடைந்த கஷ்டத்தை பின் சந்ததியினரும் அனுபவிக்கக் கூடாதென்பதற்காகவே இக் கல்லூரியை கட்டியெழுப்பினார். இன்று கல்லூரி படிப்பு, விளையாட்டு, சாரணீயம் முதலான பல் துறைகளிலும் ஓங்கி வளர்ந்து வருகிறது. ஊரினில் உயர் கல்விக்குரிய ஓரே பாடசாலையான இக் கல்லூரியை கட்டிக்காப்பது நமது கடனாகும், இதில் ஆசிரியர், பெற்றோர், ஊரவர்கள் அனைவருக்கும் பங்குண்டு. ஒவ்வொருவரும் தம் பங்கினைச் செய்யாவிடத்து எதிர்காலத்தில் கவலைப்பட நேரிடும். வல்லை மாதா, ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்வார்களென எதிர்பார்க்கிறாள்.

கல்லூரி பேரும் புகழும் பெற்று ஓங்க எம்பிரானை இறைஞ்சுகின்றேன்.

க. துரைரத்தினம்

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தலைவர் அவர்களின்

# ஆசியுரை.

நாட்டின் பெருமைக்கும், அறிவுவளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் அடித்தளமாக இருந்து இயங்கி பெரும் மனிதர்களை உருவாக்க உதவுவது கல்லூரிகளே. அவ்வாறு வல்வெட்டித்துறை மக்களின் அறிவுவளர்ச்சிக்கும், ஆற்றல்வளர்ச்சிக்கும், உறுதுணையாக இருந்து பெரும் தொகையான அரசாங்க ஊழியர்களையும், உயர் கல்வி பெற்ற அறிவாளிகளையும், சிறந்த தேச, இன, மதப்பற்றுள்ள சேவையாளர்களையும் உருவாக்கி அளித்த பெருமை சிதம்பரக் கல்லூரிக்கே உரியதாகும்.

அரை நூற்றாண்டுகளுக்கு முன் பெரியார் சிதம்பரப்பிள்ளை அவர்கள் எல்லோரும் ஆங்கில அறிவு பெற்று சிறந்த ஊழியர்களாக இன்புற்றிருக்க வேண்டுமென்ற நன்நோக்கோடு ஆரம்பித்த இக்கல்லூரியை, அவர் வழிவந்த திரு. தையல்பாகர் அவர்கள் மிகப் பெரிதாக வளர்த்து பயன் கிடைக்கும் நிலையமாக்கியதையும், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை கல்லூரியில் சிறந்த தொண்டாற்றியவர்களையும் வல்வை மக்கள் என்றும் போற்றக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இப்பெருமைக்குரிய கல்லூரியின் விழாமலருக்கு நகரசபைத் தலைவர் என்ற முறையில் வாழ்த்துச் செய்தி எழுதக் கிடைத்த பெரும்பேற்றை நினைந்து மிகமிக மனமகிழ்வடைகிறேன். இந்நிலையம் பல நூற்றாண்டு நிலைத்து நின்று, காலமாற்றங்களுக்கேற்ப தேவைகளைப் பூர்த்திசெய்து மென்மேலும் உயர்ந்து, தமிழ் இனம் வளர, சைவமதம் வளர, நாடு உயரச் சிறந்த தொண்டாற்றத்தக்க வலிமையையும், வளத்தையும் எல்லாம் வல்ல சுந்தரப்பெருமான் அருள வேண்டுகிறேன்.

து. நவரத்தினம்

## யாழ் மாவட்ட சாரண ஆணையாளரின்

# ஆசிச் செய்தி.

**பல** ஆண்டுகளின் பின் வெளிவரும் 'சிதம்பரா' மலருக்கு என் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் அனுப்புவதில் அகமகிழ்வடைகிறேன். கடந்த சில ஆண்டுகளாக இக்கல்லூரியின் வளர்ச்சி எல்லோரையும் கவரக்கூடியதாக் அமைந்துள்ளது. இவ்வேளையில் கல்லூரியின் அயலவரும் பழைய மாணவருமான திரு. கோ. செல்வவிநாயகம் அவர்கள் அதிபராக இருப்பது பாடசாலையின் வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாகும். அவர் ஒரு செயல் வீரன். அவருடைய காலத்தில் சித்திரகூடம், கடற்றொழில்கூடம், நூல்நிலையம் ஆகியன திறந்துவைக்கபடவுள்ளதே இதற்குச் சான்ருகும். இவற்றினுல் இப்பகுதி மாணவர்கள் நன்மை பெறுவார்கள் என்பதில் ஐயம் இல்லை. விசேஷமாக நவீன கல்வி முறையில் அமைந்த கடற்றொழில் கூடம் வல்வெட்டித்துறை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

மேலும் யாழ்மாவட்ட சாரண ஆணையாளர் என்ற வகையில் இக்கல்லூரியின் சாரண சேவைகளைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1942ம் ஆண்டு சிதம்பரக் கல்லூரியில் அப்போது ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. S. R. அரியரத்தினத்தின் தலைமையில் சாரண இயக்கம் முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டது. நண்பர் அரியரத்தினத்தின் நல்லெண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து யாழ் நாட்டில் மாத்திரம் அல்லாது இலங்கையிலேயே முன்னணியில் நிற்பது பெருமைப்படக் கூடியதாகும். இச்சந்தர்ப்பத்தில் இக் கல்லூரிச் சாரணக் குழுவின் சாதனைகள் சிலவற்றை குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதாகும். சிதம்பரக் கல்லூரி சாரணக் குழு யாழ் மாவட்ட வருடாந்த விழாக்களில் பலதடவைகளில் முதல் இடத்தைப் பெற்று ரொட்டறிக் கேடயத்தை தட்டிக் கொண்டதோடு நில்லாமல் 1969ம், 1970ம், 1971ம் ஆண்டுகளில் தொடர்ந்து அகில இலங்கையிலும் சிறந்த குழுவுக்கான 'சேர் அன்ரூ கால்டிகொட்' விருதைப் பெற்ற பெருமை யாழ் மாவட்டத்திற்கும் குறிப்பாக வல்வெட்டித்துறைக்கும் உரியதாகும். அத்துடன் 1965ம், 1968ம், 1970ம் ஆண்டுகளில் அகில இலங்கையிலுமே ஆகக்கூடிய ராணிச் சாரணர்களை உருவாக்கி அதற்கான கொடியையும் பெற்ற பெருமையும் சிதம்பராவுக்கும் உரியதாகும், இவ்வாறு இக் கல்லூரியின் சாரணிய வளர்ச்சிக்கு முன்நின்று உழைத்த முன்னை நாள் அதிபர்கள், சாரண ஆசிரியர்கள் ஆகியோர் ஆற்றிய சேவையை நினைவு கூர்வதுடன் இப்போது அரும்பாடுபட்டு உழைக்கும் அதிபர், சாரணத் தலைவர்கள் ஆகியோருக்கும் எமது நல்லாசியை வழங்குவோமாக.

தற்போதைய அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் அவர்கள் யாழ் மாவட்ட சாரண உதவி ஆணையாளராக சாரணியப் பயிற்சிக்கு பொறுப்பாய் இருப்பதுடன் வடமராட்சிப் பகுதிக்கும் பொறுப்பாய் இருந்து திறம்படச் செயலாற்றி வருகிறுர். அவருடைய தலைமையில் இக்கல்லூரி சாரணியத்தைப் போன்று சகல துறைகளிலும் முன்னேற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானுக,

வாழ்க சிதம்பரா! வளர்க சாரணியம்!!

சி. கந்தமூர்த்தி

# பழைய அதிபர் அவர்களின்

# ஆசியுரை.

காலச் சக்கரத்தின் சுழற்சியில், சிதம்பரக் கல்லூரியும் எண்பது ஆண்டு இதழ்களை கலைமகள் வாழ கமலமலரென, விரிந்து கல்வி மணம் பரப்பி நிற்கும் இவ்வேளையில், கல்லூரியில் எத்தனையெத்தனை மாற்றங்கள். போதனா முறைகளில் புதுமையும் கட்டிட அமைப்பில் வளர்ச்சியும் நடந்து கொண்டே இருக்கின்றது.

இவ்வாண்டு கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் சிறப்பு அம்சமாக கல்லூரி மலர் ஒன்றினை பாடசாலைப் பொறுப்பாளர்கள் வெளியிட உத்தேசித்துள்ளது மிகப் பொருத்தமே. எங்கள் சிதம்பரக் கல்லூரி மலர் மலரப் போவதை அறிந்த நான், ஒரு தாய் தன் சேயின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் கொள்ளும் உவகையை அடைகிறேன். கல்லூரியின் பழைய மாணவன், பல காலம் அதில் ஆசிரியர், பின் சில காலம் அதிபர் என்றும் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் கல்லூரியின் சேவையில் கழித்திருக்கிறேன். அதன் காரணமாக கல்லூரியின் உயர்வைக் கண்டு பெருமிதமும், கல்லூரிக்கு இடுக்கண் நேரும் காலத்தில் துன்பமும் அடைவது இயற்கையே. இவ்வாண்டு மலர், தொடர்ந்து வரப்போகும் ஆண்டுகள் தோறும் மலர வேண்டும் என்பதே என் ஆவல்.

காலத்திற்கேற்ப மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டிப்பாடங்களை கற்பிக்க வசதியாக ஒரு கடல்தொழில் கூடம், சித்திரகூடம், நூல்நிலையம் ஆக்கியிருப்பது கல்லூரிப் பொறுப்பாளரின் பெருமையன்றோ.

இன்று கல்லூரியில் பயின்ற மாணவர்கள் ஆயிரக் கணக்கில், எங்கும் பரவி பல பல துறைகளிலும் பணி புரிகிறார்கள். பலர் உயர் பதவிகளிலும், இன்னும் சிலர் கடல் கடந்தும் கல்லூரியின் புகழ் பரவ உதவுகிறார்கள்.

எங்கள் சிதம்பரக் கல்லூரி வரப்போகும் காலத்தில் வானளாவ உயர்ந்து வல்வை வாழ் மக்களுக்கும் அவர்கள் சந்ததியார்க்கும், உயர்ந்த அறிவையும், அதன் மூலம் நிறைந்த வாழ்வையும் தர, ஆயகலைகள் அறுபத்துநான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை அருளுவாளாக.

வணக்கம்

தை. அருள்சுந்தரம்

# யா/சிதம்பரக்கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளரின் ஆசிச் செய்தி.

யா/சிதம்பராக் கல்லூரி, அதன் 1977ம் ஆண்டு பரிசளிப்பு விழாவின்போது, கல்லூரி மலர் ஒன்றையும் வெளியிட இருப்பதாக அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சகல சிறப்புக்களையும் கொண்ட வல்வை நகரில் சிறந்த பாடசாலை ஒன்று தேவை என்பதை உணர்ந்து, சிதம்பராக் கல்லூரியை 80 ஆண்டுகட்கு முன்பு உருவாக்கித்தந்தவர் வள்ளல் சிதம்பரப்பிள்ளை அவர்களே. பின்பு அவரின் உறவினரான திரு. ஞா. தையல்பாகர் அப்பாடசாலையை சீரும் சிறப்புமாக பராபரித்து வந்து எங்கட்குத் தந்துள்ளார்.


இப்பாடசாலையின் வழியாக வெளியுலகிற்கு வந்துள்ள ஆயிரக்கணக்கானோர் இன்று இலங்கையில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் சிறப்போடும் மதிப்போடும் வாழ்கிறார்கள். இக்கல்லூரியின் தரம் என்றும் குறையாமல், இன்னும் சிறப்புறச்செய்வது எங்கள் கடமை. இக்கல்லூரி அபிவிருத்தி அடைந்தால்தான், இவ்வூர் அபிவிருத்தி அடைய முடியும். அப்பொழுதுதான், இவ்வூர் மக்கள் செழிப்பு அடைய முடியும்.

ஒரு கல்லூரி திறம்பட இயங்க வேண்டுமென்றால், அக்கல்லூரிக்கும், பெற்றோருக்குமிடையிலான உறவு பலப்படுத்தப்பட்டு. சுமூகமாக இருக்கவேண்டும். இந்த முறையில் இன்றைய பெற்றோர் ஆசிரியர் சங்கம் மிகவும் சிறப்பாகவும், திறமையாகவும் இயங்கி வருகின்றது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இக்கல்லூரிக்கு அவ்வப்போது ஏற்பட இருந்த இன்னல்களை எதிர்த்து நிற்பதிலும், இதன் அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருப்பதிலும் ஒத்துழைத்த பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கட்கும் சகல அங்கத்தினர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக் கல்லூரியின் முன்னேற்றத்திற்காக, இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் சில இருக்கின்றன. முக்கியமாக நாம் இழந்துவிட்ட விளையாட்டு மைதானத்தை மீண்டும் பெறவேண்டும் இம் முயற்சியில் இவ்வூர் மக்கள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோருவதோடு, இக்கல்லூரி பழமையின் சிறப்பும் புதுமையின் பொலிவும் கலந்து ஓங்கி வளரவேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்.

கடைசியாக இக்கல்லூரி முன்னேற்றத்திற்காக பெற்றோர் ஆசிரியர் சங்கம் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தங்களுடைய ஒத்துழைப்பை நல்கிய வடமாநில கல்வித் திணைக்களத்தாருக்கும், கல்வி அமைச்சிற்கும் எங்கள் நன்றி.

ச. சித்திரவேல்


# பெற்றூர் ஆசிரியர் சங்கம்



நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): செ. யோகச்சந்திரன், வ. இராமச்சந்திரன் இ. தனபாலசிங்கம் சி. குமாரசாமி.

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): வீ. அமிர்தேஸ்வரராசா, ச. சித்திரவேல் (செயலாளர்), கோ. செல்வவிநாயகம் (தலைவர்), தை. செல்வகுரு, கோ. சற்குணபாலன் (பொருளாளர்), பொ. பாலசுப்பிரமணியம்பிள்ளை

## ஆசிரியர் குழு



நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): பொ. கிருஷ்ணபிள்ளை, சி. துரைராசசிங்கம், சு. பழனிவடிவேல், செ. யோகச்சந்திரன், நா. சுவாமிநாதன், வ. பூபாலசுந்தரம், து. மயூரநாதன், செ. கந்தசாமி, கு. அப்பாத்துரை, தை. சு. சிவா, வி. யோசராசா

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): திருமதி எஷ். சண்முகலிங்கம், யோ. ந. பொன்னையா, சோ. செல்வவிநாயகம், போ. பாலசுப்பிரமணியம், கோ. செல்வவிநாயகம் (அதிபர்), வ. சதாசிவம், க. பகவத்சிங்கம் (உபஅதிபர்), கோ. குழந்தைவேலு, செல்வி தி. இராமச்சந்திரன்

# யாழ் சிதம்பரக்கல்லூரி பழைய மாணவர் சங்க

## கொழும்புக் கிளையின்

# ஆசிச் செய்தி.

கல்லூரி வாழ்க்கையிலே மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் ஒன்று அதன் பரிசளிப்பு விழாவாகும். இந்நன்னாளில் இச்சிறு செய்தி மூலம் கல்லூரியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைக்கும் அனைவரையும் நாம் பாராட்டுகிறோம். அண்மைக் காலத்தில் கல்லூரி மாணவர்களால் கிடைத்த சித்திகள் நம்மனை வரையும் பெருமிதம் கொள்ள வைக்கிறது. மென்மேலும் கல்லூரியின் புகழை எங்கும் பரப்பவிருக்கும் மாணவர்கட்கும் அவர்களை ஆக்கித்தரும் ஆசிரியர்கட்கும் இவர்கட்கு ஊக்கம் தரும் அனைவருக்கும் எமது சங்கம் நன்றிகளைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றது. இந்நிகழ்ச்சியில் எமது சங்கத்துக்கும் தனது ஆசிச் செய்தியை அளிக்க சிறு இடம் கொடுத்த மலர் வெளியீட்டுக் குழுவிற்கு சங்கத்தின் சார்பில் எனது அன்பு கலந்த நன்றிகள்.

செயலாளர்

# யா/சிதம்பரக்கல்லூரி பழைய மாணவ சங்க
## வல்வெட்டித்துறைக் கிளையின்
## ஆசிச் செய்தி.

பல வருடங்களின் பின்னர் எமது கல்லூரி பரிசளிப்பு விழா வொன்றினை நடாத்துவதனையும் மலர் ஒன்றினை வெளியிடுவதனை யும் குறித்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்விக் கூடமொன்றின் வளர்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் வகிக்கும் பங்கு பாரியது! இதற்கு எமது கல்லூரிப் பெற் றோர் ஆசிரியர் சங்கமும் விதிவிலக்கல்ல. பெற்றோரின் பூரண ஆத ரவின்றி எந்தவொரு கல்விக் கூடமும் திருப்திகரமான வகையில் சேவையாற்ற முடியாது.

ஆங்கிலப் பாடசாலை என அந்தநாளில் போற்றப்பட்டு சிறந்த கல்விமான்கள் பலரை உருவாக்கித்தந்த இக்கல்லூரி இன்று போதிய ஆசிரியர்கள் இடவசதி சிறந்த ஆய்வுகூடங்கள் நூல்நிலையம் போன்ற இதர வசதிகளும் ஒருங்கமையப் பெற்ற நிலையில் மாணவர் தொகையில் மட்டும் குறைவுபட்டு நம்மொவ் வொருவரையும் சிந்திக்கத் தூண்டுகிறது. எத்தனையோ ஏழை மாணவர்கட்கு இக்கல்லூரி உயர்கல்வி வழங்கி வந்தமையும் வருவ தும் ஏன் வரப்போவதும் பிரத்தியட்சமான உண்மை. இத்தகைய கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டியது நம்மொவ்வொருவரினதும் கடமை.

இந்நிலையில் அண்மையில் வல்வை இளைஞர்களும் படிப்பகங்க ளும் இணைந்து மேற்கொண்ட முயற்சி பாராட்டிற்குரியது. இதற் குத் தம் பூரண ஒத்துழைப்பை நல்கி வரும் பெற்றோர் ஆசிரிய சங்கமும் ஏனையோரும் பாராட்டிற்குரியவர்களே!

இவர்கள் முயற்சி தடங்கலின்றி நிறைவெய்த கல்லூரி வல் வைச் சிறார்கட்கு குறிப்பாக ஏழைச் சிறார்கட்கு உயர்கல்வி வழங் கித் தன் அளப்பரிய சேவையைத் தொடரவும் இம்மலர் இனிது மணங்கமழவும் வல்வைப் பழைய மாணவ சங்கத்தின் இதய பூர்வ மான நல்வாழ்த்துக்கள்.

செயலாளர்

# அதிபரின் அறிக்கை.

**மதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே!**
**அன்புமிக்க பெற்றோர்களே! சகோதர சகோதரிகளே!!**
**மாணவ மாணவிகளே!**

இன்று தங்கள் முன் இக் கல்லூரி அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அறிவு புகட்டி ஆற்றலூட்டி நம்மை ஆளாக்கி இக் கல்லூரினைய வல்வையிலும் வளைந்துள்ள பகுதியிலும் வாழும் மக்கள் பெருமையுடன் அழைக்கும் 'எங்கள் சிதம்பரா' இன்று எண்பது ஆண்டுகள் வளர்ந்து கமல மலரென இதழ் விரித்து உயர்ச்சியும் தேர்ச்சியுமுற்று மிளிர்வதை பாராட்ட வந்துள்ள பேரறிஞர் வரிசை கண்டு பெருமிதம் கொள்கிறோம். உங்கள் யாவரையும் இன்று வரவேற்பதில் பெருமகிழ்ச்சியுமடைகிறோம்.

புதிய கல்வி முறையில் கலை, விஞ்ஞானம் என்ற பிரிவுகளின்றி வளர்ந்துவிட்ட அறிவியற் கலைகளின் பரந்த அறிவும் விரிந்த நோக்கும் சிறந்த ஒருங்கிணைந்த பாட நெறியிற் புகுத்தப்பட்டு நம் நாட்டுப் பொருளாதாரம் வளம் பெற விவசாயம் விருத்தியடைய உத்தியோகக் கவர்ச்சி குறைக்கப்பட்டு மாணவர் ஒவ்வொருவரும் ஏதோ இரு தொழிலைப் பற்றிய முன்னறிவுடையவர்களாக கல்விக் கூடங்களை விட்டு வெளிவருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில் எல்லாக் கல்விக் கூடங்களிலும் அவை எங்கிருந்தாலும் ஒரே பாடங்கள் ஒரு பொதுப் பாட நெறிக்கமைய போதிக்கப்படுகிறது. இவ்வுணர்வு எங்கள் பெற்றோர்களிடையே பெருகி வருகிறது, உயர் கல்விக்காக வேறு கல்லூரிகளை நாடும் முறையும் அருகிவிட்டது.

ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்குவது ஆய்கூடம், நூல் நிலையம் விளையாட்டு மைதானம் ஆகும்.

புதிய கல்வித் திட்டத்தில் ஆய்கூடங்களின் பணி மிக முக்கியமானது. பரந்து வளர்ந்து பல கலைகளை உள்ளடக்கிய பாட நெறி; இப் பழுவை மாணவர்கள் சுமக்க முடியாதென பெற்றோருக்கும் ஆசிரியர்க்கும் மலைப்பு; இந்நிலையில் புதிய கல்வித் திட்டத்தை செயற் திட்டத்தை செயற்படுத்துவதற்கு கல்வியூட்டும் முறையை மாற்றுவதே ஒரே வழியாகும். செல்வத்திற்கெல்லாம் தலையாயது செவி வழி புகுந்து சிந்தைக்கு விருந்தளிக்கும் கேள்விச் செல்வமே எனினும் இதனுடன் மாணவனின் உள்ளார்ந்த

ஆற்றல்களைத் தூண்ட இயல்பூக்கங்களை விருத்தி செய்யக்கூடிய செய்முறை அறிவு இணைய வேண்டும்.

முன் உயர் வகுப்புகளில் அறிமுறைக் கல்வியும் செய்முறைக் கல்வியும் பிரித்து வேறான பாடநேரங்களில் கற்பிக்கப்பட்டது. இதனால் இரண்டுக்குமிடையே போதிய இணைப்பு ஏற்படவில்லை. உ. தே. க. த. ப. வகுப்புகளில் அறிமுறைக் கல்வியும் செய் முறைக் கல்வியும் இணைக்கப்பட்டுள்ளது. நாம் விஞ்ஞானமும் விஞ்ஞானிகளும் வளர்ந்த முறையை மறந்து அவற்றின் விளைவை - அறிமுறைக் - கல்வியைப் பேச்சாலும் எழுத்தாலுமே போதிக்காது செய்முறைக் கல்வி மூலம் பரிசோதனைகள் வாயிலாக மாணவர் மனதில் எண்ணக் கருத்துக்களை உதிக்கச் செய்த அறிவியலை வளர்க்க முற்பட வேண்டும். இப் பணிக்கு மின், நீர், எரிவாயு போன்ற வசதிகளுடன் சிறந்த முறையில் நிர்மானிக்கப் பட்ட ஆய்கூடங்கள் பேருதவியாயிருக்கும். சிறந்த ஆய்கூடங்கள் சிதம்பராவின் சிறப்பியல்பு. பண்புள்ள பழைய மாணவரின் அன்புக் காணிக்கையின் பயன்தரு சின்னங்கள்.

கல்லூரி நூலகத்தில் பல்லாண்டு காலம் பேணி வளர்த்த இவ்வறிவுக் கருவூலங்கள் சிறப்பாக மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் பயன்தரக் கூடிய வகையில் உடன் உதவும் பகுதியை இருமருங்கிலும் கொண்டதாகவும் 100 மாணவர் வரை வசதியாக வாசிக்கக் கூடியதாகவும் 80X20 அடி பரிமாணங் கொண்ட மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நூலகராகப் பணி புரியும் திரு. கு. அப்பாத்துரை அவர்களின் சேவை குறிப்பிடத் தக்கது.

நவீன கல்வித் திட்டத்தின் ஆழமும், அகலமும் விரிவடைந்தமை குறிப்பிட்ட தனிநூலினை மட்டும் பாடப்புத்தகமாகக் கொள்ளும் முறை மாறி மாணவனுடைய ஆளுமையையும் இயல்பூக்கங்களையும் வளர்த்து, பல நூல்களின் பின்னணியில் அறிவைத் தேட முற்படும் ஆய்வு மனப்பாங்கை விருத்தியடையச் செய்ய நூலகங்கள் பெரிதும் உதவும்.

விளையாட்டுத் திடல் - அரசாங்கம் கல்லூரியை 15-12-1961 இல் சுவீகரித்தது தொடர்ந்து விளையாட்டுத் திடலும் 1-7-62 இல் சுவீகரிக்கப்பட்டது. ஆனால் சிக்கல் ஒன்று எழுந்ததன் விளைவாக இன்றுவரை தீராத பிரச்சனையாக இது இருந்துவருகிறது.

கல்லூரியில் கற்பிக்கப்படும் தொழில் முன்னிலைப் பாடங்கள் சமூகத்தின் தேவை கலாச்சாரம் தொழில் முதலானவைகளுடன் இயைந்து அமைந்துள்ளன. மரவேலையும் கடற்றொழிலும் 1972ம் ஆண்டிலிருந்து கற்பிக்கப்படுகின்றது. சிறந்த உபகரணங்களைக் கொண்ட மரவேலைக் கூடம் ஒன்று உண்டு, புதிய கடற்றொழில் ஆய்கூடம் ஏற்ற வசதிகளுடன் அமைந்துள்ளது. வளர்ந்துவரும் கல்லூரியில் மாணவரின் இயல்பூக்கங் களுக்கு ஏற்ப தொழில் முன்னிலைப் பாடத்தை தெரிந்தெடுக்கும் வாய்ப்பை அதிகரிக் கும் முகமாக வானொலிக்கலை மரவேலைக்கு மாற்றுப் பாடமாகவும், வர்த்தகம் கடற் றொழிலுக்கு மாற்றுப் பாடமாகவும் கற்பிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வர்த்தகத்தை இவ்வாண்டு கற்பிப்பதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. மாணவியருக்கு மனையியலும், புடவையும் உடை அமைத்தலும் தொழில் முன்னிலைப் பாடங்களாகக்

கற்பிக்கப்படுகின்றன. மனையியல் ஆய்கூடம் விசாலமான அறிமுறை செய்முறை பாடங்களை கற்பிப்பதற்கு வசதியான உபகரணங்களுடன் அமைந்துள்ளது. மேலும் நெருப்பிடம், கழுவுதொட்டி, சுவர் அலுமாரிகள் புதிதாக அமைக்கப்பட்டு நீர், மின் விநியோகங்களும் சீர்படுத்தப்பட்டுள்ளன. இப்பணி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரின் நன் முயற்சியால் செய்துமுடிக்கப்பட்டுள்ளது.

பெற்றூர் ஆசிரியர் சங்கத்தினர் வழுக்கி எறியம் ஒன்றை கல்லூரிக்கு அன்பளிப்பு செய்ததைத் தொடர்ந்து கட்புல செவிப்புல நவீன சாதனங்களைக் கொண்ட மண்டபம் ஒன்றை அமைத்துள்ளோம். சென்ற ஆண்டு வசதிப்பணத்திலிருந்து ஒரு ஒலிபெருக்கியை வாங்கியுள்ளோம். இன்னும் இதற்கு 16மி.மீ. படம் காட்டும் கருவி ஒன்றும் நாடாப் பெட்டி ஒன்றும் தேவைப்படுகிறது. இதைப் பெற்றுத்தருவதற்கு பழைய மாணவர் சிலர் முயற்சி எடுத்து வருகிறார்கள். இவர்களின் நன்முயற்சி விரைவில் பயனளிக்குமென நம்புகிறேன். இதனால் பிறநாடுகளில் அதிக பணச் செலவில் தயாரிக்கப்படும் பிரத்தியேகமான கல்வி சம்பந்தமான அறிவைப் பரப்ப தயாரிக்கப்படும் படங்களை எம் மாணவர்கள் கண்டு பயனடைய முடியும். ஒலிபரப்பப்படும் விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்களையும், கல்வி சம்பந்தமான பேச்சுக்களையும் விரும்பும் போது ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் கேட்டுப் பயனடைய வாய்ப்புண்டு. இத்தகைய நவீன சதனங்கள் கல்வி போதிப்பதில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தேசிய கல்விந் தராதரப் பத்திர வகுப்பில் கிடைத்த பெறுபேறுகள் பெற்றோரிடையே ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. 75ம் ஆண்டு தே. க. த. ப. தேர்வில் உயர்கல்விக்குத் தகைமைபெற்ற எல்லா மாணவர்களும் எங்கள் கல்லூரியிலேயே உயர் கல்வி பெறுகின்றனர். இது பெற்றோரும் மாணவர்களும், கல்லூரியிலும் ஆசிரியர்களிலும் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையின் பிரதிபலிப்பென்றே கூறவேண்டும்,

பெற்றூர் ஆசிரியர்சங்கம் கல்லூரியின் அபிவிருத்தியை முன்வைத்து மாணவர்களின் கல்வி நலன்கருதி ஆசிரியர் பெற்றோர்களிடையே நெருங்கிய நல்லெண்ணம் ஏற்பட, சிறந்த முறையில் இயங்கி வருகிறது! செயற்குழுவினரின் நன்முயற்சியினால் பல உதவிகள் கல்லூரிக்குக் கிடைத்துள்ளன.

ஓர் சிறந்த கட்புல சாதனமான வழுக்கி எறியம் ஒன்றையும் கொடுத்து, விளையாட்டுப் போட்டிகளின்போது பரிசில்களை வழங்க நிதி உதவியும் புதிய கட்டிடங்களைப் பொறுப்பேற்றுக் கட்டி முடித்தும், கல்லூரி மலர் வெளியீட்டிற்கு நிதிஉதவியும், இன்னும் பலவழிகளிலும் கல்வி வளம் செழிக்க நற்பணியாற்றி வருகின்றனர்,

கல்வி நிர்வாகத் துறையில் முதிர்ந்த அனுபவம் மிக்கவரும், செயலாளராகக் கடமையாற்றுபவருமான திரு. ச. சித்திரவேல் அவர்களின் சிறந்த பணியும், பொருளாளராகக் கடமையாற்றும் திரு, கோ, சற்குணபாலன் அவர்களின் அயராத உழைப்பும் குறிப்பிடத் தக்கது. இவர்கட்கும் ஏனைய செயற்குழு அங்கத்தவர்கட்கும் அன்பு கலந்த நன்றி கூறுவது சாலப் பொருத்தமாகும்.

கல்லூரியின் கடந்த காலத்தைக் கவனிக்கும்போது பழைய மாணவர் சங்கம் ஒவ்வொரு முக்கிய விழாவிலும் பங்கு கொண்டு, நிதியுதவி செய்து ஊக்குவித்தமை யாவரும் அறிந்ததே. இங்கு உயர்ந்து வளர்ந்து நிற்கும் மாடிக் கட்டிடங்களைக் கட்டித் தந்த பெருமை நன்றிமறவா நற்பணியார்வம் மிக்க இவர்கட்கே உரியதாகும். பழைய மாணவர் சங்கமானது கொழும்புக்கிளை, திருகோணமலைக்கிளை என வளர்ந்து சென்ற ஆண்டு வல்வைக்கிளை ஒன்றையும் இணைத்துள்ளது. திருகோணமலைக்கிளை மீண்டும் சிறப்பாக செயலாற்ற வேண்டும். வளரும் ஓர் கலாசாலைக்கு இவர்களின் பணி அயராது தொடரவேண்டும்.

கொழும்புக்கிளை தே. க. த. வகுப்பிற்குரிய உராத்துணை நூல்களை அன்பளிப்புச் செய்தும் உடற்றெழில் மதிப்பீட்டுக்கு உதவியாக ஒரு தராசை நல்கியும், வருடாந்த கூட்டத்தின்போது பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்கட்கும் திறமை, சீலம்மிக்க சாரணர்கட்கும், பரிசில்களை ஈந்தும் நம் சிறுர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வாழ ஊக்குவித்துள்ளனர். இவர்கட்கு எங்கள் உள்ளார்ந்த நன்றிகள். கல்லூரிப் பொருட்காட்சி வேளையின்போதும், கல்லூரி மலருக்காக நிதிசேகரிக்கும் பொருட்டும் நடாத்தப்பட்ட கலைவிழாவின் போதும் வல்வைக்கிளையினர் ஆற்றிய சேவை மறக்கமுடியாதது.

வளரும் ஓர் கல்விக் கூடத்தில் கட்டிடத் தேவைகளும் விரிவடைவதில் வியப்பில்லை. இன்று திறந்துவைக்கப்பட்டுள்ள கவின்கலைக் கூடம், கடற்றெழில் ஆய் கூடம் கல்வி போதிப்பதற்கு மாணவர்கட்கு உறுதுணையாகவிருக்கும். இன்னும் விளையாட்டுத்துறைக்கான அறையும் சாரணர் அறையும் விரிவுபடுத்தப்படவேண்டும். கழிப்பிடங்கள் வடிநீர் தடை அமைப்புடையவையாக மாற்றப்படவேண்டும். கல்லூரியின் தேவையை உணர்ந்து நிதி ஒதுக்கீட்டில் உதவிய எங்கள் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

கவின்கலைக்கூடம் உரிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் பொறுப்பாசிரியர் திரு. பொ. பாலசுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் கூடத்தை ஏற்ற முறையில் ஒழுங்குபடுத்தி சீராக்குவதில் பெரிதும் உழைத்துள்ளார். வழமையாக விளையாட்டுப் பிரிவுகளுடன் கிரிக்கெட்பிரிவும் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மிக உற்சாகமாக பல பிரிவுகளிலும் பங்குகொள்கின்றனர். பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் முதலிடம் பெற்று புகழ்தேடித்தந்த விளையாட்டு வீரருக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்கள். விளையாட்டுப் பொறுப்பாசிரியராக கடமைபுரியும் திரு. செ. யோகச்சந்திரன் அவர்கள் உற்சாகத்துடன் செயலாற்றி வருகிறுர். முன் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றிய திரு. க. தியாகராசா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சாரணகுருப்புக் கூட்டங்கள் வழமைபோல நடைபெற்று வருகின்றன. குழுச்சாரண தலைவராக திரு. கோ. குழந்தைவேல் அவர்

களும், சிரேஷ்ட சாரண தலைவராக திரு. கு. அப்பாத்துரை அவர்களும், கனிஷ்ட சாரண தலைவராக திரு. கோ. சற்குணபாலன் அவர்களும், சாரண தலைவராக திரு. து. சத்திவேல் அவர்களும் கடமையாற்றி வருகின்றனர். இவர்களின் பற்றுறுதியும் அயராத உழைப்பும் சாரண இயக்கத்திற்கு பெரிதும் உதவி வருகிறது. திரு. ந. சுவாமிநாதன், திரு. ஆ. தெய்வேந்திரன் ஆகியோர் சாரண தலைவருக்குரிய ஆரம்ப பயிற்சியை முடித்துள்ளனர். இவ்வியக்கத்தில் பல ஆண்டுகள் சாரண தலைவராக பல பொறுப்புக்களையும் ஏற்று செவ்வனே கடமையாற்றிவரும் திரு. கு. அப்பாத்துரை அவர்கட்கு தரு சின்ன விருது சென்ற ஆண்டு வழங்கப்பட்டமை பாராட்டுக்குரியது. சென்ற ஆண்டு மாவட்ட சாரண வைரவிழாவில் இரண்டாவது இடத்தினைப் பெற்றுக்கொண்ட சாரண துருப்பினருக்கு எனது பாராட்டுக்கள்.

சிரேஷ்ட ஆசிரியர் திரு. வே. சதாசிவம் அவர்களை ஆலோசகராகக்கொண்ட இந்து மன்றம் பணிகளைத் திட்டமிட்டு செவ்வனே செயற்பட்டு வருகிறது. குருபூசைகளையும் நவராத்திரி விழாக்களையும் மன்றம் சிறப்பாக கொண்டாடி வருகிறது. இம்மன்றம் சென்ற ஆண்டு சமய பேச்சுப் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்து நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. விவேகானந்தசபையினரால் நடாத்தப்பட்டுவரும் சமயப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். திரு. வே. சதாசிவம் அவர்கள் தலைமையில் பாடசாலையின் சமயப் பணிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

பல ஆண்டுகளாக இயங்கி வருகின்ற மாணவத் தலைவர் முறை கல்லூரி நிர்வாகத்தில் ஒரு வகையில் பங்குகொள்ளவும் மாணவர்களிடையே தலைமைதாங்கும் இயல்பு, பொறுப்பு மீறாமை, காலம் தவறாமை, செயற்றிறன் முதலிய குணநலன்களை வளர்க்கவும் பெரிதும் உதவியுள்ளது.

கல்லூரி நாட்களில் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளை காப்பது கல்விக்குரிய சூழலையும், கல்லூரி பாரம்பரியத்தையும் நிலைநாட்ட உதவுவது இவர்களின் முக்கிய பணியாகும். இக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் உயர்வகுப்பு மாணவர்களே. இவர்கட்கு ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் திரு. வே. சத்தியமூர்த்தி அவர்கள் கடமையாற்றினார். இவர் மாற்றலாகி இடைக்காடு மகா வித்தியாலயத்திற்கு சென்றுள்ளார். இவரின் சேவைக்கு எமது நன்றிகள். வாரம் தோறும் கல்லூரிப்பேரவை கூடும்போதும், பொது நிகழ்ச்சிகளின் போதும் இக்குழுவின் பணி முக்கியமானதாகும். இவர்களின் நற்பணிக்கு எங்கள் நன்றிகள்.

கல்லூரியின் ஒழுங்காட்சிக்கு 6...9 வரை திரு. செ. யோகச்சந்திரன் அவர்களும் உயர் வகுப்புகட்கு அதிபரும் பொறுப்பாக உள்ளனர். ஒழுங்காட்சிப் பொறுப்பாசிரியர்கள், வகுப்பாசிரியர்கள், மாணவ தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் அனைவரும் இணைந்து சிறப்பாக செயற்படுகின்றனர். இவர்கட்கு எனது நன்றிகள்,

கல்லூரி மலரினை வெளியிட வேண்டுமென உற்சாகமாக உழைத்தவர்கள் உயர் வகுப்பு மாணவர்களே. இதை வெளியிடுவதற்கு பணம் அதிக செலவாகுமென்பதால் உற்சாகமிழந்திருந்த நிலையில் கலைவிழா ஒன்றினை நடாத்தி அதன்மூலமும், பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியும் சேர்ந்து இம்மலரை வெளியிட உதவியுள்ளது, நிதி உதவிய பொது மக்களினதும், விளம்பரங்களின் பேரால் உதவிய வர்த்தகர்களினதும் ஆதரவில் இம்மலர் மலர்ந்திருக்கிறது.

ஆசிரியர்கள் அனைவரையும் அங்கத்தவர்களாகக் கொண்ட ஆசிரிய மன்றம் ஒன்று கல்லூரியில் இயங்கி வருகிறது. மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்களுக்கு பிரிவுபசார விழாக்கள் நடைபெற்று வருகின்றன. நற்பணியின் பொருட்டு நன்கொடைகளும் வழங்கி வருகிறது. உற்சாகமுள்ள செயற்குழுவினால் நிருவகிக்கப்படும் ஆசிரிய மன்றம், ஆசிரிய நலனை என்றும் பாதுகாத்து வருகிறது.

கல்லூரி கூட்டுறவுச் சங்கம் இவ்வாண்டு பொதுக் கூட்டத்துடன் மாணவர்கட்கு அதிக பிரதிநிதித்துவம் கொடுக்கும் புதிய அமைப்பிற் கேற்ப செயற்குழு தெரியப்பட்டு சீராக செயற்படுகிறது. பதினைந்துபேர் கொண்ட குழுவில் பத்து மாணவர்களும், இரண்டு ஆசிரியர்களும், பெற்றோர் ஆசிரிய சங்க பிரதிநிதிகள் மூன்றுபேரும் அங்கம் வகிக்கின்றனர். தொழில் முன்னிலைப் பாடங்களில் வர்த்தகம் போதிக்கப்படுவது மாணவர்கள் ஈடுபாட்டை மேலும் வளர்க்க உதவும்.

உயர்வகுப்பு மாணவ மன்றம் மாணவர்களிடையே பேச்சாற்றலை விருத்தி செய்து அவையடக்கத்தையும் ஒழுங்காட்சியையும் வளர்த்து வருகிறது. கருத்தொருமித்த கலந்துரையாடலுடன் வருடாந்த தேநீர் விருந்தை சிக்கனமுறையில் சிறப்பாக நடாத்த எல்லா ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

விஞ்ஞான மன்றத்தின் நோக்கம் விஞ்ஞான முறையை வளர்ப்பதே. மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வோர் கூட்டத்திலும் ஒவ்வோர் குழுவினர் ஒரு பிரச்சினையை செய்திட்ட முறைமூலம் ஆராய்ந்து, அறிக்கையை பரிசோதனை விபரங்களுடனும், சேகரிப்புப் பொருட்களுடனும் சமர்ப்பிக்கின்றனர். இதைத் தொடர்ந்த கலந்துரையாடலும் அடுத்துவரும் ஆய்வுக்கான திட்டமும் வகுக்கப்படுகிறது. இதில் எல்லா மாணவ மாணவியரும் பங்குகொண்டு வருகின்றனர்,

கல்வி எனும்போது அறிமுறைக் கல்வி, செய்முறைக் கல்வி, பழக்கவழக்கங்கள், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியன அடங்கும். கல்லூரி வளர்ச்சிக்குரிய பணிகட்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு உறுதிப்பாடும் செயல்வேகம் நிறைந்த தலைமைத் திறனும் எக்கல்லூரிக்கும் தேவையானதாகும். பெற்றோர் மாணவர் ஆகியோரின் நல்லெண்ணம் நாம் ஏற்படுத்தும் நம்பிக்கையினால் வலுப்பெற வேண்டும். இயக்காற்றலும் ஆர்வமும் மிகுந்த உரமும் ஊக்கமுமுள்ள இளைய சந்ததியினர், பற்றுறுதியும் அனுபவம் புத்திக்கூர்மையும் உடையவர்களுமான மூத்தவர்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும். கல்வி சிறக்க ஒழுக்கம் தளைக்க இதழ் சிரித்தாற்போதாது. இதயமும் சிரிக்க வேண்டும். முகம் மலர்ந்தாற் போதாது அகமும் மலர வேண்டும்.

கல்லூரி நிர்வாகத்தில் உதவியாகவிருக்கும் உபஅதிபர் திரு க. பகவத்சிங்கம் அவர்கட்கும். ஏனைய ஆசிரிய ஆசிரியைகட்கும், மற்றும் ஆசிரியரல்லாத அலுவர்கட்கும் மனமார்ந்த நன்றிகள்.

9ம் 10ம் வகுப்பு மாணவர்கட்கு தனிமுறைப் போதனை வகுப்புகளையும், மீட்டல் வகுப்புகளையும் ஒழுங்குசெய்து சிறப்பாக நடத்திவரும் பழைய மாணவர்கட்கும், இதனை ஊக்குவித்த பெ, ஆ. சங்கத்தினர்க்கும் எனது பாராட்டுகளும் உளமார்ந்த நன்றிகளும். கைமாறு கருதாமல் அரும்பணியாற்றும் இவர்கட்கு மாணவர்களும் பெற்றோர்களும் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.

வடமாநில கல்வியதிபதி, பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி, விஞ்ஞானக் கல்வி அதிகாரி, மற்றும் கல்வித் திணைக்களக அலுவலர் யாவருக்கும் கல்லூரி நிருவாகம் சிறக்க தந்த ஒத்துழைப்பிற்கு எனது நன்றி உரித்தாகுக.

கல்லூரி மலரை உரிய நேரத்தில் சீரிய முறையில் சிறப்பாக வெளியிட உதவிய ஊழியன் அச்சக ஸ்தாபனத்தாருக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

கோ. செல்வவிநாயகம்
அதிபர்

## பரிசில் பெறுவோர் விபரம்.

| பரிசு பெறுவோர் | | பரிசு பெறும் துறை |
|---|---|---|
| செ. மனோகரன் | 7 A | பொதுத் தகமைகள் |
| கு. சுரேந்திரன் | 8 B | பொதுத் தகமைகள் |
| ஆ. இராஜ்குமார் | 9 A | பொதுத் தகமைகள் |
| ச. விஜயவேல் | 7 A | முதல் மொழி, இரண்டாம் மொழி |
| செ. மனோகரன் | 7 A | சமயம், உடற்கல்வி, கணிதம் விஞ்ஞானம், தொ. மு. பாடம், வரைதல் |
| தி. கிருஷ்ணகுமார் | 7 B | சமூகக் கல்வி |
| சி சிறீலக்ஷ்மி | 8 A | முதல் மொழி |
| கு. சுரேந்திரன் | 8 B | இரண்டாம் மொழி, சமூகக் கல்வி சுகாதாரம், உடற்கல்வி |
| P. கிருஷ்ணகுமார் | 8 A | கணிதம் |
| K. குலோத்துங்கன | 8 A | விஞ்ஞானம் |
| K. ஈஸ்வரராசா | 8 B | தொ. மு. பாடம். சமயம். வரைதல் |

| | | |
|---|---|---|
| க. சிவகுமாரன் | 9 B | முதல் மொழி |
| சி. சிவகுமாரன் | 9 B | இரண்டாம் மொழி |
| செ. சிவகுமாரன் | 9 A | கணிதம், விஞ்ஞானம், வரைதல் |
| செ. சற்குணராஜன் | 9 A | சமூகவியல், தொ. மு. பாடம் |
| ஆ. இராஜ்குமார் | 9 A | சமயம் |
| இ. வரதராஜ் | H.N.C.E. I | N,C.G.E. திறமை சித்தி |
| ஆ. இராஜ்குமார் | 9 A | சாரணியம் |
| செ. சிவகுமாரன் | 9 A | சாரணியம் |
| செ. இரவீந்திரன் | H.N.C.E. I | சாரணியம் |
| ஆ. விஜயரஞ்சன் | H.N.C.E. II | சாரணியம் |
| இ. குகதாஸ் | H.N.C.E. II | சாரணியம் |
| V. வேணி | 7 A | ஆங்கிலப்பா ஓதல் |
| ஆ. அமுதராஜனி | 7 A | ஆங்கிலப்பா ஓதல் |
| கு. சுரேந்திரன் | 8 B | ஆங்கிலப்பா ஓதல் |
| கா. ராஜவேல் | 8 B | ஆங்கிலப்பா ஓதல் |
| செ. சற்குணராஜன் | 9 A | ஆங்கிலப்பா ஓதல் |
| சி. குகதாஸ் | 9 A | ஆங்கிலப்பா ஓதல் |
| இ. முரளீதரன் | 12 Sc | காற்பந்து விருது |
| வே, இராதாகிருஷ்ணா | 12 Sc | காற்பந்து விருது |
| ந. ரவீந்திரன் | 12 Sc | காற்பந்து விருது |
| நா. மோகன் | 11 Sc | காற்பந்து விருது |

## சமய பேச்சுப்போட்டி

| | | | |
|---|---|---|---|
| தி. முரளீதரன் | 12 Sc | மேற்பிரிவு | 1-ம் இடம் |
| S. சண்முகநாதன் | 10 Sc | மத்திய பிரிவு | 1-ம் இடம் |
| K. சுரேந்திரன் | 7 A | கீழ்ப் பிரிவு | 1-ம் இடம் |
| N. பத்மாசினி | 8 A | மத்திய பிரிவு | 1-ம் இடம் |
| V. வேணி | 6 A | கீழ்ப் பிரிவு | 1-ம் இடம் |

## மெய்வல்லுனர் போட்டியில் விருது பெறுபவர்

| | |
|---|---|
| ஈ. திருஞானலிங்கம் | 12 Sc |
| ந. ரவீந்திரன் | 12 Sc |
| எஸ். சிவநாதன் | 10 C |
| V. முருகவேல் | 12 C |

## க. பொ. த. உயர்தர பரீட்சையில் சிறப்பு சித்தி பெற்றோர்

K. செல்வக்குமார்

R. இந்திரன்

N. ரவீந்திரன்

# கல்வியும் இறை வழிபாடும்.

— பண்டிதர் சங்கர வைத்தியலிங்கன் —

உலகத்து ஒருவர் பெறற்பாலனவாகிய பேறுகள் அனைத்தையும் தரவல்லது கல்வியே. ஆகவே கல்வி உடையார் உலகத்து ஆகக்கூடிய பெருமையுடையவர். இவருக்கு ஏற்படும் கவலைகளை எளிதாக களையவல்லது கல்வியும் அறிவும் அறிவின்படி நிற்றலாகிய ஒழுக்கமுமே.

அறம்பொருள் இன்பமும் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை.

இப்பெற்றித்தாகிய கல்வியை ஒருவர் எத்துணை இடர்ப்பட்டும் கற்றல் வேண்டும். உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் வேண்டும். செல்வர் முன் வறியார் நிற்றல்போல நல்லாசிரியர் முன்தாழ்ந்து பணிந்து நின்று கற்றல் வேண்டும். உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே. கல்லாதவர் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

(ஏக்கறுதல் -- ஆசையால் தாழ்ந்து நிற்றல்)

இத்தன்மைத்தாகிய கல்வி பயன் தருமாறு யாங்ஙனம்? கல்வியின் பயன் கற்றபடி ஒழுகலே. ஒழுக்கமில்லாக் கல்வி மணமில்லா மலர் போன்றதே. நல்லொழுக்கமே அறத்துக்கு வித்தாக உள்ளது. அறம் மனத்தில் குடிகொள்ளும்போது வாய்மையும் தூய்மையும் செம்மையும் மனத்தகத்து மிளிரும். மிளிரவே தெய்வம் நெஞ்சத்தை இடமாகக் கொள்ளும். கொள்ளவே கவலைகள் தீரும். இன்பம் இடையறாது நிற்கும். இதனாலேதான் தெய்வப் புலவர் கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்'' என்று கூறிப் போந்தார்! 'கல்வி அறிவின் முடிந்த பயன் கடவுளை அறிதல். அவ்வறிவின்பின் அவர் வழி ஒழுகல்; ஒழுகி அவரோடு ஒன்றாதல்' என்று ஆங்கில மாகவி மிலிட்டனார் கூறுகிறார்.

நற்குஞ் சரக்கன்று நண்ணில் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண் — என்று திருவருட் பயன் கூறுகிறது

நிறைந்த கடவுட் காதலையுடைய சுந்தரமூர்த்தி நாயனார் எப்படிப் பாடுவேன் என்று இறைவனிடம் விண்ணணப்பிக்க 'பித்தன்' என்றே பாடுக என்று இறைவன் முதலெடுத்துக் கொடுத்தார். திருஞானசம்பந்தர் 'அம்மையே அப்பா' என்று அழ இறைவன் சொற்படி இறைவி திருமுலைப்பாலைக் கறந்தூட்ட கருணையாகிய சிவஞானத்தைக் கலந்து ஊட்டப்பெற்றதனால் தமிழ் வேதத்தை பாடியருளினார். ஏனைய சமயாச்சாரியருள் அப்பர் கல்வி அறிவு ஒழுக்கங்களில் தலை நின்று தமக்கையாராகிய திலகவதியார் திருநீற்றை கையில் எடுத்து திருவைந்தெழுத்தை ஓதிக் கொடுத்ததனால் நாவுக்

கரசரும் தேவாரத்தைப் பாடியருளினர். மணிவாசகனும் பதினும் ஆண்டுக்குள் எல்லாக் கலைகளையும் கற்றுத் தேறித் தெளிந்து ஒழுக்கத்தில் நிலைத்து நின்றதனுல் இறைவன் குருவடிவில் எழுந்து வந்து திருவடி முதலிய தீக்கைகளைச் செய்ததனுல் ஒப்புயர்வில்லாதனவாகிய திருவாசகம் திருக்கோவைகளை பொழிந்தருளினர். கல்வியின் பயனுகிய நல்லொழுக்கமும் இறை வழிபாட்டின் பெருமைதனையும் நாம் கண்டறிந்து களிப்படையலாம்.

கல்வியைக் கசடறக் கற்று அதற்கு தக நிற்கும் ஒருவர் உள்ளத்தை, கோயிலாகக் கொண்டு இறைவன் விளங்குவான். அவருக்கு நல்ல தொழிலைக் கொடுப்பான். வேறு பல செல்வங்களைக் கொடுத்து, தன் பணிகளை - மக்களுக்குரிய சேவைகளை - செய்ய வைப்பான். அப்போது இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்ற நிலைவரும்.

"ஆயுந் தொறும் தொறும் இன்பந்தரும் கல்வி ஆங்கறிவு
மாயுந் தொறும் தொறும் இன்பந்தரும் வள்ளல் வார்கழல்கள்"

என்றபடி இம்மை மறுமை பயன்களை கல்வி தரும் என்பதை ஒருவர் தம் அனுபவத்தில் காணலாம்.

'கல்லாதனவெல்லாம் கற்பித்தானை காணுதனவெல்லாம் காட்டினனை' என்றும் தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும் தேடிக் காணுத தேவனை என்னுள்ளே தேடி கண்டு கொண்டேன் என்றும் தான் பெற்ற இன்பத்தை அனுபவத்தில்கண்டு அப்பர் இறுமாந்து நின்று கூறுகிறர். மணிவாசகனும் மெய்யன்போடு உள்ளே நோக்கி தன் மனத்தை இடமாகக் கொண்டு நின்ற இறைவனை 'இரந்து இரந்து உருக என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே' என்று அழைக்கிறர். இங்ஙனமே அருணகிரியார் தன்னுள்ளத்து இறைவன் மெய்யன்பினல் மெல்ல மெல்ல உள்ள அரும்பும் தனிப்பரமானந்தம் தித்தித்த அன்றே கரும்பும் துவர்த்து செந்தேனும் புளித்து அறக் கைத்தது என்று கூறுகிறர்.

இறை வழிபாடு இம்மைப் பயன்களாகிய கல்வி செல்வம் அறக்கொடை முதலியவற்றுக்கும் மறுமை அம்மை பயன்களுக்கும் பயன்படுமாற்றை சிறிது நோக்குவாம். கல்வி கற்பது ஒழுக்கத்தில் நின்றே கற்றல் வேண்டும். ஒழுக்கத்துக்கு வழியாக அரசன் முதலிய அறுவரையும் பணிவோடு போற்றுதல் வேண்டும்.

அரசன் உபாத்தியாயன் ஆய்தந்தை தம்முன்
குரவர் இவர்தம்மை கூசாமல் நாளும்
தேவரைப்போல தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி. — சங்க நூல்

வித்தியா குருவை தாழ்ந்து நின்று படித்தால் அக்குரு தான் அரும்பாடுபட்டு தொகுத்த அறிவை சிறுது நேரத்தில் மாணவனுக்கு அறிவித்து தேற்றி விடுவார். ஞானகுரு தம்மை வணங்கினரை தன் அருட்கண்ணுல் நோக்கி ஞானத்தை போதித்துவிடுவார். குருவாகிய துரோணுச்சாரியர் தனக்குப் படிப்பிக்க மறுத்த பின்னரும் குருவின் பது

மையை விற் பொருந்திய கையுடன் செய்து அதை வணங்கி வில் வித்தை கற்றான் ஏகலவன் என்னும் வேடன் எனப் பாரதம் கூறுகிறது. எனவே ஆசாரியருக்கு பணிந்து கீழ்ப்படிதலின் முதன்மை தெளிவாகிறது. ஞானகுருவைத் தேவனைப்போல பணிந்து ஞானம் பெற்றவர் வரலாறு பலஉள. அறுபத்துமூவர் அடியார்கள் ஞானகுருவோடு ஒப்புமை உடையவர். அதனாலேதான், இறைவனோடு நட்புரிமை பூண்ட சுந்தரர் அடியார்களுக்கு வணக்கம் செய்தே இறைவனை வணங்குஞ் செய்கையை மேற் கொண்டார்.

குரு வழிபாட்டுக்கு அடுத்தபடியாக ஒருவர் தெய்வத்தை வழிபடல் வேண்டும். தெய்வத்தை கோயிலிலும் அடியார் வேடத்திலும் வழிபடுவது புறவழிபாடு ஆகும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் உள்ளமறியாதபடி இருக்கின்ற கடவுளை நோக்குதல் உள்ள வழிபாடாகும். புறவழிபாட்டில் நன்கு பயின்ற பின்னரே அகவழிபாடு எளிதாக இருக்கும். ஒழுங்காக பூசை நிகழும் கோயிலை நாடோறும் வழிபடல் மிகநன்று. குன்றக்குடி அடிகளார் அமெரிக்காவில் உள்ள ஒரு அறிஞர் எழுதிய ஒரு புத்தகத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவில் குறிப்பிட்டிருந்தார். அப்புத்தக ஆசிரியர் அமெரிக்காவில் உள்ள ஒரு பெரிய நகரத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒழுங்காகக் கும்பிட்டவர்கள் கல்வி செல்வம் இரண்டிலும் மேம்பட்டிருத்தலையும் மற்றவர்கள் தாழ்வுற்றிருத்தலையும் காட்டியிருக்கிறார். எங்கள் நாட்டிலும் எந்த ஊரிலும் இந்த உண்மையைக் காணலாம். ஆகையால் பெரியோர் வழிபாடும் கோயில் வழிபாடும் எங்கள் வாழ்கைக்கு முதற் பொருளாக உள்ளதைக் காணலாம்.

ஒருவர் ஒருமைக் கண் கற்ற கல்வி ஏழு பிறப்பும் தொடரும் தன்மையது. அதனாலேதான் மிக இள வயதிலே முற்றறிவுடையவராக சிலர் பிறக்கின்றார்கள். திருஞானசம்பந்தர், மெய்கண்டார், குமரகுருபரர் முதலியோர் வரலாறுகளை கண்டறிந்து கொள்க. இம்மையிலே ஒரு சிறிதும் கல்லாத திண்ணனாராகிய கண்ணப்பர் ஆறு நாளில் கடவுள் அருள் ஆகிய உயர் ஞானத்தைப் பெற்றார், அவரை சுந்தரர் கலை மலிந்த சீர்நம்பி கண்பர்க்கு அடியேன்' என்று எல்லாக் கலைகளையும் கற்றவர் என்ற அடை கொடுக்கிறார். கடவுளைத் தன்னுள்ளே காணுதல் கல்வியால் ஆய முடிந்த பயன் என வள்ளுவர் கூறும் ''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்' என்பதன் பொருளை நாம் இப்போது அறிவோம். தாய் தந்தை உவாத்தியாயர் முதலியோரை வழியட்டு தெய்வத்தை வழிபட்டால் எல்லாவற்றையும் அடையலாம்.

# சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை.

செந்தமிழ்த் தாய் பெற்றெடுத்த ஐம்பெருங் காப்பியச் செல்வங்களில் முதன்மை இடம் வகிப்பது சிலப்பதிகாரம். இந்நூலின்கண் ''அரசியலில் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்; உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்; ஊழ்வினை உருத்து வந்தூட்டுமென்பதூஉம்'' ஆகிய முப்பொருள்கள் எடுத்தாளப்படுகின்றன. வணிகக் குடியில் வந்துதித்த கோவலன் — கண்ணகியின் வாழ்க்கையினைப் பாங்குற எடுத்து இயம்பும் இக்காப்பியத்தை யாத்த இளங்கோ அடிகளார் மேற்கண்ட முப்பொருளிலே எப்பொருளைக் கருப்பொருளாகக் கையாண்டுள்ளார் என்பதுபற்றி நிலவும் கருத்துக் கள் பலவாகும். ஆனாலும் அடிகளார் ஒரு சமணத்துறவி எனப்படுவதாலும், நூலின் கதைப் போக்கினை ஆழ்ந்து நோக்குங்கால், பற்பல இடங்களில் ஊழ்வினையின் திறமே மிகுதியாகத் தோன்றி நிற்பதாலும், இன்னும் பல காரணங்களாலும் இப்பெருங் காப்பியத்தின் கருப் பொருளாயமைவது ''மற்றொன்று சூழினும் தான்முந்துறூஉம் ஊழே'' என்பது பெறப்படும். இதற்கான சான்றுகள் சிலப்பதிகாரத்தின்கண் காணக் கிடக்கின்றன.

மணவிழாவிலே மங்கல மகளிர் மணமக்களை வாழ்த்துதல் மரபு. இம்மரபை யொட்டி மறக்குலச் செம்மல் கோவலனுக்கும் — திருமாமணியாய் இலங்கிடும் கண்ண கிக்கும் பொதுஅறு சிறப்பின் புகார் நகரிலே நடைபெற்ற மணவிழாவிலே அவர்களை மங்கல மகளிர்

''காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீது அறுக''

என்று வாழ்த்துகின்றனர். போருக்குச் செல்லும் கொழுநனை இல்லாள் ''வெற்றியு டன் திரும்பி வாருங்கள்'' என்று வாழ்த்தி அனுப்புவாளே தவிர ''சாகாமல் திரும்பி வாருங்கள்'' என்று சொல்லி அனுப்புவதில்லை, ஆனால் கோவலன் கண்ணகியின் மண விழாவிலே அவர்களை வாழ்த்தும் மகளிர் ''ஒன்றாக இணைந்து நீடுவாழ்க'' என்று கூறு வதற்குப் பதிலாக ''இருவரும் பிரியாமல் வாழ்க'' என்று வாழ்த்தினர். இங்ஙனம் அவர்கள் எதிர்மறையாக வாழ்த்துதற்குக் காரணம் ஊழ்வினை அவர்கள் நாவில் வந்து ஊடாடியதே. கண்ணகி எப்படிப்பட்டவள்:

''கொங்கச்செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து
ஒருமாமணியாய் உலகுக்கு ஓங்கியவள்''

அத்தகையவளை மனையாட்டியாகப் பெற்றிருந்தும் அவளிடம் என்ன குறை கண்டு கோவலன் மாதவியை நாடுகிறான். அடிகளாரே காரணம் கூற இயலாமல்

மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னோடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி.

என்று கோவலன் மயக்கத்தை மட்டும் கூறி, அதற்கான காரணத்தைக் கூறாது விட்டொழிகின்றார். இதிலிருந்து பெறப்படுவது ஊழ்வினைதான் கோவலனை மாதவி தாசனாக்குகிறது. அவள் மாலையை உரிய பொன் கொடுத்து வாங்க வைக்கின்றது, கண்ணுக்குப் புலப்படாத காற்றுப் போல மறைந்து நின்று உருத்து வந்து ஊட்டுகின்றது.

அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து விடை சொல்ல முடியாத இடங்களிற்றான் இளங்கோவடிகள் ஊழ்வினையை உட்படுத்திக் கூறுகின்றார். கோவலன் யார்? ''ஓல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து நல்வழிப் படுத்த செல்லாச் செல்வன்'' அப்படிப் பட்டவன் கானல்வரியிலே ''மாயப் பொய் கூட்டும் மாயத்தாள் பாடினாள்'' என்று நினைந்து மாதவியை விட்டு நீங்குகின்றான். பல ஆண்டுகள் வராத எண்ணம் இப்போது மட்டும் வருவானேன்? அடிகளாரின் சிந்தையிலும் காரணம் புலப்படவில்லை. அதனாற்றான் ''யாழிசை மேல் வைத்து தன் ஊழ்வினை வந்து உருத்தது ஆகலின்'' என்று ஊழைத் துணைகொள்ளுகின்றார். கண்ணகியுடன் பேராச் சிறப்பின் புகார் நீங்கி மதுரை நாடும் கோவலனை அங்குதான் ஊழ்வினை முழுதும் வந்து தன் பயனை ஊட்டுகின்றது. மாதரியின் இல்லிலே கற்பின் செல்வி கண்ணகி தன் கொழுநனுக்கு அறுசுவை உணவு படைக்கிறாள். பின் அவன் சீரடிச் சிலம்பு ஒன்று பெற்றுச் செல்கிறான். அப்படிச் செல்பவன் தன் மனைவியிடம் என்ன உரைக்கிறான்.

''கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீரடிச்சிலம்பு ஒன்று கொண்டு யான்போய்
மாறிவருவன் மயங்கா தொழிக'' — என்கின்றான்.

சிலம்பைக் கொண்டு போய் அதனை பொருளுக்கு மாற்றி வருவேன் என்று சொல்வதற்குப் பதிலாக மாறி வருவேன் என்று சொன்னான். இப்போது உயிருடன் செல்பவன் பின்னால் உயிரற்றவனாக மாறப் போகின்றான் என்பதை முன்கூட்டியே அவன் நாவில் வந்து தங்கிய ஊழ் வெளிப்படுத்தி விடுகின்றது. அது மட்டுமன்றி அதே ஊழ் அவன் உள்ளத்தில் கலக்கமாகவும் வந்து தங்குகிறது. அதனாற்றான்

''வருபனி கலந்த கண்ணனாகி
பல்லான் கோவலர் இல்லம் நீங்கிச்'' செல்கின்றான்.

தென்புலம் காவல் மன்னவர் கோமான் பாண்டியன் நெடுஞ்செழியன் அரசமா தேவியின் ஊடல் தீர்க்கு அந்தப்புரம் நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றான். இடையிலே பொற்கொல்லன் அரசனைத் தடைப்படுத்தி ''கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் என் சில்லைச் சிறு குடில் அகத்து இருக்கிறான்'' என்று கூறுகிறான். இதைக் கேட்டு வழுதி யாது செய்திருக்க வேண்டும். ?... குறை கேட்டு நெறி காக்கும், முறை கூறி அறம் காக்கும் மன்னவர் கோமான் கடமை தவறி, ஆராயாமல் ஊர் காப்பாளரைக் கூவி

''ஈங்கு என் தாழ்பூங்கோதை தன் காற்சிலம்பு

கன்றிய கள்வன் கையதாகில்
கொன்று அச்சிலம்பு கொணர்க'' என்று கட்டளையிடுகின்றான்.
''ஒழுக்கமுடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்'' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

ஆனால் ஒழுக்கமும் நீதியும் காக்க வேண்டிய மன்னவன் முறை பிறழ்ந்து விடுகிறான். இதற்குக் காரணம் சிந்தைக்கு எட்டாதது. ஊழ்வினைக்கு உட்பட்டதுதானே. அதனாற்றான் இளங்கோவடிகள்

''வினைவிளைகாலம் ஆகலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேராளுகி

என்று முட்டும் கூறிவிடுகின்றார்.

இத்துணை இடங்களிலும் ஊழை உட்படுத்திக் கூறி வந்த அடிகள், கண்ணகி மதுரை மாநகருக்கு எரி தழல் ஊட்டிய போது மதுராபதித் தெய்வத்தின் வடிவிலே அதை வெளிப்படையாக உரைக்கின்றார்.

''கடிபொழில் உடுத்த கலிங்க நல் நாட்டு ... எனத் தொடங்கி முற்பிறப்பின் கதையை கண்ணகிக்கு மதுராபதித் தெய்வம் உரைக்கின்றது. கண்ணகியும் ஊழ்வினையின் பயனைத் துக்கத்தினால் பல இடங்களில் ''நான் தீவினை செய்தேன்'' ''நான் தீவினையாட்டியேன்'' எனக் கூறிப் புலம்புகின்றாள். கனத்திறம் உரைத்த காதையில் தேவந்தியிடம் கண்ணகி தான் கண்ட தீய கனவினைப் பற்றி கூறுகின்றாள். அது கேட்ட தேவந்தி, கண்ணகியைப் பார்த்து கனவிற்தான் அரு நோன்பு பொய்த்தாய் பழம் பிறப்பில் என்று இப்பிறப்பில் வரும் இன்னல்களுக்குக் காரணம் முற்பிறப்பின் ஊழ்வினை தான் என விளக்குகின்றாள்.

சிலப்பதிகாரக் காப்பியத்தை நடத்திச் செல்வதே ஊழ்வினைதான் என்று கூறின் அது மிகையன்று. ஊழ்வினை மட்டும் குறுக்கிடாதிருந்தால் மறக்குலச் செம்மல் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்திருக்கமாட்டான். மாதவியை மாயத்தாள் என வெறுத்திருக்கமாட்டான். பாண்டியனும் தீர விசாரித்துத் தீர்ப்பளித்திருப்பான். கற்புக்கடம் பூண்ட கண்ணகி மதுரை நகருக்கு எரிதழலூட்டியிருக்கமாட்டாள். கதை நடந்திருக்கமாட்டாது கண்ணகியும் பத்தினித் தெய்வமாகி இருக்கமாட்டாள். இவ்விதம் ஊழ்வினை இல்லையெனில் இக்காப்பியம் யாத்தற்கே வழியில்லை. எனினும் திறத்தைக் கொண்டு நோக்கும் போது இதன் கருப் பொருளாய் அமைவது ஊழ்வினைதான் என்பது பெறப்படுகின்றது.

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந்து உறும்''

**ந. விநாயகமூர்த்தி**
*12 உயிரியல் விஞ்ஞானம்*

# அணுசக்தியின் சில பிரயோகங்கள்.

இரண்டாம் உலகப் போரின்போது ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் பல அழிவுகளை விளைவித்தது அணுசக்தி. இது யாவரும் அறிந்தது. இங்கு வெடிக்கப்பட்ட அணுக்குண்டின் விளைவினால் இப்போதும் இந்தஇடங்களில் பிறக்கும் குழந்தைகள் பலகுறைபாடுகளுடன் பிறக்கின்றனர். இந்த இரண்டாம் உலகப் போரின் முடிவு அணுசக்தி ஆராய்ச்சி முற்றுப்புள்ளி வைத்துவிடவில்லை. அதற்கு மாறாக அணு ஆராய்ச்சிகள் புத்துணர்ச்சி பெற்றன. பல விஞ்ஞானிகள் அணு ஆயுதங்களில் இருந்து தம் கவனத்தை திருப்பி அணுசக்தியை அமைதிப் பணிகளில் பயன்படுத்துவதில் தம் கவனத்தை திருப்பினர். அணு என்பது அழிக்க முடியாததொன்று. அதை சக்தியாக மாற்றலாம். இது ஐனஸ்ரினின் கண்டுபிடிப்பு. இந்த கோட்பாட்டின்படி பொருளுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பை $E = MC^2$ என்ற சமன்பாடு தருகின்றது. இங்கு E என்பது சக்தி; M என்பது திணிவு; C என்பது ஒளியின் வேகம் $[C = 3 \times 10^{10} C \cdot M / Sc]$ இச்சமன் பாட்டினில் இருந்து M திணிவு அழிந்தால் $M \times 3 \times 10^{10} \times 3 \times 10^{10}$ $(MC^2)$ சக்தி கிடைக்கும். இங்குM மிக குறைவாக இருந்தாலும் பெறப்படும் சக்தி மிக அதிகமாகும். யூரேனியம் அணு ஒன்று சக்தி வாய்ந்த நியூத்திரனால் மோதடிக்கும்போது அது இரண்டாக பிளவுபடுகிறது. (1) பேரியத்தின் சமதானியாகவும் (2) கிரித்தனின் சமதானியாகவும். இங்கு பேரியத்தின் நிறை சுமார் 140 ஆகும். கிரித்தனின் நிறை சுமார் 90 ஆகும். ஆனால் யூரேனியம் இரண்டே இரண்டு சமதானிகளை மட்டும் உடையது. (1) U — 235 (2) U — 238 ஆகும். யூரேனியம் பிளவுபடும்போது மிகுதிநிறைக்கு நடைபெறுவது யாதெனில் ஐனஸ்ரினின் சமன்பாட்டின்படி சக்தியாக மாற்றப்படுகிறது. U — 235 ஐ எடுப்போமாயின் வெளிவிடப்படும் சக்தியின் அளவு $5 \times 3 \times 10^{10} \times 3 \times 10^{10}$ ஆகும்.

அணு சக்தி என்று சொல்லும்போது அதில் அணு உலைகள், கதிரியக்க சமதானிகள் அதிகளவு நன்மையை தருகின்றன. அணு உலை என்பது ஒரு வித அடுப்பு இதில் யூரேனியம் அல்லது வேறு பொருள்கள் சிதைவுறும்போது அதிகளவு வெப்பம் உண்டாகிறது. இதை தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம். மனிதகுலம் அணுசக்தி மூலம் பெறும் மிகப்பெரும் நன்மை மின்சார உற்பத்தியாகும். அணுவினுள் உள்ள சக்தி வெளியே பெறப்படுமுன் எண்ணெய், நிலக்கரி போன்றவற்றை எரித்து பெறும் வெப்ப சக்தியினால் நீர் நீராவியாக்கப்பட்டு இந்நீராவி மூலம் டைனமோ சுழற்றப்பட்டு மின்சாரம் பெறப்பட்டது. அணு உலையினுள் யூரேனியம் சிதைவுறும்போது மிகப்பெரியளவில் வெப்ப சக்தி வெளிப்படும். இவ்வெப்ப சக்தி அணு உலையினுள்

நடுவில் பொருத்தப்பட்ட குழாயினுள் உள்ள நீரை நீராவியாக மாற்ற உதவுகிறது இந்நீராவி அதிக அழுத்தத்தில் செலுத்தப்பட்டு டார்பனை இயக்குகிறது. டார்பனின் இயக்கத்தினுல் டைனமோ சுழற்றப்பட்டு மின்சாரம் பெறப்படுகிறது. 2000 வருடத்தின் ஆரம்பத்தில் உலகில் உள்ள நிலக்கரி வளம் முற்ருக வற்றிவிடும் நிலையிலுள்ளது இந்நிலையில் உலகெங்கும் அணுசக்தி மூலம் மின்சாரம் பெறப்படும் வழியே சிறப்பாக கையாளப்படுகிறது. (2000 இரு நிலக்கரி - 2 இரு யூரேனியம்)

நிலத்தின் அடியில் துளைகருவி கொண்டு எடுக்க முடியாமல் மண்ணில் ஊறி இருக்கும் எண்ணெயை எடுப்பதற்கு நிலத்தின் அடியில் துளையிட்டு அதற்குள் பத்திரமாக அணுகுண்டை இறக்கி வெடிக்கச் செய்வதினுல் நிலத்தின் மிக ஆழமான பகுதியினுள் பெரிய நிலவறை போன்று பெரிய வெளி உண்டாகிறது. இதனுல் பக்கங்களில் ஊறி இருக்கும் எண்ணெய் படிவங்கள் இவ் வெளியை வந்து அடைகின்றது. பின் துளை கருவி மூலம் இவ் வெண்ணெயை எடுக்கலாம். எரி பொருள்களை பத்திரப் படுத்தி வைக்கவும் பூமிக்கடியில் உள்ள தாதுப் பொருள்களை வெளியே எடுக்கவும், வேண்டாத நச்சுப்பொருட்களை பூமிக்கடியில் புதைப்பதற்கும் இவ் வழியைக் கையாளலாம். இதில் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகள் வெற்றியும் கண்டுள்ளன. பூமியின் மேற்பரப்பிலும் அணுகுண்டு ஆக்கப் பணிக்கு உதவுகிறது. அணுகுண்டினை வெடிக்கச் செய்து செயற்கை துறைமுகத்தை உண்டு பண்ணலாம். குன்றுகளையும், மலைத்தொடர்களையும் குடைந்து வீதிகளையும் ரயில் பாதைகளையும் அமைக்கலாம் பெரிய வாய்க்கால்களை வெட்டி ஆறுகளை இணைப் பதற்கும் உதவுகிறது.

உலகெங்கும் சமதானிகள் ஆயிரக்கணக்கான இடங்களில் பயன்படுகின்றன. கதிரியக்க சமதானிகள் கதிர்வீச்சுக்களை வெளிவிடுவதன் மூலம் பயனுள்ளவையாக இருக்கின்றன. எமது அன்ருட வாழ்க்கையில் கதிரியக்க சமதானிகளும் அதிகம் பங்கு கொள்கின்றன. இவைகள் மூன்று சக்தி வாய்ந்த கதிர்களை வெளியாக்குகின்றன. அவை யாவன அல்பா, பீற்ரு, காமா என்பவையாகும். சமதானிகள் விவசாயத் துறையில் தாவரங்கள் உறிஞ்சும் கனிப் பொருள்கள் எவ்வாறு பரவுகின்றது என கண்டு பிடிக்க உதவுகிறது. கதிரியக்க சமதானிகளை கொண்டு பயிரினங்களுக்கு ஏற்படும் பல வகை நோய்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியதாக புதிதாக பலவகை தாவரஇனங்களை கண்டு பிடித்துள்ளனர். இன்று தொழில் துறையில் கதிர்இயக்க சமதானிகள் எண்ணெய்களின் தரத்தை சோதிக்கவும், உலோக இணைப்புக்கள், வார்ப்புக்கள் முதலியவற்றில் பழுதுள்ளதா என கண்டு பிடிக்கவும் இயந்திரங்களின் அமைப்பை சோதிக்கவும் குழாய்களின் வழியே ஓடும் திரவத்தின் அளவை அளவிடவும், குழாய்களில் ஏற்படும் கசிவை அறியவும் பயன்படுகிறது.

கதிரியக்க சமதானிகள் வைத்தியத் துறையில் பல வகையான மாற்றங்களை உண்டாக்கியுள்ளன. இரத்த ஓட்டத்தை கண்காணிக்கவும், தைரோய்டு சுரப்பியின்

மிகக் கூடியளவு சக்தி வாய்ந்தவையாகையினுல் நமது உடலுக்குள் இவற்றைச் செலுத்தி எலும்புகளேப் படம் பிடிக்கிருர்கள். அதிகளவு எக்ஸ் கதிர்களுடன் பழகுபவர்களின் தோல் வெள்ளேயாகி விடும். இதற்குக் காரணம் தோலில் உள்ள திசுக்கள் அழிக்கப்படுவதே.

## காமாக் கதிர்கள்

இது அணுசக்தி உண்டாக்கும் போது ஏற்படும் ஒருவித கதிராகும். இது ஈயத்தை தவிர மற்றைய எல்லா பொருள்களினூடேயும் நுழைந்து செல்லும் சக்தி வாய்ந்தது. அணுகுண்டோ அல்லது நீரகக் குண்டோ வெடிக்கும் போதும் அல்லது அணுஉலே வேலே செய்யும் போதும் அவைகளில் இருந்து வெளியாகும் இக் கதிர் மனிதர்களின் உடலில் பட்டால் ஆருத காயத்தை உண்டாக்கும். இக்கதிர்களேத் தடுக்கவே காங்கிரீட் அல்லது ஈயத்தாலான தடித்த சுவர்களே அணுச் சக்தி உடலேச் சுற்றி வைக்கின்றன.

## காஸ்மிக் கதிர்கள்

இக் கதிர்களே அதிகூடிய சக்தி வாய்ந்தவையாகும். இக் கதிர்களின் இருப்பைப் பூமியின் எல்லாப் பாகங்களிலும் பரிசோதனே மூலம் கண்டறியலாம். இவைகளின் சக்தி மேலேசெல்லச்செல்ல அதிகமாகிக் கொண்டேபோகிறது இதன் சக்தியை''கெய்கர் கவுண்டர்'' (Gaiger Counter) மூலம் கணக்கிடலாம். இக் கதிர்களின் சக்தியை வரையறுத்துக் கூற முடியாது. இதற்காகச் செய்த ஆராய்ச்சியினுல் பல அணுக் கூறுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

**மு. இரவீந்திரன்**
*12 உயிரியல் விஞ்ஞானம்*

---

மடையர்களேப் போலத் தோற்றமளிக்கும் புத்திசாலிகள்தான் உலகத்தில் வெற்றி பெறுகிருர்கள்.

முகஸ்துதி என்பது ஒரு படத்தில் தீட்டியுள்ள கவசம் போன்றது. பார்வைக்கு மிக்க அழகாய் இருக்கும். ஆனுல் ஒன்றுக்குமே உதவாது.

— டெமோபிலஸ்

# மின்காந்த அலைகள்

சூரிய ஒளியை ஒரு முப்பட்டைக் கண்ணாடி கொண்டு பிரிக்கும் போது பல வர்ணங் கொண்ட ஒரு நிறமாலை உண்டாவதைக் காண்கின்றோம். அதில் சிவப்பு நிறம் தொடங்கி ஊதா நிறம் வரை காணப்படும். இதில் முறையே மஞ்சள், பச்சை, நீல நிறங்கள் உள்ளடக்கப்பட்டுக் காணப்படுகின்றன. ஒளிச் சக்தியின் வேறுபாடே இதற்குக் காரணமாகும். சக்தியின் அளவு அலையின் நீளத்தைப் பொறுத்துள்ளது. நீளம் கூடவுள்ள போது சக்தி குறைவாகவும், நீளம் குறையவுள்ள போது சக்தி கூடுதலாகவும் இருக்கும். அலை நீளம் என்பது அடுத்துள்ள இரண்டு மேடுகளுக்கோ அல்லது தாழிகளுக்கோ இடைப்பட்ட தூரமாகும். ஒரு வினாடியில் எத்தனை அலைகள் நிகழ்கின்றதோ அதை வீச்சு என்கிறோம்.

ஒளி நிறமாலையில் சிவப்பு, நீல ஒளிக் கதிர்களுக்கு இடையேயான அலை நீளங்கள் முறையே $7000 \times 10^{8}$CM, $2000 \times 10^{18}$CM ஆகும். இதனையே 7000, 2000 ஆன்ஸ்ட்ராம் எனக் குறிப்பிடப்படும். 1 ஆன்ஸ்ட்ராம் $= 1 \times 10^{8}$CM. இவ் அலைகள் நகரும் தன்மையுடையவை. இவை நகரும் வேகம் வினாடிக்கு 1,86,000 மைல்களாகும். இந்த வேகம் எல்லா மின் காந்த அலைகளுக்கும் சமனாகும். ஓர் அலையின் வேகம் அலையின் நீளத்தையும் வீச்சத்தையும் பெருக்கக் கிடைக்கிறது.

## அலைக் குடும்பம்.

மின் காந்த அலைக் குடும்பத்தில் பல கதிர்கள் இடம் பெறுகின்றன. இதில் காணப்படும் கதிர்களின் வேறுபாடு அலைகளின் வீச்சு, அலைகளின் நீளம் என்பவற்றில் தங்கியுள்ளது. இதில் காணப்படும் இரண்டு முக்கிய உண்மைகள்:

(1) எல்லாக் கதிர்களும் அலை மயமானவை

(2) அவைகளின் நிற குண வேறுபாடுகள் அலை நீளத்தையும் அலைவீச்சையும் பொறுத்திருக்கும்.

⟵ அலை நீளம் நீளும் திசை

அலை வீச்சின் எண்ணிக்கை கூடும் திசை ⟶

## வானொலி அலைகள்.

நம் இல்லங்களிலுள்ள வானொலிகள் பாடுவதும், பேசுவதும் வானில் செலுத்தப்படும் வானொலி அலைகளை ஈர்த்து ஒலி அலைகளாக மாற்றுவதால் உண்டாவன. சண்

ணுக்குப் புலப்படா இவ் அலைகளின் அலை நீளம் சில 100 மீட்டர்கள் ஆகும். இவ் வானொலி அலைகள் ஒளி செல்லும் வேகமாய் விஞடிக்கு 1,86,000 மைல் கடிது செல்கின்றன வான வெளியை நோக்கிச் செங்குத்தாக அனுப்பப்படுவதால் ஏனைய அலைகள் வானில் 200 அல்லது 300 மைல்களுக்கப்பால் உள்ள மின் அணு மண்டலத்தின் அடுக்குகளால் பிரதிபலிக்கப்பட்டுத் திரும்பவும் பூமியை வந்து வேறு ஓர் இடத்தை அடைகின்றன.

## ராடார் அலைகள்.

இதன் அலை நீளம் அதன் சக்தியைப் பொறுத்து 3C·M வரையுள்ளதாகக் காணப்படும். பல நூறு மைல்களுக்கப்பாலுள்ள கப்பல், வான ஊர்தி இவைகளைக் கண்டறியவும் தொலைக் காட்சிப் படங்களை அனுப்பவும் இந்நுண்ணிய அலைகள் உபயோகிக்கப்படுகின்றன. அலை நீளம் குறையக் குறைய இந்நுண் அலைகளை ஒளிக் கதிரைப் போல் ஒரு முகப்படுத்தி ஒரு திசை வழியே செலுத்த முடிகிறது. அதிகச் சக்தியுள்ள அலைகளைச் சாதாரணத் தடையும் தடுத்துவிடும். நுண் மின் காந்த அலைகள் பெரிய கட்டிடங்கள் மலைகள் போன்றவற்றிஞல் தடுக்கப்படுகின்றன. இத்தடையை நீக்க வேண்டின் அலை பரப்பியை (TRANSMETER) மிக உயரமான இடத்தில் வைக்க வேண்டும்.

## வெப்ப அலைகள்.

இவைகளில் அலை நீளம் 3C·M — 0·3CM·M வரையுள்ளது. நாம் ஒரு சூடாக இருக்கும் ஒரு பொருளின் சூட்டை உணர முடிகிறதேயன்றி இங்கு வெளியாகும் சூட்டை நாம் பார்க்க முடியாது. இத்தன்மையுடைய அலைகளே வெப்ப அலைகள் எனப்படும். இவைகளை ஒளிக் கதிர்களை கண்ணுடி வில்லை கொண்டு குவிப்பதும் விரிப்பதும் போல இதனையும் பேரஃபின் (Paraffin Wax) மெழுகிஞல் ஆனவில்லை கொண்டு செய்யலாம். உதாரணமாக ஒரு எரியும் மின் விளக்கில் கையை வைக்கும்போது வெப்பத்தை உணர்கின்ருேம் அல்லது எமக்கு கிடைப்பது ஒளி ஆகும். இவ் விளக்கிலிருந்து 100ல் 9 பாகம் ஒளியும் மிகுதி 91 பாகமும் வெப்ப அலைகளாக வெளி வருகின்றன. எவ்வாருன வெப்ப அலைகளின் சக்தியையும் வெப்ப அளவுமானிகளைக் கொண்டு கண்டறிந்து அதில் இருந்து அவ் அலை நீளத்தையும் கணக்கிடலாம்.

## புற ஊதா அலைகள்

இவ்வலைகளை மிகுதியாகக் கொடுப்பன பாதரச மின் விளக்குகளும் குழாய் விளக்குகளுமே. இதன் உதவியிஞல் உயிர்ச்சத்து D குறைபாட்டுக்குச் சிகிச்சை செய்யலாம். இந்நுண் அலைகளின் நீளம் 2000A — 100A வரையுள்ளது. இது ஒரு சக்தி வாய்ந்த அலைகளாகும்.

## எக்ஸ் கதிர் (X Ray)

இதனை முதன் முதலில் 1895ம் ஆண்டு ராண்ட்ஜன் என்னும் ஜெர்மனிய விஞ்ஞானி கண்டு பிடித்தார். இக் கதிர்களின் அலை நீளம் 20A—0.1A வரையுள்ளது. இவை

செயல்திறனை அறியவும் பயன்படுகிறது. மற்றும் கொழுப்புக்கள், புரதங்கள் முதலியன உடலில் அடையும் வளர்சிதை மாற்றத்தை அறியவும், இது தவிர மனித உடலில் வளரும் கட்டிகளை அழித்து நலப்படுத்தவும், தைரோய்டு சுரப்பி நோய்களை நலப்படுத்தவும் மூளைக் கழல்களை அகற்றவும், பல்வேறு புற்று நோய்களை நலப்படுத்தவும், பயன் படுகிறது. உணவின் மீது அதன் விளைவு நம்மை மயக்கும் அளவுக்கு அற்புதமாக இருக்கிறது. உணவுப் பொருட்கள் சிறிதளவு கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்டால் அவ்வுணவுப் பொருட்கள் மாதக் கணக்கில் புத்தம் புதியனவாக இருக்கும். மனிதன் அழிவுக்காக அணு சக்தியை கண்டு பிடித்துஇன்று எந்த துறையை எடுத்தாலும் அங்கு அணு சக்தியின் உபயோகம் இருக்காமல் முடியாது. இவ்வாறு விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ந்துள்ளது.

எழுதியவர்கள்: தி. யோகேந்திரா
தி. முரளீதரன்
வகுப்பு: 12 (கணித விஞ்ஞானம்)

---

**உன் நெஞ்சுக்குத் துரோகம் செய்யாதே. மனச்சாட்சியின்படி நட. நிச்சயமாக உனக்கு வெற்றி உண்டாகும். கள்ளங்கபடமற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய். அதை ஈஸ்வரன் கேட்பான்.**

— *சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்சர்*

**''என் பிள்ளைகள், என் செல்வம்'' என்ற சிந்தனையால் மூடன் துயரப்படுகிறான். அவனே அவனுக்குச் சொந்தமில்லை. பிள்ளைகளும் செல்வமும் எப்படிச் சொந்தமாகும்.**

— *புத்தர்*

**யாவரையும் மகிழ்விக்க விரும்புபவன் ஒருவரையும் மகிழ்விக்கமாட்டான். துளிகள் ஒரு கடலையே உருவாக்குகின்றன. இதற்குக் காரணம் அவற்றினிடையே உள்ள ஒட்டுந்தன்மையும் ஒற்றுமையும் ஆகும்.**

— *காந்திஜி*

**பல நண்பர்கள் இருப்பதாகச் சொல்லுங்கள். ஆனால் சிலரை மட்டும் நம்புங்கள்.**

**எல்லா மனிதர்களிடமும் பெருந்தன்மையாக நடந்து கொள். ஆனால் சிறந்தவர்களையே நண்பர்களாகக் கொள்.**

—*ஐசோக்கிரேட்ஸ்*

# அன்பும் அறிவும்.

இந்த உலகில் வாழும் மக்களனைவரும் அறிந்தவையும் அனைவருக்கும் இன்றியமையாதவையும் ஆகிய அன்பினையும் அறிவினையும் பற்றி ஈண்டு காண்போம். இவை இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவையிரண்டும் கண்ணுக்குப் புலப்படா. சொல்லிலும் செயலிலும் மட்டுமே புலப்படும்.

அன்பு: செலுத்தப்படுவோர்க்கேற்ப நட்பு காதல் கேண்மை பக்தி எனப்பல பெயர் பெறும். ஒத்தவர்களிடம் செலுத்தும் அன்பு நட்பாகும். தலைவன் தலைவியர்களுக்கிடையில் செலுத்தும் அன்பே காதல் சுற்றத்தார்களிடம் செலுத்தும் அன்பே கேண்மை இறைவனிடம் கொண்டுள்ள அன்பே பக்தியாகும் இவ்வாறு பல பெயர் பெறும் அன்பு முதலில் தோன்றியது தாயிடமே எனலாம். அதை ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு மெய்ப்பிக்கலாம், தன் குழந்தையை உறங்க வைத்து விட்டு ஒரு தாய் நீர் கொண்டு வர வெளியே சென்றாள். அப்போது ஒரு பாம்பு வந்து விழித்துக் கொண்ட குழந்தையிடம் விளையாடத் தொடங்கியது. குழந்தையும் விளையாடியது, குழந்தையின் மீது பாம்பு சுற்றிக் கொண்டது. தற்செயலாக அங்கு வந்த சிறுமி ஒருத்தி அதைக் கண்டு குழறினாள். பலரும் அங்கு கூடி விட்டனர். குழந்தையைக் காக்கப் பலரும் எண்ணினர். ஆனால் பாம்புக்கு அஞ்சுகின்றனர். தன்னலம் அவர்களைத் தடுத்தது. செய்தியறிந்து ஓடி வந்தாள் தாய். பாம்பினை ஒரு கயிறாக எண்ணி அதைத் தூக்கி எறிந்து குழந்தையை எடுத்துக் கொஞ்சினாள். அங்கு இருந்த ஆண்களுக்கு வராத வீரம் அத்தாய்க்கு எப்படி வந்தது? குழந்தை மீதிருந்த அன்பே அதற்கு ஏதுவாகும். இந்நிகழ்ச்சி.

> ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் ஆர் வலர்
> புன் கண்ணீர் பூசல் தரும்''

என்ற தமிழ் மறையின் பொருளை உணர்த்துகின்றது. அன்பின் முதிர்ச்சியாலே அருள் பிறக்கின்றது என்பதை, 'அருளெனும் அன்பின் குழவி' என்றார் வள்ளுவனார். இன்பம் எய்துவோர்க்கு நுழை வாயிலாக அன்பு அமைய வேண்டும். இதைத் திருமூலர் ''அன்பு ஒன்றே அனைத்துக்கும் இன்பவாயில்'' என்று அழகாகக் கூறியுள்ளார்.

அன்பு அனைத்துக்கும் பொதுவானது. ஆனால் அறிவு மனித இனத்துக்கு சிறப்பானது. ஐயறிவுயிர் என்றுரைக்கப்பட்ட விலங்கினமும் தன் கன்றுகளிடம் அன்பு செலுத்துகின்றன. ஓர் எருமை தன் கன்றை எண்ணிய அளவிலேயே பாலைப் பொழிந்து விட்டதாக ஆண்டாள் திருப்பாவையால் உணரலாம்.

''கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோரா
நனைத்தில்லம் சேர்க்கும்''...

அன்பில்லாத மனிதன் உயிரற்ற உடல் போன்றவனே. என்பிலாத உயிரை வெய்யிலயைவது போல அன்பில்லாத உயிரை அறம் காயுமாம்.

''யாக்கைக்கு அன்பு அகத்துறுப்பாகும்'' என்கிறார் வள்ளுவர்.

அறிவு: அடுத்த நிலையிலுள்ளது அறிவு. முதலில் அன்போடு சேர்த்துத் தாய் ஊட்டச் சிறிது வளர்ந்து பின் மேலும் தந்தையால் சிறிது வளர்ந்து பின் ஆசிரியரால் மிக்க வளர்ச்சியடைந்து பின் தானே ஒளிர்வதாம். இவ்வாறான ஆக்க வழியில் மட்டுமே பயன் படுத்தப்படுவது அறிவுடைமையாகும். மாறாக அழிவுப் பாதையில் பயன்படுத்துவது அறிவீனமாகும். மனிதனை நோயினின்றும் காக்க மருந்தைக் கண்டுபிடிக்க உதவியதும் அறிவு. அதே மனிதனைக் கொல்லும் நஞ்சு மாத்திரையைக் கண்டு பிடித்ததும் அதே அறிவு, இவற்றில் முன்னதை ஏற்றுப் பின்னதை விலக்குவதே மனித அறிவாகும்.

நல்லறிவைப் பெற்றவர்கள் அழியும் தன்மையுள்ள பொருட் செல்வம் இல்லாவிடினும் எல்லாம் உடையவர்களே. இதனையே தெய்வப் புலவர்,

''அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்'' என்று கூறி அறிதற்குக் காரணமான கல்வியை ''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை'' என்று கூறிய தெய்வப் புலவர் ''அறிவை அறங்காக்கும் கருவி'' என்று கூறியுள்ளார். அன்பை உயிராகவும் அறிவை கருவியாகவும் கூறிச் சென்றுள்ளார்.

அன்பும் அறிவும் சேர்ந்து செயல்படும் போதுதான் சிறப்புண்டாகிறது. புத்தர் அன்பு முறையில் தீண்டாமை, தீண்டாமையின் தீமை, ஒழுக்கம் முதலிய அறிவுரைகளை அறிவுரைகளாகக் கூறியுள்ளார். அண்ணல் காந்தியடிகள் அன்பு முறையில் போராடிப் பல வெற்றிகளை ஈட்டினர். இப்படி என்னும் பலர். இவர்களை உலகம் மறக்காது.

ஒவ்வொருவரும் அன்புக்கு இணங்கி பிறரையும் அன்பால் இணக்கி நல்லறிவு பெற்று வாழ வேண்டும். அன்பிற்கு இணங்க வேண்டும். அறிவுக்கு வணங்க வேண்டும்.

நா. மோகன்
11 உயிரியல் விஞ்ஞானம்

# வெற்றிக்கு ஓர் எண்ணப் பாதை

இன்று நாடெங்கிலும் ஓர் அவல மன நிலை சூழ்ந்திருப்பதைக் காண்கிறோம் பொருளாதார நெருக்கடி, உணவுத் தட்டுப்பாடு, மக்கள் தொகைப் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் என்று பல பிரச்சனைகள் நம்மை மோதுகின்றன. இவை பெரிய விஷயங்களல்ல. ஏனெனில், இவை புற விஷயங்கள்; இவற்றைப் பொருள் வளத்தால் மாற்றி விடலாம். ஆனுல் மக்கள் மனநிலைதான் கவலை உண்டாக்குகிறது. ஒருபுறம் அதிகாரம், ஊழல், கையூட்டு (லஞ்சம்) என்று நேர்மையிலிருந்து நழுவிய மனநிலை. மறுபுறம் மனத்தில் நம்பிக்கையற்ற, கைவிடப்பட்ட சோகம். இன்று எங்கு பார்த்தாலும் ஒரு நொந்த நிலையை, அழத் தயாராய் இருக்கும் ஒரு பக்குவத்தைக் காண்கிறோம்.

இவை எல்லாவற்றுக்கும் காரணம் மனிதனின் உள்ளந்தான். அது சோர்வடைந்து கலங்கித் தவிக்கிறது. நம் முன்னேர்கள் அஞ்சா நெஞ்சங் கொண்ட வீரர்களாக, உத்தமர்களாக வாழ்ந்தார்கள். ஆனுல் அவர்கள் வாழ்க்கையில் வசந்தம் வீசியது. நாம் நம் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்; நம் முன்னேர்களைப்போல எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாக மாறவேண்டும். அப்போது ஒளி மயமான எதிர்காலம், இரு கரம் நீட்டி எம்மை அழைக்கும்.

மலர் வேண்டுமென்றுல் நன்கு உழுது பசளையிட்ட மண்ணிலே மரத்தை நாட்டி அதற்கு நன்கு நீரூற்ற வேண்டும். அதே போலவே முன்னேற்றம் வேண்டுமென்றுல் உழைக்கவேண்டும். (சிலர் உழைப்பு என்பதை ஊதியம் என்று தவருகக் கருதுகின்றனர். உழைப்பு என்பது ஒன்றை நோக்கி நாம் செய்யும் காரியங்களைக் குறிக்கும்.) முன்னேற்றத்தைப் பெற ஒரு நாள் போதுமா? ஒரு விதை ஒரு நாளில் மரமாகிப் பூத்துக் காய்த்ததை நாம் கண்டதில்லை. அதே போலவே முன்னேற்றத்தைப் பெற ஒரு நாள் போதாது. அதற்கு உழைப்புடன் கூடிய பல நாட்கள் வேண்டும். பெரியபெரிய காப்பியங்களெல்லாம் வரி வரியாகத்தான் எழுதப்படுகின்றன. எமக்கான முன்னேற்றமும் படிப்படியான உழைப்பின்மூலமே கிடைக்கிறது.

ஒரு மனிதன் ஒரு பாறை மீது அடிமேல் அடியாக அடித்துக்கொண்டிருந்தான். நூறுவது அடியில் அப்பாறை பிளந்தது அம்மனிதன் சொன்னுன், ''நூறுவது அடியில் தான் இப்பாறை பிளந்தது. ஆனுல் இதற்கு முந்திய தொண்ணுற்றென்பது அடிகளும் இப்பாறை பிளப்பதற்குக் காரணமாக இருந்தனவென்று எனக்குத்தெரியும்'' அம்மனி

தனைப்போன்ற சளைக்காத உள்ளம் நம் எல்லோருக்கும் இருக்கவேண்டும். சிலர் ஒரு காரியத்தைச் செய்ய மிகுந்த ஆர்ப்பாட்டத்துடன் முன்வருவார்கள் ஆனால் தம் எண்ணத்தின்மீது கொண்ட அவநம்பிக்கையினலோ அல்லது சோர்வினலோ அதை அப்படியே இடையில் நிறுத்தி விடுவர். இத்தகையவர்கள் ஆரம்ப சூரர்கள். இவர்களைச் சோடாப்போத்தல் உற்சாகக்காரர் என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவர். சோடாப் போத்தலைத் திறந்தவுடன் நுங்கும் நுரையுமாகப் பொங்கிவழியும்; சிறிது நேரத்திற்குள் ஓசையில்லாமல் அடங்கிவிடும். அத்தகைய குணமுடையவர்கள் முன்னேறமுடியாது. மெதுவாகச் சென்றாலும் விடாப்பிடியாகச் செல்லவேண்டும். அமெரிக்காவிலுள்ள உணவுவிடுதியொன்றின் நுழைவாசலில் பின்வரும் வாக்கியங்கள் பெரியஎழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கின்றன. ''மேலேசெல்லுங்கள், விடாமுயற்சிக்கு ஈடாக இவ்வுலகில் எதுவுமே இல்லை, திறமை ஈடாகாது, திறமையிருந்தும் வெற்றிகாணாத மனிதர்கள் பலர் உள்ளனர்; கல்வி மட்டுமே ஈடாவதில்லை; இவ்வுலகம் படித்திருந்தும் பாதை தவறியவர்களால் நிறைந்திருக்கிறது; மேதை ஈடாகாது; பலன் காணா மேதைகள் என்பது பழமொழி; விடாமுயற்சியும் உறுதியும் மட்டுமே சர்வ வல்லமை படைத்தவை.'' அந்த உணவு விடுதியின் தலைவர் அறுபது வயதுக்கு மேல் பாடுபட்டு உழைத்து முன்னுக்கு வந்த ஒரு கோடீஸ்வரர்.

''எழுது'' என்றார் ஒரு ஞானி. ''ஏனென்றால் எழுது முன் சிந்திக்கிறாய்; எழுதிய பின் அதன்படி நடக்க முயல்கிறாய்; ஆகவே எழுது'' என்றார். இவ்வுலக மனிதர்களை செய்பவர்கள், பேசுபவர்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். செய்பவர்களாலேயே இவ்வுலகம் பெரிதும் முன்னேறி வருகிறது. உழைப்பாளிகளின் கை வண்ணமே நமக்கு உணவாகவும், உடையாகவும், வீடாகவும் அமைகிறது. உழைப்பவன் எவனே, அவன் நமக்குக் கீழே என்று நாம் எண்ணுகிறோம். இந்த மனேபாவம்நிலைத்திருக்கும் வரை, நம் நாடு இல்லாத நாடாக, இரந்து வாழும் நாடாகத்தான் இருக்கும் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

ஒரு சிறு கதை எழுதத் திணறிய, திண்டாடிய ஒருவர் இன்று பெரிய நாவலாசிரியர் என்று சொன்னால் நம்புவதற்குக் கஷ்டமாயிருக்கும். ஆனால் அந்தச் சாதாரண எழுத்தாளரோ ஓயாது உடும்புப் பிடியாக எழுதிக் கொண்டே இருந்தார். கைவண்ணம் தானே கூடியது; கற்பனை மெருகு பெற்றது; இன்று அவர் ஒரு சிறந்த எழுத்தாளராகப் போற்றப்படுகிறார். அவரது நண்பர்கள் அவரது எழுத்தைப் பரிகாசஞ் செய்த அன்றே, அவர் நொந்து தனது எழுத்திற்கு ஒரு முழுக்குப் போட்டிருந்தால் என்னவாகி இருக்குமென்று எண்ணிப் பாருங்கள்.

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர், ஒரு விஞ்ஞானி வானத்திலே மேகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்; அம்மேகங்கள் விலகும் என்று சில நிமிடங்கள் வரையில் திடமான நம்பிக்கையோடு எண்ணினர்; மேகங்கள் விலகின. அவர் இதைப் பல முறை செய்து காட்டினர். எண்ணங்களினல் உயிரில்லாத மேகங்கள் கூட விலகினவென்றால் உயிருள்ள நாம் மட்டும் ஏன் அவற்றால் முன்னேற முடியாது? ''கற்பனை

தான் உலகை ஆள்கிறது'' என்றான் நெப்போலியன். இரவு பூராவும் பிரெஞ்சு நாட்டுப் படத்தை வைத்துக் கொண்டு துருப்புக்களை அங்குமிங்கும் நகர்த்திக் கொண்டிருப்பானும் நெப்போலியன். அவனது கற்பனைகளே பின்னால் சரித்திரமாக மாறின. ஒரு குறிக்கோளைச் சுற்றிப் பின்னப்படும் எண்ணங்களே பலன் தருகின்றன. எண்ணினால் மட்டும் போதாது. அதற்கு மேல் நமக்கு அதில் ஈடுபாடு இருக்கவேண்டும். ''நீருக்குள் அமுக்கப்பட்டவன் வெளியே வருவதற்காக எப்படித் துடிக்கிறானோ, அத்தகை துடிப்பு வாழ்க்கையில் நமக்கு வேண்டும்'' என்றார் விவேகானந்தர். அத்தகைய துடிப்புடன் நம் எண்ணத்தைச் செயல் படுத்த வேண்டும். உண்மை என்னவென்றால், வாழ்க்கையை நாம் எண்ணுகிறபடி அமைக்க முடியும் — அதற்கு வேண்டிய மன உறுதி இருந்தால், திட்டங்களிருந்தால்., இல்லாவிட்டால் நாம் போகிறபடி போக வேண்டியதுதான். நம்மிற் பலர் ஒரு திட்டமில்லாமல் வாழ்கை என்னும் பயணத்தை மேற்கொண்டிக்கிறோம்.

நமது ஆழ்மனத்திற் பதிக்கப்படும் எண்ணங்கள் பூரண பலனைத் தருகின்றன. ஆழ்மனத்தின் சக்தியை அறிய இங்கிலாந்தில் சில சோதனைகள் செய்தனர். ஒரு மனிதனை அரை மயக்க நிலைக்குக் (ஹிப்னைடைஸ்) கொண்டு வந்து அவனது ஆழ்மனத்திடம் பின்வருமாறு கூறினார்கள். ''இப்போது உன்னுடலில் கசநோய்க் கிருமிகளைச் செலுத்தப் போகிறோம். இக்கிருமிகள் உன்னை ஒன்றும் செய்யாது; உனக்கு நோயுண்டாகாது.'' இவ்வாறு கூறி அக்கிருமிகளைச் செலுத்தினார்கள். அந்த நபர் மயக்கம் தெளிந்து எழுந்தார். அவரைப் பல காலம் சோதனை செய்ததிலிருந்து கசநோயின் சிறு அடையாளங் கூட அவரது உடலிற் தோன்றவில்லை என அறியப்பட்டது. அதே போல ஒரு பதினாறு வயதுச் சிறுவனுக்கு ஒரு தோல் வியாதி பிறவிக் குறைபாடாக இருந்தது. வழக்கமாக இத்தகைய பிறப்புக் குறைபாடுகளை நிவர்த்திக்க முடிவதில்லை. ஆனால் அச்சிறுவனை அரை மயக்க நிலைக்குக் கொண்டு வந்து ''அவனது உடல் இத்தோல் வியாதியை இயல்பாக நாளடைவில் குணப்படுத்தும் என்ற ஓர் எண்ணத்தை அவன் மனத்தில் பதிய வைத்தார் மேசன் என்ற ஆங்கில மருத்துவர். முதன் முறையாக ஒரு பிறப்புக் குறைபாட்டை ஆழ்மனத் தொடர்பு மூலம் மாற்றிவிட முடியுமென்று மருத்துவ உலகம் கண்டது. ஆழ்மனத்தில் பதியும் ஓர் எண்ணமானது எத்தனை வலு படைத்தது; அது என்னென்ன செய்யக்கூடும் என்பதை இச்சோதனைகள் நிரூபிக்கின்றன.

நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள மட்டமான அபிப்பிராயங்கள், சிறு வயதில் நம் பெற்றோர் கூறியதிலிருந்து விளைந்திருக்கலாம்; நமது ஆசிரியர்கள் கூறிய வாசகங்களின் விளைவாக எழுந்திருக்கலாம்; நமது நண்பர்களின் கேலியினால் உருவாகியிருக்கலாம்; ஏதோ ஒரு முறை கண்ட ஏமாற்றத்தின் போது எழுந்த சோக எண்ணங்களின் விளைவாக உருவாகியிருக்கலாம். எதுவாக இருந்தாலும் அதை நாம் வீசி எறிய வேண்டும், நமது கெட்ட எண்ணங்களை அக்கு வேறு ஆணி வேறாக அலசி அதைத் திரித்து, கரைத்து, சிறுமைப்படுத்தித் தூக்கி எறிய வேண்டும். மாற்றாக நம்பிக்கையும் நல்ல எதிர்காலம் பற்றிய கற்பனையையும் நமது ஆழ்மனத்திற் குடி புகச் செய்ய வேண்டும். நம்பீது அன்பையே பொழிந்த நமது பெற்றோரின் நல்லாசி மூலம் நல்லதே நமக்கு நிகழும் என்று திடமாக நம்பவேண்டும். இவ்வுலகில் இயற்கையின் படைப்பில் நமக்கு இடமுண்டு; உரிமையுண்டு என எண்ணவேண்டும். அப்போது நம் சூழ்நிலையே மாறுவதை நாம் காணலாம்.

மனிதனின் முன்னேற்றத்திற்கு எதிரிகள் இரண்டு. ஒன்று பயம்; மற்றது கவலே. பயம் வலு படைத்த வியாதி. கவலே மெல்ல அரிக்கும் நோய். பயத்தாலும் கவலேயாலும் மனிதன் தன் வாழ்வை நரகமாக்கிக் கொள்கிருன். ''அஞ்சுவதஞ்சாமை பேதைமை'' என்ருர் வள்ளுவர். பயப்படக்கூடிய விஷயங்களுக்குத்தான் நாம் பயப்பட வேண்டும். அதை விட்டு எடுத்ததற்கெல்லாம் பயந்து கொண்டிருப்பது பேடியின் செயலாகும். 'அஞ்சி அஞ்சிச் சாவார் — இவர் அஞ்சாத பொருளில்லே அவனியிலே' என்ருர் பாரதி. சிலருக்குப் பரீட்சையைக் கண்டு பயம்; வேறு சிலருக்கு மருத்துவர்களேக் கண்டு பயம்; இன்னும் சிலருக்கு மேலதிகாரிகளேக் கண்டு பயம்; மற்ருெரு சிலருக்கு தங்கள் மனேவியைக் கண்டு பயம். பயம், மனித இலட்சியங்களின் அடியில் இலேசாகக் குழி பறிக்கும் இயல்புள்ளது. அது மனித நம்பிக்கையை அசைக்கும்; தைரியத்தை ஆட்டங் காண வைக்கும். நோயினுற் சாகும் முன், சாவின் பயத்தால் எத்தனேயோ மனிதர்கள் இறந்திருக்கிருர்கள். எதிரியாற் தோற்கடிக்கப்படு முன், வெறும் பயத்தால் படைகள் நாட்டைப் பறி கொடுத்திருக்கின்றன. பயம் ஒரு நஞ்சு. நமது உடலில் பலத்த மாறுபாட்டை அது உண்டாக்குகிறது. ''எதைக் கண்டு பயப்படுகிறீர்களோ, அதைச் செய்யத் துவங்குங்கள் பயம் செத்துப் போவதைக் காண்பீர்கள்'' என்று கூறுகிருர் தத்துவஞானி எமர்சன். தண்ணீரைக் கண்டு பயப்படுகிறவன் குளத்தில் இறங்கி நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டும். பின் நீரைப் பற்றிய பயம் போகும். இரு வழிகளிற் பயத்தைப் போக்கலாம். ஏன் பயப்படுகிறேம்? எதற்காகப் பயப்பட வேண்டும்? தலேயா போய் விடும்? என்று தீவிரமாக பயத்தை அக்கு வேறு ஆணி வேருக அலசுவது முதல் வழி. அப்போது காரணமில்லாமல் நாம் பயந்து கொண்டிருக்கிறேம். என்பது விளங்கும். இரண்டாவது வழி, எதைக் கண்டு பயப்படுகிறேமோ, அதில் சிறிது சிறிதாக நுழைந்து காரியங்களேச் செய்யத் துவங்குவது. ''செயலே பயத்தைப் போக்கும் அருமருந்து'' என்கிருர்கள் அறிஞர்கள்.

ஒரு காரியத்தை நாம் செய்யப் புகும்போது, நாம் முன்பு பெற்ற வெற்றிகளே — அப்போது எம் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியை நினேக்க வேண்டும். நம் வாழ்வு சிறக்க வேண்டின் பயமோ கவலேயோ அற்ற நியாயமான நல்ல எண்ணங்களே ஆழ்மனத்திற் பதிக்க வேண்டும். எண்ணங்களே ஆழ்மனத்திற் பதிக்க அரை மயக்க நிலே தேவையில்லே. ''புலனறிவை ஓய்வு படுத்தி விட்டுக் கற்பனேயை வளர விடும்போது ஆழ் மனம் வேலே செய்கிறது'' என்கிருர்கள் இன்றைய மனநூலார். ''நாமாகத் தூண்டி விடும் ஹிப்னுடிச நிலேதான் கற்பனே'' என்று கூறுகிருர்கள் அவர்கள். அன்போடு, கனிவோடு பிறர் கூறும் யோசனேகளே நாம் ஏற்றுக் கொள்ளும் நிலே, நாமாகத் தூண்டி விட்ட ஹிப்னுடிச நிலேதான் என்று மன மருத்துவர்கள் கூறுகிருர்கள்.

பலரும் நினேப்பது போல இவ்வுலகில் எதுவுமே இனமாகக் கிடைப்பதில்லே. ஆசைப்படுபவர்கள் அதற்கு ஈடாக உடலுழைப்பையோ அன்றி பொருளேயோ கொடுத்தாக வேண்டும். தூங்கும் போது யாரும் ஞானியாகி விடுவதில்லே. 'மேதைத் தனம் என்பது தொண்ணூற்ருென்பது சதவீதம் உழைப்பும், ஒரு சதவீதம் உத்வேகமும்தான்'' என்ருர் ஒரு அறிஞர். வெற்றியென்பது ஒரு வரப்பிரசாதமல்ல. அதற்கான எண்ணப் பாதையை நாம்தான் வகுக்க வேண்டும். உழைப்பு என்னும் விதையை அவ்வெண்ணப் பாதையில் விதைக்க வேண்டியவர்களும் நாம்தாம்.

**T. பரஞ்சோதி**
*11ம் கணித விஞ்ஞானம்*

# மனித சுதந்திரம்.

மனிதனுடைய சரித்திரம் என்னவென்றால் அடிமைத்தனம், அநியாயம், மிருகத் தன்மை இவைகளின் சரித்திரமும் இவற்றோடு போராடிப் போராடி மெதுவாகவும் அநேக சங்கடங்கள் பட்டுக் கொண்டும் முன்னுக்கு வந்திருக்கிறானே அந்த வரலாறும் சேர்ந்ததுதான் மனிதனுடைய சரித்திரம்.

நயவஞ்சகம் கொடுங்கோலாதிக்கம் என்ற இரண்டு கழுகுகள் மனிதனுடைய சுதந்திரங்களைத் தின்று வந்திருக்கின்றன. அக்காலத்தில் படிப்பது, அழுவது, சிந்தனை செய்வது, ஆராய்ச்சி செய்வது போன்றன அனைத்தும் குற்றங்களாகக் கருதப்பட்டன. விஞ்ஞான சம்பந்தமான ஆராய்ச்சி குற்றமாகக் கருதப்படவில்லை.

சென்ற சில வருடங்களாக மனிதன் சுயமாக சிந்தனை செய்யாத மனிதன் அடிமை அவன் தனக்கு மட்டும் அல்லாது மற்றவர்களுக்கும் துரோகியாகிறான்.

இன்றைய சமயவாதி தனது ஆத்மாவாகிய கப்பலை வைதிகம் என்னும் துறைமுகத்தில் கட்டிப் போட்டு வெயிலிலேயே உலர்ந்து போகுமாறு விட்டுவைக்க விரும்புகிறான். பழைய கொள்கைகளாகிற பாய்மரத்தின் மீது பழைய அபிப்பிராயங்களாகிற கப்பல் பாய் அடிபட்டு அலறும் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதிலே திருப்தியடைகிறான். கப்பலின் இணைப்புகளும் பக்கங்களும் சந்துவிட்டு வெயிலிலேயே காய்ந்து போவதைக் காண்பதிலே சந்தோஷம் கொள்கிறான்.

எப்படியும் யுகத்திற்கு யுகம் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த நாட்டிலே பரம வைதீயர்களாக இருக்கப்பட்டவர்கள் இருநூறு வருடத்திற்குமுன் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்களை வேதப்புரட்டர்கள் என்று சொல்லித் தீயிட்டுக் கொழுத்தியிருப்பார்கள். எதிர்ப்பு, துவேஷம் மரணம் இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் தாங்கள் எதை உண்மையென்று நம்பினார்களோ அதற்காகப் பெருமையோடு தலை நிமிர்ந்து நின்ற ஒவ்வொரு மகானுக்கும் நாம் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

நமக்குள்ள சுதந்திரமோ குழந்தைகளுக்கும் காணப்படுகிறது. குழந்தைகள் சுதந்திரமாக இருக்கட்டும். அவர்களிடம் நியாயமாகவும் நாணயமாகவும் நீங்கள் நடந்து கொள்ளுங்கள். அவர்களிடம் இனிமையாக நடந்து கொள்ளுங்கள். அவர்கள் உங்களுடைய அன்பையும் சந்தோஷத்தையும் அதிகப்படுத்துவார்கள். ஆண்கள் விருட்சங்கள். பெண்கள் அந்த விருட்சங்களைத் தழுவியிருக்கும் கொடிகள். குழந்தைகள் அந்தக் கொடிகளில் மலரும் மலர்கள்.

இ. யோகச்சந்திரன்
தே. உ. க. த. ப, வகுப்பு முதலாம் வருடம்

# நினையாத நெஞ்சு உண்டோ?
# உருகாத உள்ளம் உண்டோ?

உலக சரித்திரத்தில் பிரதான புருஷர்கள் விஷயத்திலும் உலக மகாகாவியங்களின் கதாநாயகர்கள் விஷயத்திலும் சிற்சில முக்கியமான ஒற்றுமைகளைக் காணலாம். மனித குலத்திற்கு வாழ்வு அளிக்க வந்தவர்கள் எப்போதும் தங்கள் வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அனுபவித்திருக்கின்றனர்.

இராமர் காட்டிற்குச் சென்று சீதையைப் பறி கொடுத்துத் துன்பமுற்றார். கிருஷ்ணன் பிறந்த உடனேயே வேறிடம் சென்று மறைந்து வாழ்ந்தார். பஞ்சபாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாத வாசமும் செய்தார்கள். பாலன் பிரகலாதன் சொல்ல முடியாத கொடுமைகளுக்கு உள்ளானான். கௌதம புத்தர் தாமே தேடிச் சென்று கடுமையான தவவாழ்க்கையை மேற்கொண்டு அனுபவித்த கஷ்டங்களை அறியாதவர் யார்? முகம்மது நபி ஒரு சமயம் அவருடைய சொந்த ஊராகிய மெக்காவை விட்டு மெதீனாவுக்கு ஓடும்படி நேர்ந்தது.

உலகம் உய்யப் பிறந்த மகான்கள் சிலருடைய வாழ்க்கை முடிவு நெஞ்சு பதைக்கத் தக்க கூடிய சோக சம்பவமாக நேர்த்திருக்கின்றது.

அன்பு வழியைப் போதித்தருளிய ஏசுநாதர் தாம் பிறந்த நாட்டு மக்களின் தூண்டுதலினால் சிலுவையில் அறையப்பட்டார்.

அடிமைப்பட்டிருந்த பிரெஞ்சு தேசத்திற்கு விடுதலை அளித்த 'ஜோன் ஆப் ஆர்க் என்னும் வீரப் பெண்மணியைக் கிறிஸ்துவ சிரேஷ்டர்கள் சூனியக்காரி என்று கூறி உயிரோடு வைத்துக் கொளுத்தினர்.

உலகத்திலிருந்து அடிமைத் தனம் என்னும் பயங்கர இழிவைப் போக்கிய உத்தமர் ஆப்பிரஹாம் லிங்கன் அவருடைய சொந்த நாட்டுப் பாதகன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தாயைக் காட்டிலும் கருணை உள்ளவரான மகாத்மா காந்தி மனித குலத்திற் பிறந்த மாபாதகன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.


உலகத்தின் உத்தம புருஷர்கள் ஒன்று, வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். அல்லது அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு பெரும் சோகத்திற்குரியதாயிருக்கிறது.

**க. ஸ்ரீகரன்**
தே. உ. க. த. ப. வகுப்பு முதலாம் வருடம்

# பஞ்சமில்லை

பஞ்சமில்லை பஞ்சமில்லை பஞ்சமென்பதில்லையே
கஞ்சமுள்ள மனிதருக்கும் களவு செய்யும் கள்ளருக்கும்
கஞ்சியோடு கூழிருந்தும் கால்வயிற்று ஏழைகட்கும்
பஞ்சமில்லைப் பஞ்சமில்லைப் பஞ்சமென்பதில்லையே
சஞ்சலத்துப் பேய்களுக்கும் சாலங்காட்டி ஏய்ப்பவர்க்கும்
பஞ்சபாண்டவர் காலப் பழைமையான கொள்கைகட்கும்
விஞ்சிடத் துடித்து மாந்தர் பொருந்துகின்ற போர்களுக்கும்
பஞ்சமில்லைப் பஞ்சமில்லைப் பஞ்சமென்பதில்லையே -- ஆனால்
பஞ்சமுண்டு பஞ்சமுண்டு பஞ்சமுண்டு பண்பிற்கு
பஞ்சமுண்டு பஞ்சமுண்டு பஞ்சமுண்டு ஒற்றுமைக்கு
பஞ்சமுண்டு பஞ்சமுண்டு பஞ்சமுண்டு நியாயநீதிக்கு
பஞ்சமென்ற சொல்லினுக்குப் பஞ்சமென்பதில்லையே.

செ. யுவராஜன்
தே. உ. க. த. ப. வகுப்பு
(முதலாம் வருடம்)



# இக்கால

நாம் தற்போது விஞ்ஞான உலகில் திகழ்கிறோம். விஞ்ஞானம் தனது வியத்தகு வெற்றிகளால் மனிதனைப் புரட்சிக்குள்ளாக்கிவிட்டது. விஞ்ஞானம், கடலையும் ஆகாயத்தையும், மலைகளையும் வென்று பிரிபட்ட மனிதனை ஒன்றாக்கி வைத்திருக்கும் அளவு உச்ச நிலையை அடைந்து விட்டது. இயற்கையில் அமைந்தனவற்றை வென்றதால் விஞ்ஞானம் இயற்கையை வென்றதெனலாம்.

மற்றைய கண்டுபிடிப்புக்களிலும் பார்க்க விஞ்ஞானக் கண்டுபிடிப்பு முக்கிய இடம் வகிப்பதுடன் மிகப் பயனுடையதெனலாம். விஞ்ஞானம் நாம் செய்யும் வேலைகள் பலவற்றை தான் செய்து பணி புரிகிறது. கோடைகாலத்தில் வறண்டுகிடக்கும் அறைகளை மின்சாரம் குளிர வைக்கின்றது. மின்சார விளக்கு ஒரு கணப்பொழுதில் வீதிகளை பகல் போலாக்குவதுடன் வீடுகளையும் அப்படியே செய்கின்றது. மற்றும் சமையல்

# விஞ்ஞானத்தின்

நீர் இறைத்தல், வீடு துப்பரவு செய்தல், வீடுகள். பட்டினங்கள் மற்றும் பல இடத்துக்கு வெளிச்சம் கொடுத்தல், துணிகளை அயன் பண்ணுதல், காற்றைப்பெற, இது மட்டுமா? இன்னும் எத்தனை வேலைகளை விஞ்ஞானக் கண்டுபிடிப்பு மனிதனுக்கு செய்து கொடுக்கின்றது. ஒலி பரப்பல், தொழிற்சாலைகளில் பணிபுரிதல், நீரைக் கடத்தல், புகைவண்டி ஓட்டுதல் இன்னும் இப்படியே எண்ணிலடங்கா வேலைகளை செய்ய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உதவுகிறது.

திரைப்படம் இதுவும் விஞ்ஞானத்தின் இன்னுமொரு வியத்தகு சாதனை. திரைப்பட இயந்திரம் மின்சாரத்தால் இயங்குகின்றது. இத்திரைப் படத்தால் பொழுது போக்கு மட்டுமல்ல சில நல்நெறிகள், அறிவு வளர்ச்சி ஆகியவற்றையும் பார்க்கலாம். ஆகவே அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் எப்படி உதவுகின்றது.

இன்னொரு வியப்பு. நீராவிக் கப்பல்களும், நீராவிப் பொறிகளும், விஞ்ஞான வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணிவிட்டன. அதாவது துண்டித்துக் கிடந்த அகில உலகத் தொடர்பை விமானங்களும் கப்பல்களும் இணைத்து வைத்து இருக்கின்றது.


# வியப்புகள்.

இயந்திரத்தை எடுத்தால் அதுவும் விஞ்ஞான பயனேயாகும். அது எமது வாழ்க்கை வாய்ப்புக்களை அதிகமாக உண்டுபண்ணி வேலைகளை குறுகிய நேரத்தில் செய்து கொடுக்கின்றது. இயந்திரம் மனிதனை நாகரீக உலகில் திகழவைக்கின்றது. கைத்தொழில் மட்டுமா? இல்லை. உழவு, அறுவடை ஆகிய தொழில்களையும் விஞ்ஞானம் செய்கின்றது. பரீட்சையில் விடைகளின் முடிவுகளையும், கூட்டுத் தொகையைக் கூட்டிப் போடவும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

அணு சக்தி விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பாகும். ஆதிகால மனிதன் நினைத்துக் கூடப் பார்க்காத சில காரியங்களை அணு சக்தி செய்கிறது. சந்திரன் என்றால் என்னவென்று தெரியாத மனிதன் ஆதிகாலத்தான். ஆனால் தற்கால மனிதனை அணு சக்தி சந்திரனிலேயே கொண்டுபோய் விட்டுவிட்டது. இன்றைய நிலையில் விஞ்ஞானம் இல்லாமல் வாழ முடியாது.

விஞ்ஞானத்தைப் பற்றிக் கூறும்போது பலவாறு கூறலாம். ஆனால் சிலதீமைகளும் இருக்கின்றன. இரு நாடுகளுக்கிடையே போர் ஏற்பட்டால் அணுசக்தி ஒரு நிமிடத்தில் பல கோடி மக்களை மடியச் செய்துவிடும். விஞ்ஞானம் ஏற்பட்டதால் மனித வலுவும் குறைந்துவிட்டது. தீமைகள் மிகக் குறைவே. நன்மைகள் ஏராளம், எராளம். பூவும் மணமும்போல, நகமும் சதையும்போல, தேனும் இனிப்பும்போல விஞ்ஞானமும் மனிதனும் பிரிக்க முடியாதெனவாயிற்று.

**க. செல்வச்சந்திரபோஸ்**
தே. உ. க. ப. த. வகுப்பு
(முதலாம் வருடம்)



---

சோம்பல் தீய குணம், வறுமை என்னும் மனிதனின் மிகப் பெரிய எதிரிகளை அழிக்கும் வல்லமை பெற்றது உழைப்பு.

— வால்டேர்

# பேயா? அது எங்கே?
## எனக்குக் காட்டுங்கள்!
## ஆனால் கடவுள் இருக்கின்றான்.

**பேயா?** அதுஎங்கே? எனக்குக் காட்டுங்கள்! எனக்குத் தெரியாது!! என்னைப் பொறுத்த வரை இவ்வுலகில் பேய் இருப்பதாக நம்பிக்கை இல்லை! ஏன்? கடவுள் இருக்கிறது என்ற நம்பிக்கையே இல்லை!! உண்மையில் இல்லவே இல்லை!!! பேயைப்பற்றிச் சிந்தித்த நாம் கடவுளைப் பற்றியும் சிந்திப்போம். ஆரம்பத்தில் நான் கடவுள் நம்பிக்கை அற்றவன். இப்போதோ கடவுளை நம்புகின்றேன். காரணம் சிறிது சிந்திப்போம்.... ம்...... சிந்தி... சிந்தி.

சிந்தனையின் முடிவு எம் உள்ளத்தில் பல் வேறுபட்ட கேள்விகள். எம்மை இப்படி இயங்க வைப்பவன் யார்? யாரோ எமக்கு மேலானவன்தான்! அதைத்தான் எமது முன்னோர் கடவுள் என்று வழிபட்டார்கள். நாமும் கடவுள் என்று வழிபடுகின்றோம். ஆம் எதையும் சிந்தித்து செயற்படவேண்டும். சிந்தனையின் முடிவு நிச்சயம் கடவுள் இருக்கின்றான். கடவுள் நம்பிக்கை இருக்கின்றது.

ஆம் உண்மைதான்! ஒவ்வொருசமயத்தவனும் கடவுளை இல்லை! இல்லை!! எமக்கு மேலான ஏன்? எம்மை! இந்தஉலகத்தை இயக்கவைக்கும் ஒருவனை ஒவ்வொரு பெயர் சொல்லி வணங்குகின்றார்கள். பொதுவாக மனிதனின் தாகத்தை தீர்க்கின்றது ஒரு பொருள் அதைமொழியில் வேறுபடுத்தலாம். தமிழில் ''தண்ணீர்'' என்றும், ஆங்கிலத்தில் ''வாட்டர்'' என்றும், சிங்களத்தில் ''வத்துறு'' என்றும் அழைக்கின்றோம். அழைக்கும் விதம், குறிப்பிடும் பெயர் வேறேதவிர பாவிக்கும் விதம் ஒன்று. அதுபோல் இவ்வுலகை இயங்கவைப்பவன், எல்லோருக்கும் ஒருவன். பெயர்கள் வேறுபடலாம் ஆனால் எமக்கு மேலான ஒரு சக்தி உண்டு. அது ஒன்றுதான் பல அல்ல அச்சக்தியே கடவுளாகும். கடவுளுக்கு உருவமில்லை அவன் ஆத்மஜோதியாகவே காட்சியளிப்பான். பாலில் வெண்ணெய் உண்டு வெண்ணெய்யில் நெய்உண்டு ஆனால் யாவும் மறைபொருளாக ஒன்றுக்குள் ஒன்றாக கலந்திருக்கும். இதேபோல் கடவுளும் நம்முள் கலந்திருப்பான். கடவுள் இருக்கின்றான்! இருக்கின்றான்!! அது உண்மை! உண்மை!! நான் நம்புகிறேன்.

ஆனால் பேய் என்பது இவ்வுலகில் இல்லை! சிலவேளைகளில் மனிதர்கள் பேய்களாக மாறுகிறார்கள். பேய்களை உலகில் உண்டாக்கியும் விடுகிறார்கள். பேய் என்று ஒன்று அது எங்களை அடிக்கும் கடிக்கும் என்ற சில விடயங்களை பெரியோர்களே கூறு

வதனுல் மனிதர் நம்பி நடுஇரவில் வெளியேபோகப் பயப்படுகின்றூர்கள். ஆனுல் பேய் மனிதனைக் கண்டால் பயந்துவிடும். இந்த உண்மை மனிதனுக்குத் தெரியாது.

பேய்க்குப் பயந்தமனிதன் அப்படி நடு இரவில் போனுலும் பேயைநினைத்துப் போவதனுல் கற்பனைப்பேய் அவன்முன் உருவாகும். சிலசமயம் பின்புறம் தேங்காய் விழுந்தால் போதும் அதுபேய்தான் என்று திரும்பிப்பாராது ஓடுகிருன் வழியில் சிலர் வந்தால், அங்கே பேய் வருகிறதென்றூல் போதும் அவர்களும் சேர்ந்து ஓடுகின்றனர் காரணம் அவர்கள் பேயைப் பார்த்தது இல்லை பேயைப்பற்றி கேள்விப்பட்டதுண்டு. பேயை எப்படி அவர்கள் பார்க்கமுடியும் அவனே ஒரு பேய்தான்.

ஒரு துணிந்தவன் அங்கு சென்று பார்த்தால் ஒன்றும் இருக்காது. ஆனுல் அங்கு போவதற்கு ஆள் இருக்காது. பேய்க்குப் பயந்த மனிதன் எப்படிப் போவான்? உண்மையில் பேய்தான் அவனுக்குப் பயம். பேய் இருந்திருந்தால்.

இறந்தவர்களைச் சிலர் பார்த்ததாகக் கூறுகின்றனர். சிலர் உண்மை சொல்வர் சிலர் தங்கள் கண்கள் திறமானவை தங்கள் கண்களுக்குத்தான் தெரியும் என்று பொய்யும் கூறுவர். மனிதனின் இறந்த ஆவி இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம் அது மனிதனை எதுவும் செய்யாது மனிதப்பேய்க்கு அந்த ஆவிகள் பயந்தவை.

பேய் இருக்கிறதா எங்கே? அதை நேரில் பார்க்கமுடியாது பேய் இல்லை! பேய் இருக்கும் இடத்தை காட்டும்படி கூறிய நான், பேய் இருக்கும் இடத்தை காட்டுகின்றேன். ஆம் அதை நேரில் பார்க்க முடியாது இவ்வுலகில் அது ஒளித்திருக்கிறது. எங்கே? தெரியாதா? உங்கள் மனதில்! ஆம்... ஒவ்வொரு மனிதனுடைய மனதில்தான் ஒளித்திருக்கின்றது.மனித மனம்தான் பேய். ஒவ்வொரு மனிதனின் மனம்தான் பேய். பேய் இல்லை எனக் கூறிய நான் பேய் இருக்குமிடத்தை காட்டி இருக்கின்றேன் அங்கே போகாதீர்கள் உங்கள் உயிருக்கு ஆபத்து. பேய் இருக்கின்றது; பேய் இருக்கின்றது!!

**M. பிரேமலிங்கம்**
தே. உ. க. த. ப. வகுப்பு
முதலாம் வருடம்



# செய் திட்டத்தில் நமது பங்கு

இலங்கை அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் H. N. C. E. வகுப்பில் படிக்கும் மாணவர்கள் செய்திட்டம் என்னும் பாடமொன்றையும் செய்முறை மூலம் பயின்று வருகின்றனர். செய்திட்டத்தின் நோக்கமாவது பொது மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை செய்வதே ஆகும். இதன் மூலம் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு மாதிரியான செய்திட்டம் உண்டு. இதன் மூலம் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளைக் காணமுடியும் இதனுல் நமது நாட்டிலும் விஞ்ஞானிகள் உருவாகமுடியும்.

இத்தச் செய்திட்டம் அத்தியாவசிய உப தேவைகளை உள் அடக்கி இருக்கவேண்டும். அதாவது சுகாதார, போக்கு வரத்து, வேலை வாய்ப்பு, கல்வி வசதிகளையும் மற்றும் பாதுகாப்பு, ஓய்வும் இன்பமும் போன்ற அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்' இத்திட்டத்திற்கு சகல அரசாங்க நிறுவனங்களும் தொழிற்சாலைகளும் எந்த நேரத்திலும் உதவி அளிக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவும் பிறப்பித்துள்ளது.

பொது மக்களுக்கு உள்ள பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து அதைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்தல் H. N. C. E. வகுப்பில் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனதும் கடமை ஆகும். செய்திட்டத்திற்கு உதாரணமாக கிராம அபிவிருத்தித் திட்டங்கள், மேற்பரப்பு வடிகால்த் திட்டங்கள் போன்றவற்றைக் கூறலாம்.

எமது கல்லூரியும் செய்திட்ட வேலையில் ஈடுபட வேண்டிய அவசியம் இருப்பதால் நாமும் பொது மக்களின் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்தோம். இதன்படி தீருவில் குளத்தைத் திருத்துவதென முடிவு செய்தோம். இக்குளம் பற்றி அறிய முற்பட்ட போது இக்குளத்தை நகர சபை திருத்துவதாக அறிந்தோம்.

இதனுல் நாம் புதிய முயற்சி ஒன்றில் இறங்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதனுல் நாம் மீனவர்களின் பிரச்சனைகள் பற்றி அறிவதெனத் தீர்மானித்தோம். இதன்படி அவர்களிடமிருந்து பெற்ற தரவுகள் மூலம் அவர்களது வள்ளங்களில் ''பாசி நுண்ணங்கிகள், உயிரினங்கள் போன்றன தாக்குகின்றன என்றும், இதன் மூலம் வள்ளங்களில் பெரும்பாலான சேதம் ஏற்படுகிறதென்றும், இதற்கு ஆயிரக்கணக்கான ரூபாவில் பணம் செலவளிக்க வேண்டி இருக்கிறதென்றும் அறிந்தோம்.'' இதனுல் எமது ஊரில் பெரும் பாலானேர் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் இந்த உயிரினங்களைக் கட்டுப்படுத்த வழி வகுத்தலை எமது செய்திட்டமாக எடுத்துக் கொண்டோம்.

இதன்படி நாங்கள் எமது வேலைகளைத் தவணைக்கேற்ற முறையில் பிரித்தோம். இதன் பின்பு இதன் செலவினங்களைக் கணித்து 1000 ரூபா அளவில் செலவு ஏற்படு மென அறிந்தோம். இதன் பின்னர் நாங்கள் வினாக் கொத்து ஒன்று தயாரித்து அவ் வினாக்களுக்கு மீனவர்களிட மிருந்து விடை பெற்றோம். இதன்படி அவர்கள் எமது செய் திட்டத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் என்பதையும் அறிந்தோம்.

இதற்காக நாங்கள் கட்டைகளைப் பல்வேறு சூழலில் கட்டி அதிலுள்ள சில உயி ரினங்களையும் வள்ளங்களிலுள்ள உயிரினங்களையும் பரிசோதித்து வகை கண்டறிந்துள் ளோம். இதன் பின்னர் தற்போது இந்த உயிரினங்களைக் கட்டுப்படுத்த சில இரசாயன பொருட்களைப் பயன் படுத்தி பரிசோதனைகள் நடத்தி வருகிறோம்.

இச் செய்திட்டம் வெற்றி பெற்றால் நமது ஊர் மீனவர்களுக்கு மட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள சகல மீனவர்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக அமையும். நாம் செய்யும் இப்பரிசோதனையில் இரசாயனப் பொருட்களுடன் சில மைகளைக் கலந்து இவ் உயிரினங்களைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறோம். யாராவது தமது வள்ளங்களில் மை பூச அனுமதிப்பார்களானால் சிதம்பரக் கல்லூரி H. N. C. E. (1976--1977) மாண வர்களுடன் தொடர்பு கொள்ளும்படி தயவுடன் வேண்டுகிறேன்.

இவ்வருடம் பொதுச் செய் திட்டமாகிய "நீர் ஊற்றுக்களைப் பருசோதித்தல்" என்ற செய்திட்டத்திலும் நாங்கள் பங்குபற்றினோம். இச் செய்திட்டப் பாடம் பொது மக்களுக்கு நன்மை செய்வதற்கெனப் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங் கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ளது.

**இ. யோகச்சந்திரன்**
தே. உ. க. த. ப. வகுப்பு முதலாம் வருடம்



---

தூய்மையான மனச்சாட்சியைப் போன்றதொரு மிருதுவான இதமான தலையணை எதுவும் இல்லை.

— திருக்குர்ஆன்

# பூமியை வெட்டிக் குடைகிறார்கள்; பெற்றோலியம் எடுத்துக் குவிக்கிறார்கள்.

பூமிக்கு அடியில் இருக்கும் பெற்றோலியம் எண்ணெய் செல்வத்தை பெறுவ தற்கு உலகத்தின் பல பாகங்களில் நில ஆராச்சி நிபுணர்கள் பாடுபட்டு உழைக்கிறார் கள். பூமியை வெட்டி குடைகிறார்கள். அப்படி குடைந்த பூமியிலிருந்து பெற்றோலி யம் என்ற எண்ணெயைக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். எத்தனையோ கோடிக் கணக்கான ரூபாய்களையும் ஏராளமான தொழிலாளிகளின் உழைப்புச் சக்தியையும் கொண்டு பெற்றோலியம் எண்ணெய் எடுத்து மக்களுக்கு வழங்குகிறார்கள். பூமிக்கு அடியில் பல இடங்களில் சந்தேகத்தின் பேரில் எண்ணெய் கிணறுகள் தோண்டுகிறார் கள். சில இடங்களில் பூமிக்கு அடியில் எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். பிறகு அந்த எண்ணெயை சுத்தம் செய்து பிரிக்கிறார்கள். அப்படி சுத்தம் செய்து பிரிக் கப்பட்ட பொருட்கள் நமது வாழ்க்கைக்கு எத்தனை எத்தனையோ வகைகளில் உதவு கின்றன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் உள்ள எண்ணெய் விநியோக ஸ்தா பனங்களான ஸ்டாண்டர்டு வாக்குவம் எண்ணெய் கம்பெனி, பர்மா ஷெல் எண்ணெய் கம்பெனி, கால்டெக்ஸ் எண்ணெய் கம்பெனி ஆகிய மூன்றும் பெற்றோலியம் எண் ணெய் சுத்திகரிக்கும் ஆலை அங்கே நிறுவுவதற்கு இந்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து சென்ற 1954-ம்ஆண்டு ஜூலை மாதம் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை திறக்கப்பட்டதை நேயர்களில் பலர் அறிந்திருக்கலாம். தெரியாதவர்கள் இப்பொழுது தெரிந்துகொள் ளுங்கள். பம்பாய்க்கு அருகில் உள்ள திராம்பேத்வீம் இல் இவ்வாலையை நிர்மாணித்தி ருக்கிறார்கள்.

## சர்வம் எண்ணெய் மயம்.

வீட்டை விட்டு தெருவில் அடி வைத்தவுடன் நாம் காணும் பொருட்களை எல் லாம் சற்று கூர்ந்து பாருங்கள். நீளமான தூசி இல்லாத கன்னங்கரேல் என்று கரு நாகப்பழம் போல் போடப்பட்ட தார். அந்த வழ வழப்பான சாலையிலே பாம், பாம் என்று மோட்டார்கார்கள் ஓடுகின்றன. ஆண்களும் பெண்களும் சைக்கிளை மிதித்து ஓடுகிறார்கள். சனங்களை ஏற்றிக்கொண்டு பஸ்கள் விரைகின்றன; எமக்கு தேவையான சாமான்களை ஏற்றிக்கொண்டு பஸ்கள் விரைகின்றன; எமக்கு தேவையான சாமான் களை ஏற்றிக்கொண் லொறிகள் விரைகின்றன. டர்... ர்... ர் டர் ...ர் ...ர் என்று சத்தம் கேட்டு மேலே அண்ணாந்து பார்த்தால் ஆகாய விமானம் உல்லாசமாக பறந்து சென்று கொண்டிருக்கிறது. வீல் என்று கத்திக் கொண்டு புகையைக் கக்கிக் கொண்டு புகைவண்டி கிளம்புகிறது. கடற்கரைக்குச் சென்றால் குமிறிக் கொண்டிருக்கும் பயங்க ரக் கடலைப் பிளந்து கொண்டு பெரிய கப்பல் ஒன்று ஒய்யாரமாக போகிறது. இவை எல்லாம் இடங்குவதற்கு தேவையானது பெற்றோலியம் எண்ணெய்தான்.

தூசி இல்லாத சாலை அமைக்க தார் எண்ணெய்; பஸ், லொறி ஓட டீசல் எண்ணெய்; மோட்டார் கார் ஓட பெற்ரோல்; சைக்கிளை கஷ்டமில்லாமல் மிதிக்க கிறிஸ் விமானம் பறக்க ஒவியேஷன்காஸோலின்; ரயில் வேகமாக ஓட லூப்விரிக்கோசன் எண்ணெய்; கடலில் கப்பல் செல்ல பியூயல் எண்ணெய். இப்படி எந்த இயந்திரம் இயங்குவதற்கும் பெற்ரோலியம் எண்ணெய் தேவை. கதவு, நாற்காலி, மேசை பளபளக்கிறது. மரத்தைப் பாது காப்பதற்கு வானிஷ் தேவை. புஷ்பங்களின் நறுமணம் வீசுகிறது; மனத்தைக் கவரும் இனிய மணம் எங்கிருந்து வருகிறது என்று பார்த்தால் கை நகங்களில் பள பளவென்று சிவப்பு வர்ணம் மருதானி போல் பூசிக்கொண்டு ஒரு கல்லூரி மாணவி வருகிறுள். அவள் கை நகத்தின் சிவப்பு வர்ணத்தைப் பார்த்துப் பார்த்து வியக்கிறேன். அந்த நகச் சாயம் கூட பெற்ரோலியம் எண்ணெய்தான். யாரோ பாடுகிறுர்கள்; அருமையான பாட்டு; யார் பாடுகிறுர்கள் என்று விசாரிக்கிறேன்; அது கிராமபோன் ரிக்கார்ட்டு வைத்துக் கொண்டிருக்கிறுர்கள் என்று அறிகிறேன். மெழுகு வர்த்தி, மண்ணெய், போன்ற வகைகளுக்கும், வேறு விதமான மருந்துகளுக்கும் பெற்ரோலியம் பயன்படுகிறது. எங்கும் எண்ணெய் மயமாகவே இருக்கிறது. சர்வமும் எண்ணெய் மயம்தான்.

## எண்ணெய் பிறந்த கதை.

உலகம் அப்படியே இருப்பதில்லை. உலகம் அடிக்கடி மாறுகிறது. சிற்சில சமயங்களில் இயற்கையின் அமைதி குலைந்து சிதறுகிறது. இயற்கைக் குழப்பங்கள் உண்டாகி புயல் வீசுகிறது; பூமி ஆடுகிறது; பூகம்பம் ஏற்படுகிறது; பூமி வெடிக்கிறது; அக்கினிக் குழம்பு குழ குழவென்று உருகி ஓடி அதன் கொதிக்கும் அலைகள் ஆறிவிடுகிறது. ஒன்றுடன் ஒன்று மோதி வெடிப்பதெல்லாம் மின்னல் வேகத்தில் நிகழ்ந்து விடுகின்றன. இவை போன்ற கற்பனை செய்து பார்க்க முடியாத நிகழ்ச்சிகள் ஏற்படும்போது இயற்கையில் எல்வளவோ மாற்றங்கள் ஏற்படுகின்றன. காடு, மலை, கிராமம், பட்டணம் முதலியன இருந்த இடம் எல்லாம் பல யோசனை தூரம் மண்தான். கடல் இருந்த இடமும் மண்ணுகி விடுகிறது. காலப் போக்கில் இவை இறுகி சில கற்பாறையாகவே மாறி விடுகின்றன. இயற்கையின் மாறுதலின் போது மண்ணுக்குள் அழுந்திய மிருகங்கள், மீன்கள், காடுகள் இவையெல்லாம் நசுங்கி பிழியப்பட்டு இவற்றில் உள்ள கொழுப்புக்கள் எண்ணைகள் வடிந்து பூமிக்கு அடியில் உள்ள பாறைகளில் உறைந்து அதற்கு மேல் வடிய இடமில்லாமல் குளம் போல் தேங்கியும் நிற்கிறது. சில பாறைகளை உடைக்கும் போது சில ஜீவராசிகளின் ஓடுகள் மக்காமல் அப்படியே இருப்பதாக நில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறுர்கள். பூமியின் அடியில் குளம் போல் தங்கி இருக்கும் திரவ பதார்த்தம் 'குருடோயில்' என்று அழைக்கப்படும்.

1859ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி 'கர்னல் டிரேக்' என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இவருக்கு 'வில்லியம் ஸ்மித்' என்பவர் துணையாக இருந்தார். எண்ணெய்க்கிணறு கிண்டினுர்கள். இவர்கள் கிண்டிய கிணற்றின் ஆழம் 69 அடியக்கும். ஆனுல் இப்பொழுது பத்தாயிரம் இருபதாயிரம் அடி ஆழத்தில் கிண்டுகிறுர்கள். முதலில் அந்த எண்ணையை மருந்தாகப் பாவித்தார்கள் போகப்போக தொழிற்துறைக்கு உதவும் என உணரத் தொடங்கினுர்கள். பிறகு அந்த அதிசய எண்ணெய்யை விளக்கு எரிப்பதற்கு பயன்படுத்தினுர்கள். மண்ணெய்யுடன் கிடைத்த பெற்

றோலியத்தை கழிவுப் பொருளாகப் பயன்படுத்தி கடலில் பாய்ச்சினார்கள். அதைப் பாவித்தால் ஆபத்து வந்து விடும் ஆகையால் கடலில் பாய்ச்சினார்கள். ரட்டோ என்ற விஞ்ஞானி புது மாதிரி இயந்திரம் ஒன்றைச் செய்து அதற்கு பெட்ரோலை விட்டு ஓட்டிக் காண்பித்தார். அது முதல் உலகநாகரீகமே மாறிவிட்டது.

முன்நாளில் எண்ணெய்க் கிணறுகள் கண்டு பிடிக்கப்பட்டது போல் இப்பொழுது கண்டு பிடிக்கப்படுவது கடினம். சாதாரணமாக நாம் வீட்டுத் தோட்டத்திலோ அல்லது வேறு இடங்களிலோ தண்ணீர் குழாய் இறக்குவதற்கு கையாளுகின்ற முறையையேதான் பயன்படுத்துகிறார்கள். சாதாரண குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு பெரிய பெரிய இரும்பு ஸ்தம்பங்களைக் கொண்டு முக்கோண வடிவத்தில் கோபுரம் போல் கட்டி மண்ணைக் குடைந்து பூமிக்குள் இறக்குவதை நம்மில் பலர் பார்த்திருக்கிறார்கள். ஒரு சில அடிக்கு தோண்டுவதற்கு இவ்வளவு பெரிய கோபுரம் போல் கட்டுகிறார்கள், பல்லாயிரக் கணக்கான அடிகள் பூமிக்குள் குடைவதற்கு எவ்வளவு பெரிய இரும்புக் கோபுரம் வேண்டும் என்பதை ஊகிக்க முடிகிறதல்லவா?

முன்பெல்லாம் அதாவது ஆரம்பகாலத்தில் பண்படாத எண்ணெய்யை மரப்பீப்பாய்களுக்குள் அடைத்து குதிரை வண்டி மூலமாக கொண்டு சென்றிருக்கிறார்கள். கிணறுகள் அதிகமாகத் தோண்டத் தோண்ட அதிக மரப்பீப்பாய்களும் குதிரைகளும் கிடைப்பது கடினமாக இருந்தது. அத்துடன் ஏராளமான எண்ணெய்ப் பொருட்கள் சேதமடையத் தொடங்கியதுடன் அபாயங்களும் ஏற்படத் தொடங்கின. இந்த அனுபவங்களைக் கொண்டு குழாய்கள் மூலம் எண்ணெய் எடுத்துச் செல்லும் முறையைக் கண்டு பிடித்து ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்லத் தொடங்கினர். இப்பொழுது நூற்றுக் கணக்கான மைல்கள் குழாய் மார்க்கமாக கொண்டு செல்கிறார்கள் பெட்ரோலியம் எண்ணெய் இவ்வளவு தூரம் குழாய்களில் பிரயாணம் செய்யும் போது நடுவில் அதன் ஓட்டம் தடைப்படலாம். மேலும் ஏதாவது அடைப்புக்கள் தடைகள் ஏற்படாது ஆற்று நீர் போல ஜிலு ஜிலு என்று ஓட வேண்டுமல்லவா? அதற்காக அது போக வேண்டிய இடத்தை நோக்கித் தள்ளும் இயந்திர சாதனங்களைப் பொருத்தியிருக்கின்றார்கள். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வில்லியம் ஸ்மித் கண்டு பிடித்த எண்ணெய் இப்போது எத்தனையோ ஆக்க காரியங்களுக்கு உதவுகின்றன. நாம் பெட்ரோலையும் மண்ணெண்ணெய்யையும் சிந்தித்துப் பார்த்தால் எத்தனை மாதங்களுக்கு முன் உற்பத்தியாக்கி எவ்வளவு நீண்ட தூரம் பிரயாணம் செய்து நம் கைக்கு எட்டுகிறது. இப்பொழுது எமது தாய் நாடாகிய இலங்கையில் கூட எண்ணெய்க் கிணறுகளுக்காக ஆராய்ச்சி செய்கிறார்கள் பெட்ரோலியம் எண்ணெய்ப் பொருட்கள் இன்றைய காலப் போக்கின்படி இல்லாவிட்டால் ஒருவரும் உயிருடன் வாழ மாட்டார்கள். கஷ்டப்படுவார்கள். அந்தரப்படுவார்கள். ஒரு நாள் மண்ணெண்ணெய் இல்லாவிட்டால் மக்கள் படும் துயரத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

ஆர். பாலேஸ்வரி
10 C

# வெள்ளிக்கிழமை

மேதினியைக் குலுக்கி மனிதகுல மேதைகளைக் கல்லறைக்கு குடியேற்றிய நாள். தரணி வாழ அரும்பாடுபட்ட அரசியல் தலைவர்களை மயான மாளிகைக்கு அனுப்பிய நாள்.

புவனம் வாழ, புதுமை மிகு திட்டங்களைப் புதுப்பித்துக் கொடுத்த புதுமை விரும்பிகளைப் புல்லர்கள் சுட்டுக் கொலை செய்த புன்மை மிகு நாள்.

உலகம் உயர்ந்த மனிதாபிமானத்தோடும் - நெறியோடும் - நீதியோடும் - சமத்துவத்தோடும் - சகோதரத்துவத்தோடும் - உரிமையோடும் வாழ வேண்டும் என்பதற்காக உழைத்த உயர்ந்த மனிதர்களை - உன்மத்தர்கள் சிலர் அவர் உடல்களை மட்டுமே கொன்று குவித்து சமாதி எழுப்பிய கொடுமை மிகுந்த கோரநாள்.

வெள்ளிக்கிழமையிலே கொல்லப்பட்டவர்கள் அனைவரும் சாதாரண மக்களல்ல.

வரலாறு அவர்களை மறக்கலாம். ஆனால் இந்த வையகம் உள்ளளவும் மனித இனத்தின் கடைசிச் சிசு அழியும் வரையும் மறக்க முடியாதவர்கள்.

ஆம் வெள்ளிக்கிழமை இன்றைய 252 கோடி உலக மக்களின் நெஞ்சங்களிலே நிலைத்து வேரூன்றி - கவனத்தில் பசுமையாகி - வரலாற்றிலே ஆயுள் பெற்ற பெரும் மேதைகளை விழுங்கி ஏப்பம்விட்ட நாளாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

கல்வாரி மலையிலே இரண்டு கள்வர்களைச் சிலுவையில் அறைந்தனர். அதே நேரத்தில் கருணை வழியும் இதயம் படைத்த ஒருவரை கல்நெஞ்சர்களான யூதர்கள் சிலுவையிலே ஆணி அறைந்து - பதை பதைக்கத் துடி துடிக்கக் கொன்றார்கள்.

''ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு''

''உன்னை நேசிப்பது போல மற்றவர்களையும் நேசி'' என்று ஏறு போல் முழக்கமிட்ட அஞ்சா நெஞ்சன், கருணை தவழும் பண்பினரான ஏசுவை மரணக் கோலத்தில் கண்ட நாள் வெள்ளிக்கிழமை.

''நான் யாரையும் அடிமைப்படுத்தமாட்டேன். அதற்காக நான் யாருக்கும் எஜமானனுகவும் இருக்கமாட்டேன்'' என்று வீர முழக்கமிட்டவர் 'ஆபிரகாம் லிங்கன்' என்ற அந்த அமெரிக்கச் சோதியை நாடகக் கொட்டகையில் 'ஜான்வில் சிஸ்பூத்' என்ற அற்பன் தனது துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கிப் பிணமாக்கி இழிவைத் தேடிக் கொடுத்த நாள் வெள்ளிக்கிழமை.

''சுதந்திரம் எனது பிறப்புரிமை. இதை வழங்கியவன் இறைவன். என்னை அடிமையாக்க எந்த மனிதருக்கும் உரிமையில்லை. வெள்ளை ஏகாதிபத்தியம் இந்திய மண்ணில் உருவெடுக்குமானுல் இந்திய மக்களின் உயிர் ஒரே நாளில் அழிந்தொழியட்டும்'' என்று தென்றல் நடைப் பேச்சால் புயல் உணர்ச்சியை இந்திய மக்களிடையே புகுத்தியவர்.

பிரித்தானிய ஆட்சி என்ற அலிமாவின் பிடரியைப் பிடித்து உலுக்கி வெளியேற்றிய விடுதலைவீரர் - மகாத்மா காந்தியடிகளை மதவெறியன் கோட்சே உயிரைக் குடிக்க அனுமதித்த நாள் வெள்ளிக்கிழமை.

அதே வெள்ளிக்கிழமை தான் சிரித்த வண்ணம் *1963* நவம்பர் திங்கள் *22*-ம் நாள் வைகறையின் விளிம்பிலே இருந்து மீண்டும் முழங்கியது.

முத்துக்கடல் வழக்கம் போல அலைக்கரத்தைக் கரையிலே மோதித்திரும்பியது. பூக்கள் அவிழ்ந்தன; ஈக்கள் பாடின; சுனைநீரில் சூரியனின் காற்றை உருவி வானவில்லை உருவாக்கிக் காட்டிற்று; புள்ளினங்கள் நல்லிசை விரவி நெஞ்சை நனைத்தது; பாதகம் புரிபவன் பரிமளம் பூசி வருவது போல நெஞ்சிலே ஈரமற்ற அந்த நாள் தன் வயதை காலை *11-36* வரை கொலை எண்ணத்தோடு கழித்தது யாருக்குத் தெரியும்.

ஆம்! இன்னும் ஒரே நிமிடந்தான்! அதே அந்த ஒப்பனை கலைந்தது! முகமூடி விலகியது! ஏசுவைக் கொன்ற முகம்! லிங்கனை அழித்த தோற்றம்! காந்தியடிகளை வீழ்த்திய உரு தெரியலாயிற்று! திடீரென ஒரு வெடிச் சத்தம் பயங்கரமான ஓசையில்! பார்ப்பவர்கள் வியக்கும் பாணியில்; காண்பவர்கள் திடுக்கிடும் காட்சியில்; காலை *11-37* மணிக்கு கேட்டது அந்தப் பேரிடி ஒலி.

துப்பாக்கியிலிருந்து பீறிட்டு வெளியே வந்தது குண்டு ஒன்று. அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் சிந்தனைக் கூடமான தலையிலே பாய்ந்தது. பண்பின் பிறப்பிடம்! அமைதியின் உறைவிடம்; மனிதத் தன்மையின் விளைவிடமான ஜான் எப் கென்னடி சாய்ந்தார் பிணமாக. வெள்ளிக்கிழமை தன் விளையாட்டைத் துவக்கி முடித்துவிட்டது.

மறைந்த மாவீரன் கென்னடிக்காக மனித இனம் தேம்பித் தேம்பி அழுகின்ற காட்சியைக் காண அந்த அற்ப நாள் நகர்ந்து கொண்டிருந்தது. அச்சுப் பொறி இயந்திரங்களின் இதயங்கள் மின்னல் வேகத்தில் அடித்துக்கொண்டன. மாவீரன் கென்னடியின் சோக முடிவை உலராத கண்களோடு அவை உலகுக்கு அறிவித்துக் கொண்டிருந்தன.

ஆபிரகாம் லிங்கன் சாய்க்கப்பட்டான் பிணமாக; இதோ இரண்டாவது ஆபிர காம் லிங்கன் இன்று பிணமாக்கப்பட்டான் என்று அகிலம் வருத்த பண்ணை ஈனசுரத்தில் மீட்டுக்கொண்டிருந்தது. அமைதியை விரும்பிய ஒரு அரக்கன் அழிந்து விட்டான் சமாதானம் உலகிலே சாகாவரம் பெற்று வாழ வேண்டும். போர் வெறியர்களின் ஆணவப் போக்கைத் தகர்க்க வேண்டும்.

மேதினியைக் கலக்கி விட்ட அந்த வெள்ளிக்கிழமை மக்களின் மனக்குமுறல்களையும் — ஆற்றெண்ணுத் துயரத்தையும் — ஊற்றென ஊறி ஊறி, சுரந்து வரும் கண்ணீர்த் துளிகளையும் காணிக்கையாக ஏற்று அந்தி இருளில் மறைந்து விட்டது வெள்ளிக்கிழமை.

மறுநாள் கதிரவன் தனது கண்ணீரை உலகமெல்லாம் சிந்திச் சிவந்த நெருப்பான கண்களோடு தோன்றினுன். நல்லவர் வாழும் நாட்டிலே அவர்களைப் பொசுக்கும் புல்லர்களும் கட்பதடி போல் மறைந்து வாழ்கின்றனரே என்று வேதனைப் பட்டவனுய் — வெந்த உள்ளத்தினனுய். அந்தக் கண்டத்தையே காரித்துப்பிவிட்டு, அந்த எச்சிலை இரவாக்கிக் காட்டி விட்டு மற்றக் கண்டங்களுக்கு அந்த மனித குல மாவீரனின் மரண வரலாற்றையும் மாண்பையும் விளக்கி ஒளியெனும் கண்ணீரைச் சிந்திட ஆரம்பித்து விட்டான்.

கென்னடிக்கு அடுத்த நாள் சவ ஊர்வலம். பரந்த உலகிலே, விரிந்த உள்ளத்தோடு பண்புடன் வாழ்ந்து காட்டியவனின் எண்சாண் உடல் சவப்பெட்டிக்குள்ளே புகுத்தப் பட்டது.

எட்டாத உலகத்திற்கெல்லாம் மனித இனம் சென்று வாழ எண்ணுத எண்ணங்களையெண்ணி திட்டம் தீட்டிய அந்த எழிலான மேனி ஆறடி மண்ணுக்குள்ளே கல்லறையாக்கப்பட்டது.

மனிதகுலம் வாழ நற்செயல்களைப் புரிந்த எனக்கு அருமையான பரிசைக் கொடுத்த நன்றி கெட்டவர்களே! நாய்ப்பிறவிகளே! மீண்டும் ஓர் கென்னடி இந்த நாட்டில் தோன்றியே தீருவான். அதை உங்களால் மறைக்க முடியாது. என்று மனிதகுல விரோதிகளைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை வீசிவிட்டு புகுந்தார் கென்னடி அவரது சமாதி மண்டபத்திற்குள்ளே.

கென்னடி கல்லறையைக் கண்டு வெள்ளை மாளிகை விம்மியது. நல்லவர்களின் உள்ளமெல்லாம் நலிந்தது. அவரது அரசியல் ரசிகர்கள் கென்னடி திருப்பெயரைச் சூட்டி உலகம் உள்ளளவும் அவரை மறவோம்.

சாக்கரடீஸ் இறந்தார், ஏதன்ஸ் மட்டுமே அழுதது! ஏசு இறந்தார்; ஜெருசலேம் மட்டும் கண்ணீர் சிந்தியது. லிங்கன் இறந்தார் அமெரிக்கா மட்டும் அழுதது. கென்னடி மாண்டார் உலகமே அழுதது.

வ. அரியரத்தினம்
10 B

# பாரசத்தின் முடிவு.

அது ஒரு சிறுகிராமம். அங்கே அடித்துப்போட்ட பாம்புபோல ஒரு சிறு ஊரிப் பாதை அமைந்திருந்தது. அது அவ்வளவு தூரம் நீடிக்கவில்லை ஒரு முடக்கில் முடிவடைந்தது. அந்த முடக்கில் ஒரு சிறு வீடு அமைந்திருந்தது. அந்த வீட்டு விறுந்தையில் உள்ள நாற்காலியில் ஆனந்தன் பேப்பர் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்குச் சற்றுத் தள்ளி பாடசாலையில் கொடுத்த வீட்டுவேலைகளைச் செய்து கொண்டிருந்தாள் ஆனந்தனின் அன்புத் தங்கை வளர்மதி. இவர்கள் இருவரும் ஈருடலும் ஒருயிருமாக வாழ்ந்துவந்தார்கள். அன்னை மாரியம்மாவையும் தந்தை செல்வநாயகத்தையும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கிணங்க பேணி வந்தார்கள்.

செல்வநாயகம் மாடுபோல் உழைத்து அதில்வரும் வருவாயில் குடும்பம் நடத்தி வந்தார். மாரியம்மா தனது கணவனின் கொள்கையே தனது கொள்கையென மனதில் கொண்டு தனது இரு பிள்ளைகளையும் இரு கண்களென வளர்த்து வந்தாள்.

காலங்கள் பல கழிந்தன. இப்போது ஆனந்தனுக்கு பதினெட்டு வயது. ஜி. சி. ஈ. பரீட்சையில் தேர்வு பெற்று விட்டு வேலைக்காக விண்ணப்பம் அனுப்புகின்றான். வளர்மதி வளர்ந்து பெரிய ஆளாகி விட்டாள். அவளும் படிப்பை முடித்து விட்டு அண்ணனின் உதவியுடன் வேலைக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறாள்.

ஒரு நாள் காலை தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து ஆனந்தன் கையில் கொடுத்தான். அதை அவன் ஆவலுடன் பிரித்துப் படித்தான். மறு கணம் அவன் வாயில் இருந்து ஆனந்தப் புன்னகை ஒன்று உதிர்ந்தது. இதை தந்தையிடமும் தாயிடமும் தங்கையிடமும் தெரிவித்தான், தாய் உடனே அவனைக் கட்டித் தழுவி ஆசை முத்தம் கொடுத்தாள். அவ்வளவு என்னதான் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது? அதில் ஆனந்தன் வேலையில் எடுபட்டிருப்பதாகவும் அமெரிக்காவிற்கு வரும்படியும் எழுதியிருந்தது. மறு நாள் பிற்பகல் ஆனந்தனும் மற்றும் யாவரும் ஒரு காரில் ஏறிக்கொண்டு கட்டுநாயக்கா விமானநிலையத்தை அடைந்தனர். காரிலிருந்து மாரியம்மா, செல்வநாயகம், ஆனந்தன் வளர்மதி ஆகியோர் இறங்கினர். சில நிமிடம் சென்றிருக்கும் விமானநிலையத்தில் உள்ள ஒலி பெருக்கி அமெரிக்காவுக்குப் போகும் பிரயாணிகள் வந்து விமானத்தில் ஏறவும் என ஒலித்தது. ஆனந்தனும் பெற்றோரிடத்தில் ஆசீர்வாதம் பெற்று சகோதரியைப் பார்த்து 'தங்காய் போய் விட்டு வாறேன்' எனக்கூறினான். அப்போது வளர்மதி 'அண்ணு நானும் உன்னுடன் வரப்போகிறேன்' என அழுதாள். ஆனந்தன் அவளை அணைத்து 'அழாதே சிறிது நாட்களில் நான் வந்து விடுவேன்' எனக் கூறி எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு விமானத்தை நோக்கி நடந்தான். சிறிது நேரத்தில் விமானம் புறப்பட்டு மேலே கிளம்பிச்சென்றது.

ஆனந்தன் சென்ற சில நாட்களில் வளர்மதிக்குஆசிரியர் பதவி கிடைத்தது. இதற்காக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு வரவேண்டும் என அரசாங்கம் அழைத்தது. இதை அறிந்த தாய் பெற்ற பாசத்தால் 'என் கண்ணே என்னை விட்டுப் பிரிந்து போகாதே என அழுதாள். வளர்மதி ஒருவாறு தாயைச் சமாதானப் படுத்தி தந்தையுடன் புகையிரத நிலையத்தை அடைந்தாள். சிறிது நேரத்தில் புகையிரதம் புறப்பட்டது.

மறுநாள் காலையில் செல்வநாயகம் அன்றைய தினசரிப் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் சென்றதும் 'மாரியம்மா! மாரியம்மா!! இங்கே ஓடி வா' என்று அழைத்தார். குசினிக்குள் இருந்த மாரியம்மா வெளியே ஓடி வந்தாள். அவள் அங்கே கண்டது செல்வநாயகம் மயங்கி விழுந்து கிடந்தார். இதைக் கண்ட மாரியம்மா திகைத்துப் போனாள். ஏன் இப்படி இவர் மயங்கி விழுந்தார் என்று யோசித்தாள். சிறிது நேரத்தில் மாரியம்மாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. பேப்பரை எடுத்துப் பார்த்தாள். உடனே 'ஐயோ! அம்மா! வளர்மதி! என்னை விட்டுட்டுப் போய்விட்டியா? இனி நான் யாரை மகளென்று சொல்லுவேன்' என்று கதறினாள். இதைக் கேட்ட அக்கம் பக்கத்தவர்கள் எல்லோரும் ஓடி வந்தார்கள். 'என்ன இது ஏன் இப்படி மாரியம்மா அழுகின்றாள்' என வினவினர். சிறிது நேரத்தில்தான் அவர்களுக்கு வளர்மதி புகையிரதத்தில் போகும் போது புகையிரதம் கவிழ்ந்ததால் பலர் இறந்தனர் அவர்களில் வளர்மதியும், என்ற உண்மை விளங்கியது.

சில மாதங்களில் ஆனந்தன் தன் பெற்றோரையும் அன்புத் தங்கையையும் காண ஆசைப்பட்டுத் தாய் நாடு திரும்பினான். அவன் கட்டுநாயக்கா விமான நிலையத்தை அடைந்து அங்கே தன் பெற்றோரையும் தங்கையையும் தேடினான். அங்கே அவர்களைக் காணவில்லை. இதனால் அவன் பெரும் மனவேதனை அடைந்தான். ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. மாரியம்மாவும், செல்வநாயகமும் வளர்மதியின் படத்துக்கு முன்னால் இருந்து அழுது கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ட ஆனந்தனின் கண்கள் இருண்டன. தலை சுற்றியது. மயங்கிக் கீழே விழுந்தான். எழுந்திருக்கவில்லை. ஏன்? அவன் இப்போது மீளாத்துயிலில் கிடக்கின்றான். என்ன பாசத்தின் முடிவு? இதுதானா இயற்கை நியதி?

**தி. ஜெயசிகாமணி**
தே. க. த. ப. வகுப்பு



# மூலகங்களின் மகாநாடு

உலகின் எல்லா நாடுகளும் மகாநாடு கூடுவது போல் தாங்களும் கூடினுல் என்ன? என்ற எண்ணம் மூலகங்களுக்கு உதித்தது. அதன்படியே அவைகள் தைத்திங்கள் 1ந் திகதி 6-30 மணியளவில் உள்ள சுபமுகூர்த்தத்தில் மாநாட்டை ஆரம்பித்தார்கள்.

அம்மகா நாட்டிற்கு தலைவராக மிஸ்டர் கல்சியம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அன்றைய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மிஸ்டர் கந்தகம், மிஸ்டர் காபன், மிஸ்டர் அலுமினியம் உட்பட பலர் வந்திருந்தனர்.

மகாநாட்டு மேடையில் விளக்குகள் பல எரிந்தன. ஆங்காங்கே தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மாநாடு ஆரம்பமாகியதும் மிஸ்டர் கல்சியம் ஓர் சிற்றுரையை நிகழ்த்தினுர். பின் அங்கு வந்திருந்தவர்கள் உரை நிகழ்த்தினர். ஒவ்வொருவருக்கும் 5 நிமிடம் கொடுக்கப்பட்டது. அடுத்ததாக உரை நிகழ்த்துவதற்கு மிஸ்டர் ஐதரசனை எதிர் பார்த்தனர். சில நிமிடத்தில் அவர் வந்தார். அவர் மேடையில் ஏறியவுடன் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் அனைத்தும் அணைந்து விட்டன. உடனே அவரை எல்லோரும் மேடைக்கு வரவேண்டாம் என்று தடுத்தனர். பின் பிரபல்யம் மிக்க இலக்றிக்கல் என்ஜினியர் மிஸ்டர் ஒட்சிசன் அவர்களை அழைத்து வந்ததும் விளக்குகள் எரியத் தொடங்கின.

அப்போது எங்கேயோ இருந்து வந்து சேர்ந்தார் மிஸ்டர் சோடியம். வந்த அவசரத்தில் குடிநீர் வாளிக்குள் விழுந்து விட்டார். உடனே பலத்த சத்தத்துடன் வெடித்து மகாநாட்டு மண்டபத்தையே கலைத்து விட்டார். அதன் பின் மூலகங்களுக்கு மகாநாட்டில் ஆசையில்லை.

செ. சிவகுமாரன்
8 A

---

மன அமைதியை அடைவதற்கான அடிப்படை வழி அதைத் தேடி அலையா திருத்தல்

— மிஸஸ் காவ்லக் எலிஸ்

# நான் கண்ட கனவு

**நான்** பொலிகண்டியில் உள்ள கடற்கரை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது நேரம் இரவு 11-00 மணி ஆகும். விளையாடி முடிந்து வல்வெட்டித்துறைச் சந்தியிலுள்ள எனது வீட்டுக்கு வரும் வழியில் சுடலை தென்பட்டது. எனது நெஞ்சம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. அப்பொழுது காலடிச் சத்தம் ஒன்று கேட்டது. நான் நிமிர்ந்து பார்த்தேன். ஒரு வெள்ளை உருவம் தன் கையில் இரு கொள்ளிக் கட்டைகளை ஏந்தியவாறு என்னை நோக்கி வந்தது. நான் ஒரே ஓட்டமாக ஓடினேன். திரும்பிப் பார்த்த போது அந்த வெள்ளை உருவம் என்னைப் பின் தொடர்ந்தவாறே ஓடி வந்தது. நான் பார்த்த பொழுது பருத்தித்துறைச் சந்தியை தாண்டி விட்டேன், சில நேரம் சென்றதும் பார்த்தேன். அது ஒட்டிசுட்டான் காடாகத் தெரிந்தது, அங்கே கூர்ந்து அவதானித்த போது மாளிகை ஒன்று தென்பட்டது. அந்த மாளிகைக்குள் போனேன். அந்த மாளிகையினுள் பல ஆண்களும், பெண்களும் நடனமாடிக் கொண்டும் மது அருந்திக் கொண்டும் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். நான் அவ்விடத்திற்குப் போன போது அவர்கள் எனது பெயரைச் சொல்லி வரவேற்றனர். எனக்கு அது ஒரு அநிர்ச்சியாக இருந்தது. பின்னர் அவர்கள் என்னை வரவேற்று ஒரு அறையில் கொண்டு சென்று எனக்குப் பழ வகையும் தின்பண்டங்களும் தந்தனர். பின்னர் அவ்வறையின் கதவைத் தாளிட்டனர். எனக்கு அது அதிர்ச்சியைத் தந்தது. பின்னர் சில விநாடிகள் சென்றதும் அக்கதவு திறக்கப்பட்டது. அப்பொழுது இரண்டு பெண்கள் உள்ளே வந்தனர். அவர்கள் தலையில் ஆட்டுக் கொம்பு போல் இருந்தது. இரண்டு பெண்களும் கையில் பளபளப்பான வாளுடன் என்னை நோக்கி வந்தனர். அவர்களுக்குப் பின்னால் என்னை விட்டுத் துரத்திய வெள்ளை உருவம் வந்தது. எனக்கு ஒரே பயமாக இருந்தது. திரும்பிப் பார்த்த பொழுது இரண்டு மனிதர்கள் போகக் கூடிய போறை ஒன்று தென்பட்டது. நான் அதற்குள் புகுந்தேன். திரும்பிப் பார்த்த பொழுது அந்த மனிதர்கள் பின் தொடர்ந்து வந்தனர். நான் முன்னேக்கிப் பார்த்த பொழுது அப்போறையின் முடிவு தெரிந்தது. நான் அப்போறையை விட்டு வெளியேறி காட்டுக்குள் ஓடினேன். வெகு நேரம் ஓடிய களைப்பால் ஒரு கல்லில் உட்கார்ந்தேன். அப்பொழுது அந்தக்கல் பூமிக்குள் போவது போல் உணர்ந்தேன். அதைப் பார்த்த பொழுது அது ஒரு பாழுங்கிணறு போல் தெரிந்தது. அப்பொழுது நான் பயத்தால் அம்மா! என்று கத்தினேன். அப்பொழுது எனது அம்மா என்னவென்று கேட்டார். நான் ஒன்றுமில்லை என்று சொன்னேன். அம்மா எனக்குத் தண்ணீர் தந்து விட்டுப் போய்விட்டார். அப்பொழுதுதான் எனக்கு இவ்வளவு நேரமும் கண்டது நான் கண்ட கனவாகத் தோன்றியது.

கி. விஜயதாஸ்
7 B

# தனக்கு வந்தாற் தெரியும்

ஒரு தேசத்தில் செல்லம்மா என்னும் பெயருடைய பெண் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் ஒரு பூனையை வளர்த்து வந்தாள். அந்தப் பூனை அவ்வீட்டிலுள்ள எலிகளைப் பிடித்துத் தின்று வருவது வழக்கம். ஒரு நாள் அந்தப் பூனைக்கு எலியைப் பிடித்துத் தின்ன மனமில்லை. அப்பொழுது எலி ஒன்று அகப்பட்டது. அந்த எலியுடன் சிறிது நேரம் விளையாட விரும்பியது. எலியை தன் முன்காலாற் பிடித்துக் கொண்டு சிறிது விளையாட்டாகக் கடித்தது. எலி அஞ்சி நடுங்கியது. விழிகளை அங்கும் இங்கும் உருட்டி விழித்தது. எப்படித் தப்பலாம் என்று எண்ணி கீச்... கீச்... என்று கத்தியது. எலி பூனையைப் பார்த்து 'பூனையாரே... நீங்கள் பெரியவர், நான் சிறியவன் தயவு செய்து என்னை விட்டு விடுங்கள் என்று கெஞ்சியது.

எலி பயந்து நடுங்குவதைக் கண்ட பூனை சிரித்துக் கொண்டு எலியைப் பார்த்து 'எலிப்பிள்ளையே அஞ்சாதே நான் உன்னைத் தின்ன மாட்டேன் நீ போகலாம். என்று சொல்லிக் காலை எடுத்தது. எலி தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடியது. எலி சிறிது தூரம் ஓடியதும் பூனை பாய்ந்து எலியைப் பிடித்துக் கொண்டது. இவ்வாறு பூனை எலியை விடுவதும் பிடிப்பதுமாய் விளையாடியது. எலி வேதனையாலே துடித்தது. அப்பொழுது அங்கே ஒரு நாய் வந்தது. அதைக் கண்ட பூனை எலியை விட்டு விட்டு ஓடப்பார்த்தது. எலி ஓடி ஒளித்துக் கொண்டது. பூனையாலே தப்பி ஓட முடியவில்லை. அது மயிரைச் சிலிர்த்தது. நாய் பூனையைப் பார்த்து இறுமியது. நாய் பூனையின் மீது பாய்ந்து கௌவியது. அதை வேகமாக உதறி எறிந்தது. பூனை வேதனை தாங்க மாட்டாமற் கத்தியது. நாய் அதைப் பார்த்துக் குரைத்தது. பூனை நாயைப் பார்த்து 'நாயாரே நீரே பெரியவர். நான் சிறியவன், தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்' என்று கெஞ்சியது. நாய் 'சரி எழுந்து போகலாம்' என்றது. பூனை எழுந்து போக ஆயத்தப்படுத்தியது. உடனே நாய் அதன் மேல் பாய்ந்து காலால் மிதித்தது. பூனை துடிதுடித்தது. அங்கே நடந்தவற்றை ஒளித்திருந்து பார்த்த எலி பூனையாருக்கு நான் பட்ட துன்பம் இப்போதாவது தெரியட்டும் என்று சொல்லி வீட்டு ஓடியது.

**வி. மோகனசுந்தரம்**
6ம் வகுப்பு

---

சட்டம் என்பது ஒரு சிலந்திக் கூடு, சிறிய நாடுகள் சிக்கிக் கொள்ளும், பேரரசுகள் பாய்ந்து கிளித் தெறியும்

— கன்னிஸா

S. MEENAKSHISUNDARAM
SIVAN KOVILADY
VALVETTITURAI

# OUR SCIENCE CLUB

People express fear and wonder when they come to know that science makes gigantic strides in the world. Young people unaffected by fear look with wonder at scientific advancements like to know about science. To find expressions for their science interest they may look to science clubs where they are able to study special areas much more deeply than they can in regular classrooms.

The students of the H. N. C. E. class desrious of aquiring scienific knowledge has extended unstinted co-operation to the Principal in his worthy endeavour of establishing a science club thereby laying a foundation for their progress in the field of science. Thus the science club has blossomed and set an example that can be emulated by others; its importance in the new educational scheme is being felt by other students.

In our science club learning is dovetailed to the abilities and interest of the individuals. There is no learning of any predig sted material by rote, and emphasis is laid on independent study and individual intiative. What is learnt in the club is taken to the classroom; increased enthusiasm too flows into the classroom. This new enthusiasm brought into their classes tend to spread to non-members who share their special learnings.


The new educational reforms introduced by the government in 1972 provide ample opportunities for those who have latent creative talent which when tapped in a science club like ours, will benefit society a great deal. Our society has economic problems which can be solved by students equipped with adequate knowledge of science. Our science club givs help, encouragement and facilities for energetic talented students but classrooms will not provide all the necessary help they require. In some instances science activities out of class is superior to regular curriculum work in terms of education value,

Sometimes the members of our club present reports and exhibit their projects all of which have teaching value to their classmates. It is really interesting to watch when they are engaged in lively discussions of their findings which are of great value to the members and non-members. They have started on this journey in search of scientific knowledge with strong will and good heart.

There is little doubt that our science club will keep the light of learning burning. It will of course, guide the students, the flower of the nation to achieve their ambitions in the sphere of science.

**T. Chanthiravathana**
H. N. C. E. 1st Year

# MAHATHMA GANDHI



Mahatma Gandhi — his real name is Karamchand Mohandas Gandhi — was born in India in the year 1869.

When he left for England to study law he promised his mother that he would not touch either liquor (intoxicating drink like arrack) or meat. He faithfully kept his promise to the last.

When he returned to India he Practised as a lawyer in India. He was not successful. On the invitation of a friend he went to South Africa. There he saw his fellow countrymen being treated badly. He tried to help them for which he was sent to prison more than once. He then returned to India.

In India he began his long fight against the British rulers to get freedom for his country. He did not fight with arms or weapons but by peaceful means. He made the people of India understand the importance of being free. He brought the different peoples living in a very large country like India together and made them think as one man. He taught them that there was no such thing as caste and that all men were equal before God.

He used things which were made only in his own country. He did not like the use of machinery because it threw man out of work. He wanted things to be made by hand so that the greatest number of people could have work.

Under Gandhi's leadership the cry for independence became very strong. At last the British rulers came to know that they could no longer keep India and so on the 15th of August, 1947 they gave freedom to India.

Gandhi was not satisfied merely with freedom from a foreign master. He wanted the people to live a better, richer and happier life. He worked hard for it. He tried his best to bring the Hindus and the Muslims together. He failed. A Hindu shot him dead on 30th January 1948, because Gandhi was trying to bring about peace between the Hindus and the Muslims of India. However, though Gandhi is dead, his teachings live after him and guide men to do the right things in life.

**R. Varatharaj**
H. N. C. E. (Science)

# FACTS ABOUT OUR BODY

1. The quantity of blood in the body is 5 to 6 quarts; approximately one-third of the total weight of the body is water.

2. The liver is the biggest organ in the body. Its weight is about 3 lbs. Though the brain is smaller than the liver, it is heavy as the liver.

3. There are 639 tissues which constitute the muscle in body. Each kidney contains 1,200,000 lobules and their total length is 75 miles.

4. The total weight of our skin of the body is 7 to 10 pounds. The number of hairs on head of a normal male is 100,000 and on that of a female is 90,000 to 140,000.

5. 1,00,00,000 red corpuscles are destroyed and regenerated in the body every second.

6. An average adult is capable of taking food equal to his weight in 50 days. The energy produced inside the body in 2 honrs is capable of lifting a weight of 65 tons to a height of 2 feet.

**A. Rajkumar**

Grade **9 A**

# An Autobiography of a Manioc Plant

Crack! with my roots cut off from me. I found myself lying on the side of a garden. After sometime a gardener came and picked me up. I was cut into 3 equal parts and each one of us went into holes dug by the gardener. I was comfortable there. I had enough food and water. Then I grew up nicely. When I put my head out I found pretty friends like me. They were happy to see me. Their stories and all our stories were nearly the same. After three months I grew to the height of the gardener who planted me. I became very stronger sending long and fat roots piercing the soil. One day the gardener's wife saw me. She called out to her sons and told something. They came and held me by my body and pulled me out of the soil. I came out of the soil creaking and crying. She cut the fatty roots from me and took them to the kitchen. The gardener throw me to a side. Once again I am lying on the side of a garden.

**K. Surendran**
Grade **8 A**

# OUR SCHOOL LIBRARY.

There is a large library in our school. It has a lot of books on various subjects. It has plenty of room, about fifty students can read there at a time. Every year new books are put in the library.

When the students are free from class-work they are allowed to go to the library. There they can read books, magazines and newspapers. They always enjoy reading story books. The students from grade six to grade twelve can learn much because our school library has many useful books. The reference books help us to make notes and are useful for our examinations.


The students from any class can burrow books from the librarian who is in charge of the library. They are not allowed to make any noise in the library. They are asked to leave the newspapers and magazines in good order. We are very proud of our school library

S. Vijayavel
Grade 7 A

# THE FISHERMAN

A fisherman lives near the sea. He is a brave man. He is not afraid of the sea or of the storms. A fisherman's job is very difficult. He sails a small boat on the sea and catches fish in his nets. He returns ashore with a catch of fish. He sells them. Sometimes he goes fishing during the day and sometimes he goes in the night.

**Y. Partheepan**
Grade 6



# ADVICE TO STUDENTS

If you choose to work, you will succeed.
If you don't, you will fail.
If you neglect your work, you will dislike it.
If you do it well, you will enjoy it.
If you join little cliques, you will be self - satisfied.
If you make friends widely, you will be interesting.
If you gossip, you will be slandered.
If you mind your own business, you will be liked.
If you act like boor, you will be despised.
If you act like a human being, you will be respected.
If you spurn wisdom, wise people will spurn you.
If you seek wisdom, they will seek you.
If you adopt a pose of boredom, you will be a bore.
If you show vitality, you will be alive.
If you spend your free time playing bridge,
you will be good bridge player.
If you spend it in reading, discussing and thinking of
things that matter, you will be an educated person.

— **Sidney Smith**

# எமது நூலகம்

கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. வண்ணமாலை ஐயங்கார் காலத்திலே கல்லூரியின் முன்னாள் முகாமையாளர் தையல்பாகரின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் காலஞ்சென்ற வர்த்தகப் பெருந்தகை எஸ். வீ. நடராசா அவர்களின் உபகரிப்பினால் கல்லூரி நூலகம் வளர்ந்து மேலும் சிறப்பாக இயங்க ஆரம்பித்தது. இக்காலத்தில் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ள ஆங்கிலஇலக்கியம், கதைகள், களஞ்சியம் இவ்வாறான பல ஆயிரக்கணக்கான புத்தகங்களை அன்னார் உபகரித்துள்ளார். எனவே கல்லூரி நூலகம் பற்றிய ஆய்வில் அன்னாரை நினைவு கூறுவது நமது கடனாகும்.

அன்னார் வழங்கிய நூல்களும், பின்னர் காலத்துக்குக் காலம் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டவையும், பழைய மாணவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டனவும், வசதிக்கட்டண நிதியிலிருந்து வாங்கப்பட்டனவுமாக 2535 ஆங்கிலப் புத்தகங்களும், 1535 தமிழ்ப் புத்தகங்களுமாக மொத்தம் 4070 புத்தகங்கள் இன்று நூலகத்தில் உள்ளன. வகைப்படுத்தப்பட்டு பல்வேறு பகுதிகளாகவுள்ள இரண்டாயிரத்துச்கும் அதிகமாக்வுள்ள ஆங்கிலப் புத்தகங்கள் கிடைத்தற்கரிய அரும் பொக்கிஷமாகும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக 27′ X 17′ ஒரு ஒடுங்கிய அறையிற் செயற்பட்டு வந்த நூலகம் சென்றஆண்டு உயர்வகுப்பு மாணவர்களின் தேவையைக்கருதி 22′X17′ அளவு கொண்ட ஒரு சிறிய வாசிப்பு அறை இணைக்கப்பட்டது. கல்லூரியில் என்.சீ.ஜீ.ஈ. வகுப்புகள் ஆரம்பமாகியது முதல் நூலகத்தினை பயன்படுத்தும் மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்தது. ஒடுக்கமான அறை இடம் கொள்ள முடியாத நிலை உண்டானது.

இந்நிலையில், கடந்த வருட இறுதியில், தேசிய சேவை உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்களால், பண்புகபடுத்தப்பட்டவரவுசெலவுத் திட்டத்தில் கல்லூரிக்கு கிடைத்த இரண்டாவது நிதி ஒதுக்கீட்டில் ரூபா 10,000 கிடைத்த போது அதிபரின் ஆர்வமும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரின் உற்சாகமும் ஒன்றிணைந்து கல்லூரி

தெற்கு எல்லையுடன் அமைந்த முழுமண்டபமும் (பழைய சித்திர கூடம், சங்கீத அறை பொது விஞ்ஞான அறை ஆகியன) முற்றாகத் திருத்தி அமைக்கப்பட்டு 1977 ஜனவரியில் பாடசாலை ஆரம்பமாகிய போது நூலகம் நிரந்தரக் கட்டிடமொன்றிற்கு இடம் மாறியது.

80'X20' அளவு கொண்ட புதிய கட்டிடம் இரு அந்தங்களும் 24 பேர்கள் கொண்ட இரு வகுப்புக்கள் ஒரே வேளையில் வாசிக்கத் தக்க வசதியாகவும் நடுப்பகுதி பத்திரிகைகள், சஞ்சிகைகள், வெளியீடுகள் முதலியன கொண்ட பகுதியாகவும் மொத்தம் 75 மாணவர்கள் மிக வசதியாக பயன்படுத்தக் கூடிய தளபாட வசதிகளுடன் காற்றோட்டமும் வெளிச்ச வசதியுமுள்ள பரந்த விரிந்த மண்டபமாகத் திகழ்கிறது.

நூலகம் எவ்வாறு மாணவர்களுக்குப் பயன்பட வேண்டுமென பல காலமாக் கனவு கண்டோமோ, அது அவ்வாறே பயன்படுவதை இந்த ஒரு மாத காலத்திலேயே கண்ணூடாகக் காண்கிறோம்.

புதிய கல்வித் திட்ட அமைப்பில் மாணவர் பரந்த அறிவு பெற வேண்டிய தேவையினை நூலகம் பெருமளவு நிறைவேற்றி வருகிறது. குறிப்பாக புதிய ஆண்டு முதல் அதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் கூடுதலாக அளிக்கப்பட்டு வருகிறது. அதற்கு ஒப்ப மாணவர்களின் வாசிக்கும் ஆர்வமும் வளர்ந்து வருகிறது.

தேசிய உயர் வகுப்புக்கான உசாத்துணை நூல்கள் தேவையான அளவு நூலகத்தில் இல்லை என்பது பெரும் குறையாக இருந்த போதிலும், பழைய மாணவர்கள் பலரும் அவ்விதப் புத்தகங்களை பெற்றுத் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை பாராட்டப் பட வேண்டியது. அவர்கள் அனைவரதும் உதவியை நூலகம் என்றும் வேண்டி நிற்கிறது.

நன்றி

நூலகப் பொறுப்பாளர்

# எமது சாரணத் துருப்பின்
# மைதானக் காட்சி

யாழ் பழைய பூங்காவின் மத்தியிலே திடீரெனப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூட்டம். 'ஓ அதுவா?' அன்றைய தினம் யாழ். மாவட்ட சாரணத் துருப்புக்களின் போட்டியில் ஓர் நிகழ்ச்சியைக் காண அவ்வளவு பல்லாயிரம் மக்கள்.

நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சி மைதானக் காட்சி. நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையில் நடுவர் 'தற்போது பன்னிரண்டாம் யாழ்ப்பாணம்' என அறிவித்தார். உடனே பதினெட்டு சாரணர்கள் பெரிய கம்புகள், கப்பிகள்' கயிறுகள், இறுக்கிகள், மடத்தல்கள் ஆகியவற்றுடன் ஓடி வந்த உற்சாகம் அங்கு நின்ற பல்லாயிரக் கணக்கான மக்களைத் திகைக்க வைத்தது.

இவ்வளவு நேரமும் வீணாக இங்கு நிற்கிறோமே என மனத்தினுள் புறுபுறுத்த பார்வையாளர்கள் ''என்னடா பெரிய கம்புகளுடன் இந்தச் சிறிய சாரணர்கள் வந்துள்ளனரே. இவற்றைத் தூக்கவே பலமில்லாத இந்தச் சிறிசுகள் என்ன செய்வார்கள்', என்று எள்ளி நகையாடினர். ஆனால் அடுத்த வினாடியோ அவர்கள் போட்ட எடை தவிடுபொடியாயிற்று.

அச்சாரணச் சிறுவர்கள் இரு பகுதிகளாகப் பிரிந்தனர். அதில் ஒரு பகுதியினர் ஆறு பெரிய கம்புகளுடனும் சிறிய ஆறு கம்புகளுடனும் ஒரு பெரிய கூம்புக் கோபுரத்தைக் கட்டினர். அவர்கள் கட்டியது சரித்து வைத்ததே. அவர்களது உற்சாகத் துடிப்பால் மிக விரைவில் அதைக் கட்டிவிட்டனர். பின்னர் நூலேணி கட்டியவுடன் அதை நிமிர்த்த முற்பட்டனர். அக் கூம்புக் கோபுரத்தின் நுனியில் மூன்று கயிறுகள் போட்டு இழுத்தனர். அக்கோபுரத்தின் அடி சறுக்காமலிருப்பதற்காக இறுக்கிகள் அடித்தே கிளப்பினர். திடீரெனக் கிளம்பிய அக்கூம்புக் கோபுரத்தை மூன்று கயிறுகளாலும் சமப்படுத்தி நிற்கச் செய்தனர். ''ஆ என்ன அதிசயம்! ஐந்து நிமிடத்தினுள் ஒரு மிகப் பிரமாண்டமான கோபுரத்தையே கட்டிவிட்டனர்'' என்று திகைத்து நின்றவர்கள் வேறு யாருமல்ல சற்று முன்பு இச்சிறுவர்களைப் பார்த்து எள்ளி நகையாடிய பல்லாயிரம் பார்வையாளரே. அதே நேரம் பெற்றோர்களே! நண்பர்களே! சகோதரர்களே! இது

பெரிய அதிசயமோ என்று செயலில் காட்டியவர்கள் மறு பகுதிச் சாரணச் சிறுர்களே அவர்கள். முப்பது அடியுடைய ஒரு மூங்கிற் குழாயின் உதவியுடனும் ஒரு கம்புடனும் கப்பிகள், கயிறுகள் மற்றும் சில உபகரணங்களுடனும் அவர்கள் செய்த அதே நேரத்தில் இவர்களும் செய்து முடித்தது அப்பெரிய பாரந் தூக்கியே. இச் சாரணச் சிறுர்கள் உருவாக்கிய பெரிய கூம்புக் கோபுரத்திற்கும் அப் பாரந் தூக்கிக்கும் அடுத்து என்ன நடக்கப் போகிறது என அண்ணுந்து பார்த்துக் கொண்டே அப்பல்லாயிரம் பார்வையாளர்களும் நின்றனர்.

அப் பாரந் தூக்கியையும் இருபத்தெட்டு அடி உயரமான அக் கூம்புக் கோபுரத்தையும் சரியான அளவுகள் பார்த்து நெருக்கினர். மறு விஞடி ஒரு சாரணச் சிறுவனை பாரந் தூக்கியில் ஏற்றி 'விர்' என்று கிளம்பச் செய்தவர்கள் மிகுதிச் சாரணர்களே. அச்சாரணச் சிறுவன் மேலே சென்றவுடன் பாரந் தூக்கியின் திசையை மாற்றி அக் கோபுரத்திற்கு அநகாண்மயில் கொண்டுவந்தனர். சிறுகவனயீனம் காரணமாக அப்பெரிய கோபுரம் சரிய பாரந் தூக்கியில் இருந்த அச்சிறுவன் அந்தரத்திலிருந்து தவறி விழுந்து விடுவாஞே என எண்ணிஞர்கள். அவன் ஒரு சிறுவன்தான். ஆஞல் சாரணீயப் பயிற்சி பெற்றவன். தற்பாதுகாப்பு முக்கியம் என்பதை உணர்ந்தவன் அவன். கயிற்றை அழுங்கு போற் பற்றிப் பிடித்தான். இதற்கிடையில் கீழே நின்ற சாரணர்கள் கோபுரத்தின் சரிவை சரி செய்து விட்டனர். இப் பெரிய உயரத்திலிருந்து இச் சிறுவன் விழுந்தால் அவனுக்கு என்ன நடக்குமோ? என்று எண்ணிய அத்தனை பேரும் ஏமாந்து விட்டனர். கோபுரம் நிமிர்ந்தவுடன் அச் சிறுவன் பாரந்தூக்கியில் இருந்து மிகத் துணிச்சலுடன் அக் கோபுரத்தில் இறங்கி விழி வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் கண்களுக்கு சாரணீய வணக்கத்துடன் காட்சியளித்தான். உடனே அங்கிருந்த அத்தனை பேரும் இச் சாரணச் சிறுவர்கள் செய்த இத்தீரச் செயலிற்கு தமது கைதட்டு ஆரவாரத்தை பரிசாகக் கொடுத்தனர். இச் சிறுவர்கள் செய்த இச்செயலைக் கண்ட அப்பூங்காவில் உள்ள மாபெரும் வௌவால் கூட்டமே ஆரவாரித்துக் கொண்டு மேல் நோக்கிச் சென்றது. இவர்கள் செய்த இச் செயல் ஒன்பது நிமிடத்துக்குள் முடிந்தது என்ருல் அவர்களது உற்சாகமும் சிறந்த மதிநுட்பமும் விடாமுயற்சியும் எவ்வளவுக்கு எவ்வளவு என்று சிந்திக்க முடியுமா?

நடைபெற்ற மைதானக் காட்சிகளில் முதலிடத்தைப் பெற்றதோடு மாவட்ட சாரண ஆணையாளரின் பாராட்டாகிய 'இம் மைதானக் காட்சியால் எமது மாவட்டம் இலங்கையிலேயே சிறந்த சாரணீய மாவட்டமாவதற்கு தகுதிகள் உண்டு' என்ற பாராட்டைப் பெற்ற சாரணீயத் துருப்பு வேறு எதுவுமில்லை. பன்னிரண்டாம் யாழ்ப்பாணமாகிய எமது சிதம்பராச் சாரணர் துருப்பேயாகும். இது நடைபெற்றது கடந்த யாழ் மாவட்ட சாரணீயப் போட்டியிலேயாகும். இங்கு நடைபெற்ற மொத்த நிகழ்ச்சிகளில் எமது துருப்பு இரண்டாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத் தக்கது.

**ஆ. விஜயரத்னசன்**
*சிரேஸ்ட சாரணன்*

# தொழில் முன்னிலைப் பாடமும் எமது கல்லூரியும்

**1972**ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தின் பிரதான அம்சமாக விளங்குவது தொழில் முன்னிலைப் பாடமாகும். இது ஆரம்பிக்கப்பட்டதிருந்து இதன் முக்கியத்துவத்தை உணராதிருந்த பலரும், தே.க.பொ. த.(N.C.G.E.) பரீட்சை முடிவுகளின்போதும் தேசிய உயர் கல்விச் சான்றிதழ் (H. N. C. E.) வகுப்புகளிற்கான அனுமதிகளின்போதும் இவற்றின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கி விட்டனர். தொழில் முன்னிலைப் பாடம் புகுத்தப்பட்டதன் நோக்கம் ஒவ்வொரு மாணவனும் ஏதாவது ஒரு தொழிலைப் பழக வேண்டுமென்பதல்ல. ஆனால் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு நீங்கும்போது, ஏதாவது குறிப்பிட்ட தொழில்பற்றிய ஆரம்ப அறிவை பெற்றிருப்பதோடு அத்தொழிலில் முக்கியமாகக் குறிப்பிடக் கூடிய சில கைக்குரிய திறமைகளைப் பெற்றிருப்பதும், அத்தொழிலின் மேன்மையை உணர்ந்து கொள்வதும், பிரதான நோக்கங்களுள் குறிப்பிடக்கூடியதாகும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் தனது தொழில் முன்னிலைப் பாடங்களைத் தெரிவு செய்வதில் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாகவுள்ள நூற்றுக்கு மேற்பட்ட தொழில் முன்னிலைப் பாடங்களுள் ஏதாவது இரண்டினை பாடசாலைகள் தெரிவு செய்ய வேண்டும். பாடசாலை அதிபருக்கும், பெ. ஆ. சங்கத்தினருக்கும் இப்பாடங்களைத் தெரிவதில் பெரும் பொறுப்பு உண்டு. எமது கல்லூரியிலும், தகுந்த 2 தொழில் முன்னிலைப் பாடங்களைத் தெரிவதிலும், அதன் உண்மையான நோக்கங்களை நிறைவேற்றுவதிலும், தெரிவு செய்த பாடங்களின் மூலம் மாணவர்களின் பெறுபேறுகளிலும் எவ்வளவு தூரத்திற்கு வெற்றி காணப்பட்டுள்ளது என்பதை இனி ஆராய்வோம்.

எமது கல்லூரியினுல் தெரிவு செய்யப்பட்ட பாடங்களாவன (1) மர வேலை (2) கடற்றொழில் (ஆண்களுக்குரியது) (3) மனையியல் (4) புடவையும், உடை அமைத்தலும் (பெண்களுக்குரியது), இவை புதிய கல்வித் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே 6 – 9 வரையான வகுப்புக்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் கடற்றொழில் தவிர்ந்த ஏனைய பாடங்கள் 1972ம் ஆண்டின் முன்பிருந்தே எமது கல்லூரியில் கற்பிக்கப்பட்டு வந்த பாடங்களாகும். எனவே இவை தொழில் முன்னிலைப் பாடங்களாக மாற்றப்பட்டது. எமது கல்லூரியைப் பொறுத்தவரையில் நல்ல சந்தர்ப்பம் என்றே கூற வேண்டும். ஏனெனில் இப்பாடங்களைக் கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள், கற்பித்தல் உபகரணங்கள், போதிய இட வசதி, தளபாடங்கள் ஆகியவற்றை எமது கல்லூரியில் உடனடியாகவே பெறக்கூடியதாகவிருந்தது, மேலும் 1972ம் ஆண்டிற்குமுன் இப்பாடங்களைக் கற்ற மாணவர்கள் பலரும், இவற்றை தொழில் முன்னிலைப் பாடமாகக் கற்கின்ற புதிய மாணவர்களான தங்கள் சகோதரர்களுக்கோ பிள்ளைகளுக்கோ, பாடங்களில்

வரும் சந்தேசங்களை தீர்க்கக கூடியதாக இருக்கும். ஆனல் புதிதாக ஏதும் தொழில் முன்னிலைப் பாடங்களை தெரிவு செய்திருப்பின் இத்தகைய வசதிகள் ஏதும் இல்லா நிலையிலேயே அவற்றை ஆரம்பித்து 4, 5 வருடங்களை வீணடித்திருக்க வேண்டி நேரிட்டிருக்கும். உதாரணமாக தும்பு வேலை, நெசவு வேலை, உலோக வேலை, களிமண் வேலை, விவசாயம் ஆகிய பாடங்களுள் தெரிவுசெய்திருப்பின் அவற்றைக் கற்பிப்பதற்கு வேண்டிய பெறுமதிவாய்ந்த கற்பித்தல் உபகரணங்களையும், ஏனைய வளங்களையும் பெற வேண்டியிருக்கும். அத்துடன் இத்தகைய பாடங்களில் சிறப்புத் தகமையுடைய ஆசிரியர்களும் குறைவு.

மேலும் தொழில் முன்னிலைப் பாடமொன்றைத் தெரிவு செய்யும்போது அப்பாட நெறி நிச்சயமாக சமூகஞ் சார்ந்த, அதாவது பாடசாலை அமைந்துள்ள சூழலிலேயே கூடுதலானோர் ஈடுபட்டுள்ள தொழிலோடு இயைந்ததாக இருக்கவேண்டும் என்பது கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வகையில் பார்க்கும் போதும் எமது கல்லூரியினுல் தெரிவு செய்யப்பட்ட பாடங்கள் மிகவும் பொருத்தமானது எனும் முடிவுக்கு வரலாம். இத்தகைய சூழ்நிலையிலேதான் கடற்றொழில் எமது கல்லூரியில் ஒரு சிறப்பு இடத்தைப் பெறுகிறது. அதாவது தெரிவு செய்யப்படும் பாடம் சமூகஞ் சார்ந்ததாக, அதாவது மாணவர்கள் வசிக்கும் சூழலிலே கூடுதலானோர் ஈடுபட்டுள்ள தொழிலோடு இயைந்ததாக இருக்கவேண்டும் என்ற கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களுக்கமைவாகவும், தொழில் முன்னிலைப் பாடத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதாகவும் இது அமைந்துள்ளது. இப்பாட நெறிக்கு சிறப்புத் தகைமை உடைய ஆசிரியர்களைப் பெறமுடியாவிடினும், பெரும்பாலான மாணவர்களும் பெற்றோரும் இப்பாட நெறியில் போதிய தேர்ச்சியுடையவர்களாய், இதில் எழுகின்ற சந்தேகங்களை நீக்கக் கூடியவர்களாய் இருப்பார்கள்.


கடற்றொழிலை தனிய மீன் பிடித்தல் என்றே பலர் தவறுகக் கருதுகின்றனர். இதனுல் சிலர் மட்டத்தில், தொழில் முன்னிலைப் பாடமாக இது விரும்பப்படாமல் உள்ளது. ஆனல் உண்மையில் கடற்றொழில் என்பது பரந்த ஒரு பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. அது பின் வரும் பாடப்பிரிவுகளை தன்னகத்தே அடக்கியுள்ளது. 1. மீன் பிடித்தல் 2. கப்பல் கட்டும் தொழில் 3. கப்பல் திருத்தும் தொழில் 4. கப்பல் ஓட்டும் தொழில் 5. கடலிலிருந்து உப உற்பத்திகள் தயாரித்தல்.

6—9ம் வகுப்பு வரை கடற்றொழில் கற்கும் ஒரு மாணவன் இவை பற்றிய ஒரு ஆரம்ப அறிவையும், அடிப்படை விளக்கங்களையும் அறிந்து கொள்கிறுன். அத்துடன் சில பிரிவுகளில் கூடுதலான தேர்ச்சி பெறுவதுடன் அவற்றிற்குரிய கைக்குரிய திறன்களையும் பெறுகிறுன். எனவே எமதூரின் சூழ்நிலையில் குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய பாடப்பிரிவுகளிலே ஆரம்பக் கல்வியைப் பெறுவது மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒரு தன்னம்பிக்கையைக் கொடுப்பதோடு, முன்னேற்றத்திற்கும் வழியைக் காட்டக் கூடியதாகும். இதனைக் கருத்திற் கொண்டு இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து எமது கல்லூரியில் கடற்றொழில் ஆய்வுகூடம் ஒன்றும் புதிதாக கட்டி முடிக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பல பாடசாலைகளில் தே. க. பொ. த. பரீட்சை முடிவுகளின் போது ஏனைய பாடங்களில் A, B போன்ற சிறப்புத் தரங்களைப் பெற்ற பல மாணவர்கள் தமது தொழில் முன்னிலைப் பாடங்களில் சாதாரண சித்தியைத் தானும் பெற முடியாத காரணத்தால் தே. உ. க. சா. வகுப்புக்குரிய அனுமதியை இழந்தது போன்ற சந்தர்ப்பங்கள் எமது பாடசாலையில் இல்லையென்றே கூறவேண்டும். இதற்குரிய காரணம் எமது கல்லூரி தெரிவு செய்த தொழில் முன்னிலைப் பாடங்களைக் கற்பதில் மாணவர்களுக்கோ, அல்லது கற்பிப்பதில் ஆசிரியர்களுக்கோ இடர்களேதும் இல்லையென்பதேயாகும்.

மேலும் கடற்றொழிலை ஒரு பாடமாகக் கற்க விரும்பாத மாணவர் வசதி கருதி வர்த்தகவியலை ஒரு தொழில்முன்னிலைப்பாடமாக ஆரம்பிக்கவும், கடந்த தே. க. பொ. த. பரீட்சையில் அதிகமான மாணவர்கள் வர்த்தகப் பிரிவுக்கும் தகைமை பெற்றதால் தே. உ. க. சா. வகுப்பின் வர்த்தகப் பிரிவை எமது கல்லூரியில் ஆரம்பிக்கவும் அதிபரும், பெ. ஆ. சங்கமும் எடுத்து வரும் முயற்சிகள் வெற்றியடையும் நிலையிலுள்ளன. வளர்ந்து வரும் பொருளாதார உலகில் வர்த்தகம் வகிக்கும் முக்கிய பங்கை உணர்ந்து தகுந்த சமயத்தில் வர்த்தகத்தையும் ஒரு தொழில் முன்னிலைப் பாடமாக தெரிவு செய்வது கணக்கியற் துறைகளில் எமது மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த உதவும் என்பது வெள்ளிடைமலை.

**கோ. சற்குணபாலன்**
பொருளாளர் பெ. ஆ. சங்கம்




# க. பொ. த. உயர்தர மாணவர் மன்ற நிர்வாகசபை



நிற்பவர்கள் (இடமிருந்து வலம்); இ. பாலகுரு (ஆங்கிலப் பத்திராதிபர்), வி. விஜயகுமார் (தமிழ்ப்பத்திராதிபர்), நா. மோகன் (பொருளாளர்), தி. முரளீதரன் (உபசெயலாளர்), ந. சோதிக்குமார் (நிர்வாகசபை உறுப்பினர்)

இருப்பவர்கள் (இடமிருந்துவலம்): கோ. செல்வவிநாயகம் (காப்பாளர்), ந. விநாயகமூர்த்தி (தலைவர்), மு. இரவீந்திரன் (செயலாளர்),

சமுகமளிக்காதோர்: வே. முருகவேல் (உபதலைவர்), A. E. மத்தியூஸ் (நிர்வாகசபை உறுப்பினர்)

# இந்து மாணவர் மன்றம்



இருப்பவர்கள் (இடமிருந்துவலம்); சு. பானுமதி, கோ. செல்வவிநாயகம் (அதிபர்), மு. இரவீந்திரன் (செயலாளர்), நா. மோகன் (தலைவர்), ந. பாலேந்திரன் (பொருளாளர்), வே. சதாசிவம் (காப்பாளர்), கி. கமலாதேவி (உபபொருளாளர்)

நிற்பவர்கள் (இடமிருந்துவலம்) த. இரத்தினவடிவேல், சி. ஸ்ரீலட்சுமி, கு. சுரேந்திரன், சி. அருள்நேசன், இ. வரதராஜ், (கணக்காளர்), வி. விஜயகுமார் (உபதலைவர்), எஸ். சண்முகநாதன் (உபசெயலாளர்), த. சிவநேசன், த. தேவராணி, செ. சற்குணராஜன்

# இந்து மாணவ மன்ற அறிக்கை.

காப்பாளர்: திரு. வே. சதாசிவம்
தலைவர்; செல்வன் நா. மோகன்
செயலாளர்: செல்வன் மு. இரவீந்திரன்
பொருளாளர்: செல்வன் ந. பாலேந்திரன்

மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் கல்லூரி வெளியிடும் சஞ்சிகைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் கடமைப்பாடுடையேன். இதன் மூலம் நடப்பு வருடத்தில் நடைபெற்ற மன்றத்தின் செயற்பாடுகளைப் பற்றி அறியத்தருகிறேன்.

நான்கு வாரங்களுக்கு ஒரு முறை எமது மன்றத்தின் கூட்டம் நடைபெறும். வருட ஆரம்பத்தில் பேராதனைவளாக இந்து மாணவ மன்றத்தினரால் அங்கு அமைந்துள்ள குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் எமது மன்றத்தின் சார்பாக இரு பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். எமது மன்றத்தினரால் சமயகுரவர்கள் நால்வரினதும் குருபூசைத் தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இதில் மாணவர்களின் பேச்சுக்களும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஸ்ரீசித்தாந்த யோகி அவர்களின் யோகாசனம் பற்றிய செயல் முறை விளக்கமொன்று ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றது. திரு முத்துக்குமாரசுவாமி அவர்களால் சமய சம்பந்தமான பேச்சு நிகழ்த்தப்பட்டது.

வருடா வருடம் நாம் நடாத்தி வரும் நவராத்திரி விழா இவ் வருடமும் சிறப்பாக நடைபெற்றது. தினமும் காலையில் கும்பப் பூசையும் தோத்திரங்களும் நடைபெற்றன. இறுதித் தினமாகிய விஜயதசமியன்று வாணிக்கும் பெருவிழா எடுத்து கலையின் பயன் பல கண்டோம். இந்நிகழ்ச்சிகளில் கரவைக்கிழார், ஆசிரியர் திருநாவுக்கரசர் ஆகியோர் சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றினர்கள். உடுப்பிட்டியூர் ஸ்ரீமுருகன் வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி எம்மை பக்திப்பரவசத்தில் ஆழ்த்தியது. எமது பாடசாலை லிகிதரான திரு ஜெகநாதன் அவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர்கள் பங்கு பற்றி மேலும் விழாவைச் சிறப்புறச் செய்தார்கள். அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றோர்:

| பேச்சு: | மேற்பிரிவு | மத்திய பிரிவு | கீழ்ப் பிரிவு |
|---|---|---|---|
| ஆண்கள்: | தி. முரளீதரன் | S. சண்முகநாதன் | K. சுரேந்திரன் |
| பெண்கள்: | | N.பத்மாசனி | V. வேணி |

இசைப் போட்டி:
T. அரசராணி
S. செல்வரூபராணி
S. தங்கராணி

மேலும் எதிர் காலத்தில் இம்மன்றம் சிறப்பாக இயங்கி அதன் குறிக்கோளை நிறைவேற்ற வாழ்த்துகிறேன்.

மு. இரவீந்திரன்
மன்றச் செயலாளர்

# க. பொ. த. உயர்தர மாணவர் மன்ற அறிக்கை.

| | 1-ம் தவணை | 2-ம் தவணை | 3-ம் தவணை |
|---|---|---|---|
| காப்பாளர்: | திரு வே. சத்தியமூர்த்தி | திரு கோ. செல்வவிநாயகம் | திரு கோ. செல்வவிநாயகம் |
| தலைவர்: | K. ஜெயசேகரம் பிள்ளை | T. முரளீதரன் | N. விநாயகமூர்த்தி |
| செயலாளர்: | K. M. ராதா | V. விஜயகுமார் | M. இரவீந்திரன் |
| பொருளாளர்: | N. பாலேந்திரன் | N. ரவீந்திரன் | N. மோகன் |

எமது மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் எமது மன்றத்தின் அறிக்கையை உங்களின்முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதன்மூலம் நடப்பு வருடத்தில் நடைபெற்ற மன்றத்தின் செயற்பாடுகள்பற்றி அறியத்தருகிறேன். இ நவாரத்திற்கொரு முறை வாரத்தின் இறுதிநாள் மண்டபத்தில் ஒருங்குசேரும் நாம் ஆக்கமளிக்கும் பேச்சுக்களையும் விவாதங்களையும் கவிதைகளையும் நடத்தி மகிழ்ந்திருக்கின்றோம். எமது மன்றத்தின் நோக்கம் எதிர்காலத் தலைவர்களையும் பேச்சுவன்மையுடையோர்களையும் ஜனநாயகப் பண்புகளையும் வளர்ப்பதோடு கலை கலாச்சார பண்பாட்டு கோலாலங்களையும் பேணி வளர்த்தலுமாகும்.

எமது மன்றத்தினர் கல்லூரியில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் பெரும் பங்கெடுத்து அதில் தமது செயற் திறனையும் தொழில் நுட்பத்தையும் எடுத்துக் காட்டி எல்லோரையும் மெய்மறக்கச் செய்து எல்லோரினதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டனர். இவ்வருடத்துடன் எமது கல்லூரியில் க. பொ. த. உயர்தரம் ஸ்தாபிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியானதையிட்டு ஒரு கதம்ப நிகழ்ச்சியை நிகழ்த்தி அந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முன்னாள் உயர்தர மாணவர் ஆகிய டாக்டர் சு. இராமலிங்கம் அவர்களை பிரதம விருந்தினராகவும் கல்லூரி முன்னாள் அதிபர் திரு K. பாலச்சந்திரன் அவர்களையும் அழைத்து 25வது வருட பூர்த்தியை கொண்டாடினோம். இந் நிகழ்ச்சியில் வல்லை மகளிர் வித்தியாலய மாணவிகளும் சிவகுரு வித்தியாசாலை மாணவிகளும் நாட்டிய நிகழ்ச்சியை அளித்தனர்.

மன்றத்தின் காப்பாளராகவும் உயர் வகுப்புக்களில் ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு வே. சத்தியமூர்த்தி அவர்கள் இங்கிருந்து யா/இடைக்காடு மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகி செல்வதை இட்டு எம்முடன் இரண்டறக் கலந்து எமக்கு பல அறிவுரைகள் வழங்கிய ஒருவர் எம்மை விட்டு பிரிவதையொட்டி அவருக்கு பிரிவுபசார விழா ஒன்றை நடத்தி அவரை நன்கு கௌரவித்து எமது அன்பை புலப்படுத்தினோம்.

எமது ஆக்கப் பணிகளுக்கும் முயற்சிகளுக்கும் ஆதரவும் ஊக்கமும் அளித்த காப்பாளருக்கும் அதிபருக்கும் நாம் சோர்ந்து போகாது அயராது உழைக்க பக்கத் துணையாய் இருந்த ஒவ்வொருவருக்கும் நன்றி கூறி எதிர் காலத்தில் இம்மன்றம் மேலும் சிறப்பாக இயங்கி அதன் நோக்கத்தை நிறைவேற்ற வாழ்த்திவிடை பெறுகின்றேன்.

மு. இரவீந்திரன்
செயலாளர்

# தேசிய உயர் கல்விச் சான்றிதழ் வகுப்பு (H.N.C.E.) விஞ்ஞான மன்றத்தின் அறிக்கை 1977

எமது கல்லூரியினுல் வெளியிடப்படும் இம்மலரில் எமது மன்றத்திற்கும் ஓர் இடம் அளித்ததையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதுடன் எமது மன்றத்தின் அறிக்கையையும் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

சிதம்பரக்கல்லூரி தே. உ. க். சா. வகுப்பு விஞ்ஞான மாணவர் மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 1976ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி நடைபெற்றது.

பின்வரும் உத்தியோகத்தர்கள் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: திரு. கோ. செல்வவிஞயகம் (அதிபர்)
உபகாப்பாளர்: திரு. கோ. சற்குணபாலன் (வகுப்புஆசிரியர்)
தலைவர்: செல்வன் ஆ. விஜயரஞ்சன்
உபதலைவி: செல்வி. கி. கமலாதேவி
செயலாளர்: செல்வன் செ. புவராஜன்
பத்திராதிபர்: செல்வன் க. ஶ்ரீகரன்
பொருளாளர்: செல்வன் க. செல்வச்சந்திரபோஸ்

தற்போது வளர்ந்து வரும் விஞ்ஞானத்துடன் போட்டியாக நாமும் விஞ்ஞான உலகினை ஓரளவாவது எட்டிப் பிடிக்க வேண்டும் என்னும் நோக்கமும் அதிபர் அவர்களின் முயற்சியும், நல்லாதரவும் இம்மன்றத்தினை ஆரம்பிப்பதற்குப் பெரிதும் தூண்டு கோலாகவிருந்தன. எமது வகுப்பு மாணவ மாணவிகள் 32 பேரும் மன்ற அங்கத்தவர்களாவர். இவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இரு வாரங்கட்கு ஒரு முறை நாம் கூடி எமது வாழ்க்கையோடு இயைந்த சில முக்கியமான பிரச்சினைகளை எடுத்து அவற்றை விஞ்ஞான ரீதியில் பகுத்து ஆராய்ந்து பரிசோதனைகளைச் செய்து முடிவுகளை எடுக்கிறேம். இவ்வகையில் ஒவ்வொரு குழுவும் ஒரு பிரச்சினையை எடுத்து அதனை பாடசாலைகளிலும் பாடசாலை முடிந்த நேரங்களிலும் செய்முறைகள் மூலம் அணுகி அவை பற்றிய விரிவான அறிக்கையை தங்கள் கூட்டமுறையின் போது சமர்ப்பிப்பார்கள். அறிக்கை சமர்ப்பித்த பின்பு கலந்துரையாடலும் கேள்வி நேரமும் இடம் பெறும். எமது கூட்டங்களில் குழுக்கள் எடுத்துக் கொண்ட பிரச்சினைகள் பின்வருமாறு:

1. வடலிப் பஞ்சு காயங்களை ஆற்றுவதற்கு தூண்டு கோலாயுள்ளதா?
2. மிளகாய்ச் செடியில் ஏற்படும் குறும்பன் நோய் மிளகாய்களில் மாற்றத்தை ஏற்படுத்துகிறதா?
3. எமது கல்லூரி கிணற்றுநீர் அயலிலுள்ள கிணற்று நீரை விட கலங்கிய நிலையில் காணப்படுவதன் காரணம்?

4. எமது தூர் கடல் நீரின் பகுப்பு.

இவை தவிர எமது கல்வியுடன் நேரடியாகத் தொடர்புள்ள சில சேகரிப்புகளை நடாத்தி அவற்றின் பகுப்புகளையும், இயல்புகளையும் அறிந்து அறிக்கை வடிவில் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றுட் சில:

1. வண்ணாத்திப் பூச்சி சேகரிப்பும் அவற்றின் இயல்புகளும்.
2. வண்டு சேகரிப்பும் அவற்றின் இயல்புகளும்.
3. இலைகள் சேகரிப்பும் அவற்றின் பெயர்களும்.
4. ஊர்வன சேகரிப்பும் அவற்றின் இயல்புகளும்.
5. மீன்கள் சேகரிப்பும் அவற்றின் இயல்புகளும்.

அத்துடன் கல்வித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் என்பவற்றின் வேண்டுகோளுக்கிணங்க, நன்னீர்ப்பாதுகாப்பு எனும் செய்திட்டத்தின் கீழ் எமது எல்லாக் குழுக்களும் சேர்ந்து வல்வெட்டித்துறை எல்லைக்குள் கடற்கரையிலுள்ள மழை நீர் ஊற்றுகளுக்குச் சென்று அவற்றை அடையாளமிட்டு, அவற்றிலிருந்து வெளியேறும் நீரின் கன அளவுகளையும் நீரின் தன்மையையும் அறிந்து அந்நீரின் மாதிரிகளையும் சேகரித்துள்ளோம். இந்நீரிலுள்ள உப்புக்களின் அளவைப் பொறுத்து ஊற்றுக்களின் ஆரம்பத்தை அறிந்து கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் எமக்கு உதவ முன் வந்துள்ளது.


அத்துடன் கல்லூரியின் ஏனைய விஞ்ஞான ஆசிரியர்களும் ஒரு குறிப்பிட்ட விஞ்ஞான விடயத்தைப் பற்றிய செய்முறையுடன் கூடிய விளக்கங்களையும் அளித்து வந்துள்ளார்கள். இவ்வருடம் வெளியிலுமுள்ள விஞ்ஞானத்துறையில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களைக் கொண்டும் கருத்தரங்குகள் நடாத்துவிக்கும் ஒரு விரிவான திட்டத்தையும் வைத்துள்ளோம். மேலும் ஒவ்வொரு கூட்டங்களிலும் காப்பாளர் அவர்களால் பளிங்கு வானொலி அமைத்தல், றேடியோ அமைத்தல் ஆகியன பற்றிய ஒரு தொடர்ச்சியான செய்முறையுடன் கூடிய விளக்க வகுப்பு நடத்தப்பட்டதுடன் அங்கத்தவர்களால் கொண்டு வரப்பட்ட உதிரிப்பாகங்களுடனும், ஏனையவற்றுடனும் இயங்கக் கூடிய ஒரு டிரான்ஸிஸ்டர் கொண்ட பளிங்கு வானொலிக் கருவியொன்றும் உருவாக்கப்பட்டது.

அதிபர், ஆசிரியர்களின் அன்பும் ஆதரவும் மன்ற அங்கத்தவர்களின் செயற்றிறனும் மன்ற வளர்ச்சிக்கு இன்றிருப்பது போலவே என்றும் இருக்க வேண்டும் எனக் கூறி விடைபெறுகிறேன்.

**செ. யுவராஜன்**
செயலாளர்



## க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர் மன்றம்



## தே. உ. க த. ப வகுப்பு மாணவர் மன்றம்



# மாணவ முதல்வர் மன்றம்



நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): ந. விஜயகமூர்த்தி, வ. த. கிருஷ்ணமூர்த்தி, வே. ராதா கிருஷ்ணன், உ. சேகர், ந. ரவீந்திரன், மு. இரவீந்திரன், சோ. மகேந்திரராஜா

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): ந. பாலேந்திரன (செயலாளர்), ஆ. சுபாஸ்ரஞ்சன், க. பக வத்சிங்கம் (உபஅதிபர்), பா. இரத்தினபாலன் (தலைவர்), கோ. செல்வவிநாயகம் (அதிபர்) நா. மோகன், இ. தங்கவேல்

# மாணவ முதல்வர் மன்ற அறிக்கை.

எமது கல்லூரி வல்லை நகரில் சிறந்த ஒரு சமுதாயத்தைப் படைப்பதில் வெற்றி கண்டு வருவது யாவரும் அறிந்த ஒன்றே. எமது கல்லூரி மேற்படி கடமையை சிறப்புறச் செய்து வருவதற்கு பல காரணங்கள் உண்டு. அந்த வகையில் எமது மன்றமும் ஒரு காரணமாக அமைகின்றது. கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் யாவரதும் ஒத்துழைப்போடு மலர் ஒன்றினை வெளியிடும் இவ்வேளைதனில் மன்றத்தின் சேவைகள் பற்றிய அறிக்கையினை உங்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதில் இம்மன்றத்தின் செயலாளர் என்ற முறையில் பெருமிதம் அடைகின்றேன்.

எமது மன்றம் அதிபர் அவர்களை போஷகராகவும் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரை ஆலோசகராகவும் கொண்டுள்ளது. மன்றத்தின் அங்கத்தினர்கள் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவு செய்யப்பட்ட புதிய அங்கத்தவர்கள் கல்லூரி பேரவைக் கூட்டத்தில் கல்லூரியின் நலனை முன்வைத்து அதிபர் ஆசிரியர்களின் ஆலோசனைக்கமைய கல்லூரியின் ஒழுங்கை நிலைநாட்ட தம்மால் இயன்றவரை பணிபுரிவோம் என வாக்குறுதி எடுத்துக் கொண்டு கடமை புரிய ஆரம்பிப்பார்கள். காலையிலும் மதிய இடைவேளையின் பின்உள்ள அமைதி நேரத்தின் போதும் குறுகிய இடை வேளையின் போதும் அமைதியை நிலைநாட்டுவார்கள். வெள்ளிதோறும் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையின் போது அங்கத்தவர் அனைவரும் ஓர் சிறந்த முறையில் பணிபுரிந்து மண்டபத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவார்கள். கல்லூரியில் நடைபெறும் எல்லாப் பொது நிகழ்ச்சியின்போதும் மன்றம் பலமுறை அதிபர் ஆசிரியர்களுடன் உறுதுணையாக நின்று கடமை புரிந்து பொதுமக்களின் பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றது.

கல்லூரியில் சென்ற வருடத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போதும் கல்லூரியின் கட்டிட நிதிக்காக நடைபெற்ற 'பொப்இசை' நிகழ்ச்சியின் போதும், கல்லூரியின் உயர்தர மாணவ மன்றம் தமது 25-ம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய 'கதம்ப விழாவின்' போதும் எமது மன்றம் கல்லூரியின் நலன் கருதி ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்ட ஓர் விசேட பணிமுறைப்படி பணிபுரிந்து அதிபரினதும், ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் பாராட்டைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

எமது மன்றத்தின் ஆலோசகர் திரு V. சத்தியமூர்த்தி ஆசிரியர் அவர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றலாகி சென்றமையிட்டு அவர்களைக் கௌரவிக்கும் முகமாக ஓர் பிரிவுபசார விழாவினையும், பழைய தலைவர் உட்பட பழைய அங்கத்தினர்களுடன் ஒன்றுகூடி அவர்களைக் கௌரவிக்குமுகமாக வருடாந்த தேனீர் விருந்தினையும், நடாத்தியதன் மூலம் அதிபர் அவர்களிடம் இருந்தும் ஆலோசகர் அவர்களிடம் இருந்தும் பழைய தலைவர் உட்பட பழைய அங்கத்தினரிடம் இருந்தும் அறிவுரைகளையும் ஆசியுரைகளையும் பெற்று இனிது இயங்கி வருகின்றது. எமது மன்றம் தற்போது ஆற்றல் வாய்ந்த அங்கத்தினர்களையும் செல்வன் பா. இரத்தினபாலன் அவர்களை தலைவராகவும் அதிபர் அவர்களை ஆலோசகராகவும் கொண்டு தமது கடமைகளை சிறப்புச் செய்து வருகின்றது.

தொடர்ந்து எமது மன்றம் கல்லூரியின் வளர்ச்சிக்கும் ஒழுங்கிற்கும் கல்லூரியின் நிர்வாகத்துடன் உறுதுணையாக நின்று சிறப்புற பணி புரிய வேண்டும் என வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**ந. பாலேந்திரன்**
செயலாளர் மாணவ முதல்வர் மன்றம்

# எங்கள் சாரணர் குழு

| | |
|---|---|
| குழுச் சாரண தலைவர்: | திரு கோ. குழந்தைவேல் |
| சிரேஷ்ட சாரண தலைவர்: | திரு கு. அப்பாத்துரை |
| சாரண தலைவர்கள்: | திரு கோ. சற்குணபாலன் |
| | திரு து. சக்திவேல் |
| | திரு வே. ஜெயச்சந்திரன் |
| துருப்புத் தலைவன்: | மு. இரவிந்திரன் |
| உதவியாளர்: | ஆ. சுபாஸ்ரஞ்சன் |
| சிரேஷ்ட அணித் தலைவர்கள்: | சி. சிவகுமாரன் |
| | ச. ஜெயமோகன் |
| கனிஷ்ட அணித் தலைவர்கள்: | அ. ராஜ்குமார் |
| | செ. இரவீந்திரன் |
| | கு. சுரேந்திரன் |
| | செ. சிவகுமாரன் |
| குழுவின் மொத்தஎண்ணிக்கை: | 34 |
| ஜனாதிபதி சாரணன்: | 1 |
| முதலாம் வகுப்பு: | 9 |
| பச்சைக் கயிறுடையோர்: | 4 |
| 2ம் வகுப்பு: | 15 |
| இளம் பாதர்: | 9 |

★ வேதன வேலை வாரத்தில் சகல சாரணரும் பங்கு கொண்டு ரூபா 612ஐ சேகரித்தனர்.

★ வார இறுதிப் பாசறை இம்முறை மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது. சாரணருக்கான வகுப்புக்கள், பயிற்சிகள், பரீட்சைகள் ஆகியன நடைபெற்றன. மணற்காட்டிற்கு சென்றபோது சாரணர்களும் சாரணுளர்களும் சிக்கனத்தை மறக்காமல் சைக்கிள்களிலேயே சென்று வந்தது குறிபிடத்தக்கது.

★ எட்டு கனிஷ்ட சாரணர்களுக்கும் நான்கு சிரேஷ்ட சாரணர்களுக்கும் சின்னம் சூட்டும் வைபவம் நடைபெற்றது. அனேக பெற்றோர் வருகை தந்தனர்.

★ கல்லூரியின் பலவித பணிகளிலும் சாரணர் பங்கு கொண்டபோதும், புதிய கட்டிடத்திற்கான சிரமதானப் பணி குறிப்பிடக் கூடியது.

★ தொண்டைமானாறு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உபமாவட்ட விழாவில் சிறப்பாகப் பங்குபற்றினோம். தனியொரு போட்டியான பாசறைப் பரிசோதனையில் முதலிடம் பெற்றோம்.

★ மாவட்ட சாரண ஆணையாளராகப் பதவியேற்று சாரண நிகழ்ச்சியில் முதன் முதலாகக் கலந்து கொண்ட திரு எஸ். கந்தமூர்த்தி அவர்களுக்கு வடமராட்சி உபமாவட்ட சாரணர் சங்கம் அளித்த மரியாதை அணி வகுப்பில் கலந்து கொண்டோம்.

★ வழமை போல செல்வச்சந்நிதி திருவிழாவில் இறுதி நாட்களில் கோவிற் கடமை புரிந்தோம்.

★ யாழ் சாரண வைர விழாவில் பங்கு கொண்டு பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்றோம்.

1. பாசறைப் பரிசோதனை — முதலிடம்
2. திடற் காட்சி — முதலிடம்
3. அரங்கக் காட்சி — முதலிடம்
4. பாசறைத் தீ — 2-ம் இடம்
5. சமூக சேவைகள் — 2-ம் இடம்
6. பதிவேடுகள் — 2-ம் இடம்

யாழ் மாவட்டப் போட்டியில் — 2-ம் இடம்

★ சிரேஷ்ட சாரணத் தலைவர் திரு கு. அப்பாத்துரை அவர்கட்கு யாழ் மாவட்ட குருளையர் விழாவினில் தரு சின்னம் வழங்கப்பட்டது.

★ திரு என். சுவாமிநாதன், திரு ஏ. தெய்வேந்திரன் இருவரும் ஆரம்பசாரணளர் பயிற்சி பெற்றுக் கொண்டனர்.

★ எங்கள் கல்லூரி அதிபரும் வடமராட்சி உபமாவட்ட சாரண ஆணையாளருமான திரு கே. கோ. செல்வவிஞயகம் அவர்கள் மாவட்ட தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ கல்லூரியில் சாரண தலைவர்கட்கான இரு பயிற்சிப் பாசறைக்ள் நடைபெற்றன.

அகில இலங்கை சாரணளர் பயிற்சிக் குழுவின் அங்கத்தவராகவும் யாழ் மாவட்ட தலைமைப் பயிற்சிப் பொறுப்பாளராகவும் பணி புரியும் ஒருவர் எங்கள் கல்லூரியின் அதிபராகவும், எமது குழுவின் அங்கத்தவராகவும் பணி புரிவது எமக்குக் கிடைத்த ஒரு பேருகும். அவ்வகையில் அவர் எமக்களித்த நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளுக்காக கல்லூரி அதிபருக்கும் மற்றும் எங்கள் துருப்புக்கு பல விதத்திலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பழைய சாரணர்கள், சாரண ஆசிரியர்கள், மற்றோர் அனைவருக்கும் 12-ம் யாழ்ப்பாணக்குழுவின் உளமார்ந்த நன்றிகள்.

# விளையாட்டுத்துறை

குடாநாட்டுப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் விளையாட்டுத் துறையில் சிதம்பரா ஒரு சிறந்த பாரம்பரியத்தை கொண்டிருந்திருக்கின்றது. இக்கல்லூரி மாணவர்கள் பல ஆண்டுகளுக்கு முதல் கரபந்தாட்டத்தில் தேசிய தரத்தை அடைந்தார்கள். அகில இலங்கைப் போட்டியிலே சாம்பியன்களாக இவர்கள் அன்று தெரியப்பட்டது நாம் இன்றும் எண்ணிப் பூரிப்படையும் ஒரு நிகழ்ச்சியாகும். குறிப்பாக இற்றை நாள் வரை குடாநாட்டிலே எமது வீரர்கள் கரப்பந்தாட்டத்திலே ஓர் சிறந்த தரத்தைக் கொண்டுள்ளனர் என்றால் அதற்குக் காரணமாக இருந்தது சிதம்பரா என்று கூறினால் மிகையாகாது.

இவ்வாண்டிற்குரிய எமது மெய்வல்லுனர் போட்டி பிரதம கல்வி அதிகாரி திரு. க. சிவநாதன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் விளையாட்டுப் போட்டி சிறக்க ஆற்றிய உதவி போற்றுதற்குரியதாகும், மேலும் எமது விளையாட்டு மைதானத்தை இக்கல்லூரிக்கு சொந்தமாக்கும் முயற்சியில் திரு. க. சிவநாதன் அவர்கள் ஈடுபடப்போவதாக கூறியது இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

காற்பந்தாட்டத்துறையில் இம்முறை எமது 1ம் கோஷ்டி மிகவும் திறமையாக விளையாடியது. யாழ் குடாநாட்டின் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்ட இந்துக் கல்லூரியினால் மிகவும் துர்அதிஷ்ட வசமாக 1 கோலினால் எம் கல்லூரி தோற்கடிக்கப்பட்டமை எமது மனத்தினின்றும் அகலாத சம்பவமாகும்.


வட்டார ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கல்லூரியின் மாணவர்கள் அநேக முதலாம், இரண்டாம் இடங்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் பெற்றார்கள்.

இவ்வாண்டு எமது கல்லூரி மாணவர்களுக்கு 'கிரிக்கெற்' விளையாடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தோம். கிராமங்கள் தோறும் பரவி வரும் இவ்விளையாட்டு இக்கல்லூரியிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது பல பெற்றோர்களின் நீண்ட நாள் விருப்பமாகும்.

எனினும். சகல விளையாட்டுத்துறையிலும் எம் சிறார்கள் முன்னேற எமது விளையாட்டரங்கு பெரும் தடைக்கல்லாக அமைந்துள்ளது, இப்பாடசாலையை நிர்வகித்து செல்லும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வமுள்ள பெற்றோர்களினதும் முயற்சிகள் கைகூடி இந்த மைதானம் எமக்கு சொந்தமாகி மணற்பரப்பும் பனம் கூடலும் அகன்று சிறந்த ஒரு மைதானமாகும் நாள் விரைவில் வரும் என்று எண்ணுகிறேன்.

செ. யோகச்சந்திரன்
விளையாட்டுப் பொறுப்பாசிரியர்

## சாரணர் குழு



# உதைபந்தாட்டக் குழு



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): V. ராதாகிருஷ்ண, N. மோகன் (உப தலைவர்), கோ. செல்வவிநாயகம் (அதிபர்), T. முரளீதரன் (தலைவர்), S. யோகச்சந்திரன் (POG), B. இரத்தினபாலன், N. ரவீந்திரன்

நிற்பவர்கள்: (இடமிருந்து வலம்): T. சிவகணேசன், M. நந்தகோபன், S. செல்வச்சந்திரன் K. பிரேம்குமார், V. முருகவேல், E. அசோக்குமார், I. கிருஷ்ணலிங்கம்

# சிதம்பரப்பிள்ளை இல்லம்

| | | |
|---|---|---|
| இல்ல ஆசிரியர்கள்: | திரு K. குழந்தைவேல்<br>திரு S. சுவாமிநாதன்<br>திரு P. பாலசுப்பிரமணியம்<br>செல்வி K. வேலாயுதம் | |
| இல்லத் தலைவர்கள்: | K. ஜெயசேகரம்பிள்ளை | E. அசோக்குமார் |
| தலைவி: | M· அம்பிகைவதனு | |
| விளையாட்டுத் தலைவர்கள்: | V. ராதாகிருஷ்ண | S. ரவீந்திரன் |
| தலைவி: | S. சரோஜினிதேவி | |
| உதைபந்தாட்டத் தலைவர்; | சிரேஷ்ட பிரிவு: E. அசோக்குமார்<br>கனிஷ்டபிரிவு: S. விஜயகுமார் | |
| மென்பந்தாட்டத் தலைவர்: | சிரேஷ்ட பிரிவு: S. செல்வச்சந்திரன்<br>கனிஷ்டபிரிவு: A. கணேஷ் | |
| பொருளாளர்: | K. M. ராதா | |

எமது இல்ல அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் மாணவ மாணவிகள் பங்கு பற்றி தங்களாலான திறமையைக் காட்டினுர்கள். எமது இல்லம் 2-ம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எமது இல்லம் அணிநடைப் போட்டியில் 3-ம் இடத்தையும், இல்ல அலங்காரத்தில் 3-ம் இடத்தையும், கயிறு இழுத்தலில் 1-ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் மென்பந்தாட்ட சிரேஷ்ட பிரிவுக் குழுவினர் 2-ம் இடத்தையும் கனிஷ்ட பிரிவு உதைபந்தாட்டக் குழு 1-ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. எமது இல்ல விளையாட்டு வீரர் E. அசோக்குமார் வெற்றி வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். பாடசாலையில் நடைபெற்ற போட்டிகளில் திறமையுடனும் உற்சாகத்துடனும் பங்குபற்றிய எமது இல்ல மாணவ மாணவிகளுக்கும், இவர்கள் திறமையாகச் செய்வதற்கும் பல வழிகளிலும் உதவிய எமது இல்ல ஆசிரியர்களுக்கும், விளையாட்டுக்களைப் பழக்கிய உடற்பயிற்சி ஆசிரியருக்கும், போட்டிகள் மூலம் மாணவ மாணவிகளை ஊக்கிய அதிபர் அவர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியை இல்லத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேம். எதிர்வரும் ஆண்டுகளிலும் எமது இல்ல மாணவ மாணவிகள் உற்சாகத்துடனும் திறமையுடனும் பணி புரிவார்கள் என எதிர்பார்க்கின்றேம்.

இல்லத் தலைவர்கள்
V. ஜெயசேகரம்பிள்ளை
E. அசோக்குமார்

# குமரகுரு இல்லம்

| | |
|---|---|
| இல்ல ஆசிரியர்கள்: | திரு. வே. சத்தியமூர்த்தி |
| | கோ. சற்குணபாலன் |
| | எஸ். செல்வவிநாயகம் |
| | திருமதி ஜி. அரியரெட்ணம் |
| இல்லத் தலைவர்: | வி. லோகநாதன் |
| தலைவி: | எஸ். அம்புஜம் |
| விளையாட்டுத் தலைவர்: | S. சக்திவேல் |
| தலைவி: | S. ராதாதேவி |
| உதைபந்தாட்டத் தலைவர்: | B. இரத்தினபாலன் |
| மென்பந்தாட்டத் தலைவர்: | T. சிவகுமார் |
| பொருளாளர்: | T. கோணேஸ்வரன் |

எமது இல்லத்தின் அறிக்கையை இம்மலருக்குச் சமர்ப்பிப்பதில் நானும் எமது இல்ல வீரவீராங்கனைகளும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த வருடங்களில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் நாமும் பங்கு கொண்டு கடுமையாகப் போட்டியிட்டு விளையாட்டுப் போட்டியை சிறப்பித்தோம்.

இவ்வருட விளையாட்டுப் போட்டியில் எமது இல்லம் இல்ல அலங்காரத்தில் முதலாம் இடத்தை வகித்தது. இப் போட்டிகளில் எமக்குக் கிடைத்த பல வெற்றிகள் எமது இல்ல வீர, வீராங்கனைகளின் அயராத உழைப்பையும், திறமையையும் குறிக்கின்றது. இல்லங்களுக்கிடையிலான மென்பந்தாட்டப் போட்டியில் கனிஷ்ட பிரிவினர் 1ம் இடத்தைப் பெற்றனர்.

எமது மாணவ மாணவிகள் தமது கடமையைச் சரிவரச் செய்வதற்கு வழிகாட்டியாக இருந்த இல்ல ஆசிரியர்கட்கும் விளையாட்டாசிரியர்கட்கும் மற்றும் எம்முடன் ஒத்துழைத்த இல்ல அங்கத்தவர்கட்கும் இல்லப் போட்டிகளின் மூலம் மாணவரிடையே திறமையையும், உற்சாகத்தையும் அளித்த அதிபர் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியை இல்லத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது இல்ல மாணவ மாணவிகள் எதிர் வரும் ஆண்டுகளில் உற்சாகத்துடனும் திறமையுடனும் பணி புரிவார்கள் என எதிர் பார்க்கின்றேன்.

V. லோகநாதன்
இல்லத் தலைவர்

# இரங்கநாதன் இல்லம்

| | |
|---|---|
| இல்ல ஆசிரியர்கள்: | திரு K. T. பெரியதம்பி<br>திரு N. அழகரட்ணம்<br>திரு S. நடராஜா<br>திருமதி V. வித்தியாசாகரம் |
| இல்லத் தலைவர்கள்: | A. எமேசன் மத்தியூஸ்    P. வரதராஜ் |
| தலைவி: | S. ஞானமலர் |
| விளையாட்டுத் தலைவர்கள்: | V. முருகவேல்    K. பிறேம்குமார் |
| தலைவி: | T. சந்திரவதனு |
| உதைபந்தாட்டத் தலைவர்: | சிரேஷ்ட பிரிவு: A. எமேசன் மத்தியூஸ்<br>கனிஷ்ட பிரிவு: K. பிறேம்குமார் |
| மென்பந்தாட்டத் தலைவர்: | சிரேஷ்ட பிரிவு: V. முருகவேல்<br>கனிஷ்ட பிரிவு: V. மகேந்திரன் |
| பொருளாளர்: | V. கிருஷ்ணமேனன் |

எமது இல்லத்தின் அறிக்கையை மலருக்குச் சமர்ப்பித்ததில் எமது இல்லம் பெரு மகிழ்ச்சி அடைகிறது. எமது இல்லம் இவ்வருடம் (1976) கடுமையான போட்டியிட்டு முதல் இடத்தைப் பெற்றமை இல்ல வீர வீராங்கனைகளின் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் எடுத்துக்காட்டுவதேயாகும்

மேலும் எமது இல்லம் அணிநடை, 1-ம் பிரிவு உதைபந்தாட்டம் என்பவற்றில் முதல் இடத்தையும். கனிஷ்ட பிரிவு மென்பந்தாட்டத்தில் 2-ம் இடத்தையும், அஞ்சல் ஓட்டத்திற்கான வெற்றிக் கேடயத்தையும் பெற்றுள்ளது. எமது இல்ல வீரர்களில் T. கிருஷ்ணலிங்கம், K. பிறேம்குமார், R. வரதராஜ், S. அழகேஸ்வரராஜா ஆகியோரும் வீராங்கனைகளில் S. ஞானமலர், S. ஸ்ரீபவானி ஆகியோரும் வெற்றி வீர வீராங்கனைகளாக (Championship) வந்துள்ளனர். இவையாவும் எமது இல்ல வீர வீராங்கனைகளின் திறமையை எடுத்துக்காட்டுவதேயாகும்

எமது இல்ல வீரர்களில் R. வரதராஜ், T. கிருஷ்ணலிங்கம், V. முருகவேல், K. பிறேம்குமார், P. வரதராஜ். S. அழகேஸ்வரராஜா ஆகியோர் பருத்தித்துறை வட்டாரப் போட்டிகளில் முதலாவது இடங்களையும் பெற்று மாவட்டப் போட்டிகளிலும் கலந்துகொண்டனர்.

இவ்வண்ணம் இல்ல வீர வீராங்கனைகள் விளையாட்டுத்துறைகளிலும் கல்வித்துறைகளிலும் சாதனைகளைப் புரிந்துள்ளனர். எமது இல்லம் முதலாம் இடத்தைப் பெறுவதற்கு அயராது உழைத்த எமது இல்ல வீரர்கட்கும், வீராங்கனைகட்கும், எமக்கு முன்னின்று உதவிய ஆசிரிய ஆசிரியைகட்கும் எமது இல்ல பழைய மாணவர்கட்கும் எமது இல்லத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்

இல்லத் தலைவர்கள்
A. எமேசன் மத்தியூஸ்
P. வரதராஜ்

# சின்னத்தம்பி இல்லம்

| | | |
|---|---|---|
| இல்ல ஆசிரியர்கள்: | திரு S. இரத்தினசிகாமணி<br>திரு V. சதாசிவம்<br>திரு V. வைரவப்பிள்ளை<br>திருமதி K. கணேஷ் | |
| இல்லத் தலைவர்கள்:<br>தலைவி: | T. முரளீதரன்<br>S. பொன்னம்மா | V. சந்திரசேகரம் |
| விளையாட்டுத் தலைவர்கள்;<br>தலைவி: | M. இரவீந்திரன்<br>S. செல்வரூபராணி | S. ஜெயமோகன் |
| உதைபந்தாட்டத் தலைவர்: | 1-ம் பிரிவு: N. மோகன்<br>2-ம் பிரிவு; N. ரவிசங்கர் | |
| மென்பந்தாட்டத் தலைவர்: | 1-ம் பிரிவு T. முரளீதரன்<br>2-ம் பிரிவு S. ரவீந்திரன் | |
| பொருளாளர்: | N. பாலேந்திரன் | |

எமது இல்லத்தின் அறிக்கையை இம்மலருக்குச் சமர்ப்பிப்பதில் நாமும் எமது இல்ல வீர வீராங்கனைகளும் பெருமகிழ்ச்சியடைகிறோம். கடந்த வருடங்களில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் எமது இல்லம் இரு வருடங்களாக முதல் கட்டத்தை வகித்த போதிலும் இவ்வருடம் கடுமையாகப் போட்டியிட்டும் எமது இல்லம் மூன்றாவது இடத்தைத்தான் பெற முடிந்தது.

இவ்வருட இல்ல விளையாட்டுப் போட்டியில் எமது இல்லம் அணிநடை, இல்ல அலங்காரம், கயிறு இழுத்தல், உதைபந்தாட்டம் (1ம், 2ம் பிரிவுகளிலும்) ஆகியவைகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. அத்துடன் மென்பந்தாட்டம் 1ம் பிரிவில் எமது இல்லம் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இவை யாவும் எமது இல்ல வீர வீராங்கனைகளின் அயராத உழைப்பையும் திறமையையும் குறிக்கின்றது. எமது இல்லத்தின் வீரர்கள் N. ரவீந்திரன், T. முரளீதரன் வீராங்கனை S. செல்வரூபராணி ஆகியோர் வெற்றி வீரர்களாக (Champion Chip) வந்துள்ளனர்.

இவ்வண்ணம் எமது வீர வீராங்கனைகள் கல்வித்துறையிலும் தங்கள் சாதனைகளைப் புரிந்துள்ளனர். எமது இல்லம் சகல துறைகளிலும் முன்வர வேண்டும் என்று அயராது பாடுபட்ட எம் இல்ல வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் முன்நின்ற எமது அதிபருக்கும் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல்லத் தலைவர்கள்

**V. சந்திரசேகரம்**

**தி. முரளீதரன்**

சுவைமிகு

★ கோழிப் புரியாணி

★ பரோட்டாகைமா

★ நூடில்ஸ்

★ வட்டிலப்பம்

மற்றும் பலவகையான உணவு வகைகள், குளிர்பானங்கள்,

யாவும் தரமான முறையில் நியாயமான வகையில்

இருநேரங்களிலும் சேவைபுரியும்

சிறந்த ஸ்தாபனம்

# ஹோட்டல் பரடைஸ்

பெண்களுக்கு தனி உணவு அறைவசதி,

நவீன தங்கும் அறைகள் இவைகளுக்கு

இன்றே விஜயம் செய்து பாருங்கள்

# HOTEL PARADISE

91, Kasturiar Road JAFFNA

சிதம்பராவின் வளர்ச்சி கண்டு பூரிப்படைகிறோம்

# வைர மாளிகை

★

கன்னாதிட்டி ::: யாழ்ப்பாணம்

*With the best compliments of*

NAC INDUSTRIES
VALVETTITURAI
SRI LANKA

## *N. A. C. Industries*

*Valvettiturai*

பாடசாலைப் புத்தகங்கள்

பேனக்கள்

மற்றும் உபகரணங்கள்

# சித்திவிநாயகம் புத்தகசாலை

பஸ் நிலையம், வல்வெட்டித்துறை

தின, வார, மாத
பத்திரிகைகள்
சஞ்சிகைகள்
பெற்றுக்கொள்ளலாம்

மலிவானதும் தரமானதுமான

## கல்யாணி (குத்துவிளக்கு) ஓடு

★ சந்திரிகா மார்க்

★ மயில் மார்க்

★ கப்பல் மார்க்

★ முடி மார்க்

★ சவான் மார்க்

மற்றும் தரமான உள்ளூர் ஓடுகளுக்கு பிரசித்தி பெற்றவர்கள்:

# தேவி ஸ்ரோஸ்

தொலை பேசி: 230,
231.

47, பீச் ரோட்
யாழ்ப்பாணம்

---

*For*

**Fantastical Multi Colour Litho Printing Works**

*Visit*

# GOWRIYI PRINTERS

Phone: : 33976

207, Wolfendhal Street, Colombo 13

## ஸ்ரீமனோன்மணி பேக்கரி

எங்களிடம் சுத்தமான முறையில் தயார்
செய்யப்பட்ட
பாண், பட்டர் பாண், பட்டர் பணிஸ்,
கிறீம் பணிஸ், பலவித கேக் வகைகள்
பிஸ்கற் வகைகள் இன்னும்
பல உண்டு,

மங்களகரமான பொது வைபவங்களுக்கும்
தங்கள் தேவைகளுக்கும் ஏற்ற
முறையில் குறித்த நேரத்தில்
குறைந்த விலையில் தரமுள்ளதாக
செய்து கொடுக்கப்படும்.

இன்றே ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
உண்மை விளங்கும்.

## ஸ்ரீ மனோன்மணி பேக்கரி

க. சி. சிவரத்தினம்பிள்ளை

வல்வெட்டித்துறை

---

அன்பளிப்பு

## மோகன் ஆட்ஸ்

பிரதான வீதி,

பருத்தித்துறை.

---

## சுசீலா ஆபரண மாளிகை

உரிமை: K. V. தெய்வேந்திரம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்குத்
தகுந்த இடம்

ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

**SUSILA JEWEL HOUSE**
**Main Street, — POINT PEDRO**

---

அன்பளிப்பு

## பாரத் ஸ்ருடியோ

படப் பிடிப்பாளர்

☎ 252

82/1, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

அழகிய

★ பவுண் நகைகள்

★ தங்கப் பவுண்

★ வைரங்கள்

ஆகியவற்றிற்கு

# இரத்தின மாளிகை

நகை வியாபாரம்

57, கன்னாதிட்டி (R. G. கட்டிடம்) யாழ்ப்பாணம்

---

தென் இந்திய வட இந்திய யாத்திரைகள் ஒழுங்குசெய்வோர்

# ராஜா ரேர்ஸ்

168/1 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7374

கொழும்பு கிளை: 33111

வடமாகாணத்தில் அரசாங்கத்தாலும், உல்லாச பிரயாணச் சபையாலும் (Tourist Board)

அங்கீகரிக்கப்பட்ட அந்நிய செலவாணி ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்ட

ஒரே ஒரு ஸ்தாபனம்.

தங்கச்சிலைபோல் தவழ்ந்திடும் மழலைக்கு

★ தரமான ஸ்தாபனம் ஜெமினி

சிங்காரப் பாவையர் சிரித்துக் குலுங்கும்

★ சிறந்த பொருட்களுக்கு ஜெமினி

மங்காத வளையல்கள் மலிவாக வாங்கிட

★ மகிழ்வுடன் நாடுவீர் ஜெமினி

# ஜெமினி பான்ஸி பலஸ்

பஸ் நிலையம் : : : பருத்தித்துறை

---

*For*

Gift Articles for every occassion
Fancy Goods
Toys for your beloved children
Glassware & Cremicware
Electrical Goods
Sundry Goods
Welding Materials & Equipments
Industrial Gases
Hardwares and Etc.

Everything under one roof!
The biggest Shopping Palace in Jaffna

# MOHAMEDALLY ABDULALY

SAIFEE TRANSPORT SERVICE

Specialists in Coffee Roasting, Grinding and Leading Transporters.

Colombo Office;
81, Old Moor Street,
COLOMBO 12
T'Phone; 33569 T'grams; Barvala

5 & 7, Grand Bazaar,
JAFFNA
T'Phone 515 T'grams; Saifee

நங்கையர் விரும்பும் நவநாகரீக

* நகைகளுக்கும்

* வைரங்களுக்கும்

புகழ் பெற்று விளங்கும் ஸ்தாபனம்

**K. N. M. மீருன் சாஹிப்**

"தங்கப் பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

☎ 585

Visit:

*K. N. M. Meeran Sahip*

JEWELLERS & DIAMOND MERCHANT

Savereign Place

**Kannathiddy,** **Jaffna.**

---

# கலாநிதி ஸ்ரோர்ஸ்

★ யானைமார்க் குளிர்பானங்கள்

★ சிறந்த பட்டர்

★ பலசரக்கு சாமான்கள்

★ சாய்ப்புச் சாமான்கள்

ஆகியவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

பஜார் வீதி
வல்வெட்டித்துறை.

உரிமையாளர்:
N. தனிகாசலம்

தங்கச்சிலைபோல் தவழ்ந்திடும் மழலைக்கு

★ தரமான ஸ்தாபனம் ஜெமினி

சிங்காரப் பாவையர் சிரித்துக் குலுங்கும்

★ சிறந்த பொருட்களுக்கு ஜெமினி

மங்காத வளையல்கள் மலிவாக வாங்கிட

★ மகிழ்வுடன் நாடுவீர் ஜெமினி

# ஜெமினி பான்ஸி பலஸ்

பஸ் நிலையம் ::: பருத்தித்துறை

---

*For*

Gift Articles for every occassion
Fancy Goods
Toys for your beloved children
Glassware & Cremicware
Electrical Goods
Sundry Goods
Welding Ma;erials & Equipments
Industrial Gases
Hardwares and Etc.

Everything under one roof!
The biggest Shopping Palace in Jaffna

# MOHAMEDALLY ABDULALY

SAIFEE TRANSPORT SERVICE

Specia'is's in Coffee Roasting, Grinding and Leading Transporters.

Colombo Office;
81, Old Moor Street,
COLOMBO 12
T'Phone; 33569 T'grams; Barvala

5 & 7, Grand Bazaar,
JAFFNA
T'Phone 515 T'grams; Saifee

நங்கையர் விரும்பும் நவநாகரீக

* நகைகளுக்கும்

* வைரங்களுக்கும்

புகழ் பெற்று விளங்கும் ஸ்தாபனம்

**K. N. M. மீரான் சாஹிப்**

"தங்கப் பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

☎ 585

Visit:

***K. N. M. Meeran Sahip***

JEWELLERS & DIAMOND MERCHANT

Savereign Place

**Kannathiddy, Jaffna.**

---

# கலாநிதி ஸ்ரோர்ஸ்

- யானைமார்க் குளிர்பானங்கள்
- சிறந்த பட்டர்
- பலசரக்கு சாமான்கள்
- சாய்ப்புச் சாமான்கள்

ஆகியவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

பஜார் வீதி
வல்வெட்டித்துறை.

உரிமையாளர்:
N. தனிகாசலம்

SPACE DONATED

by

# *Lanka Filling Station*

*Valvettiturai*

**Prop: Mrs. R. Shanmugavadivel**



நங்கையர் விரும்பும் நவநாகரீக

ஆபரணங்களுக்கு

# ஈஸ்வரி நகை மாளிகை

தங்க நகை வியாபாரம் ★ அடைவு பிடிப்போர்

பிரதான வீதி, வல்வெட்டித்துறை

# யோகநாயகி படமாளிகை

வல்வெட்டித்துறை

வல்வை மக்களின் மனமகிழ்ச்சிக்கு ஐந்து ஆண்டுகளாக

சேவை செய்கிறது.

**தமிழ், சிங்கள, ஆங்கில, இந்திப் படங்கள்**

*ஆகிய யாவும் செம்மையான முறையில் காண்பிக்கப்படுகின்றன.*

ஐந்து ஆண்டு பூர்த்தி தினமாகிய 16-3.77ல்

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த

சத்தியா மூவிசாரின் 'காவல்காரன்'

*காட்சி தருவான்.*

'தங்கப் பதக்கம்' அண்மையில் வருகிறது!

*With the best compliments of*

★

# அக்ரிகோலாஸ்

# AGRICOLAS

★

URIKKADU, VALVETTITURAI

அன்பளிப்பு

S. அழகேஸ்வரராஜா

பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.

அன்பளிப்பு

சிவசக்தி ஸ்ரோர்ஸ்

&

றேடியோ மெக்கானிக்ஸ்

யாழ் வீதி, வல்வெட்டித்துறை.

S. K. திருச்சிற்றம்பலம் & சன்ஸ்

லங்கா எரிபொருள் விநியோகிப்பவர்கள்

வல்வெட்டித்துறை.

சிதம்பராவின் முன்னேற்றத்திற்கு எமது நல்லாசிகள்

விஸ்ணு ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

இல. 65, யாழ்ப்பாணவீதி

வல்வெட்டித்துறை

தற்கால நாகரீக ஆடவர் நங்கையர் விரும்பும்

நவீன பிடவை வகைகளுக்கு

# ரவி ரெக்ஸ்டைல்ஸ்

5, மக்கள் சந்தை, பருத்தித்துறை

---

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான நகை வியாபாரிகள்

# ராணி ஆபரண மாளிகை

உரிமையாளர்: க. முருகேசு

119, பெரிய தெரு, பருத்தித்துறை.

உங்கள் மனத்திற்குகந்த பலவித நவீன நகைகள் கிடைக்குமிடம்.

✱ ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்குமிடம் ✫

---

ஓர் நற்செய்தி!

* சிறந்த கல்வி
* திறமை மிக்க ஆசிரியர்கள்
* அமைதியான சூழ்நிலை
* சிறந்த நிர்வாகம்

# ராஜகிரி கல்வி நிலையம்

'ராஜகிரி', 2-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

பூ வேலைகளுடன் கூடிய
வேலைப்பாடமைந்த பெண்களின் தற்கால
நவநாகரீக ஆடைகள் பெண்மணிகளாலும்
ஆண்களின் சேட்டிங் சூட்டிங் யாவும் கை தேர்ந்த தொழிலா
ளர்களால் தைப்பதற்கு
சிறந்த இடம்

# செல்வம் ரெயிலறிங்

பெற்ரேல் செற்றடி, : வல்வெட்டித்துறை.

★ ஆடர்கள் உடன் கவனிக்கப்படும் ★

---

அழகான பின்னணிக் காட்சிகளுடன்
நவீன முறையில்
படம் பிடிப்பதற்கு சிறந்த இடம்

## குகன் ஸ்ருடியோ

பருத்தித்துறை

## KUGAN STUDIO

**POINT PEDRO**

☎ 524

சிதம்பரக்கல்லூரி சிறப்புடன் மிளிர

அன்பளிப்பு

# நஞ்சளு தியேட்டர்

வல்வெட்டி. வல்வெட்டித்துறை

# மகேஸ்வரி பேக்கரி

தீருவில், வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறையின் கல்விக் கண்ணாக விளங்கி வரும்

எமது கல்லூரி என்றும் சிறப்புடன் செயலாற்றி

மேலும் சிறப்புப்பெற வாழ்த்துபவர்கள்

# ஹெலியன்ஸ் நண்பர்கள்

**இதுவரை 19 தயாரிப்புகளை அளித்து**

**கடந்த வருடம் "சாணக்கிய சபதம்" தந்த**

**கலைக் காவிய நாயகர்கள்**

## வல்வை ஹெலியன்ஸ் நண்பர்களின்

**மே மாத வெளியீடு**

# விஸ்வாமித்திரன்

இதிகாசம்] [சுப்பர் டிராமாஸ்கோப்

இலங்கையிலே மிகக்கூடுதலான மரவள்ளங்கள்
தயாரிக்கும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது
என்று சிந்தித்திருக்கிறீர்களா?

அது

## வல்வெட்டித்துறைதான்

என்பதையும் அறிவீர்களா?

இந்தப் பெருமையில் எமக்கும் ஒரு பங்கு உண்டு
என்பதில் பெரு மகிழ்வடைகிறோம்.

சண்முகவேல்

# மரவள்ளித் தொழிற்சாலை

வித்தனை ஒழுங்கை (Regd No. 156) வல்வெட்டித்துறை

வீட்டுப் பாவனைக்குரிய மரத் தளபாடங்களும்
பாடசாலைத் தேவைகளும்
உறுதியான நீடித்த உழைப்புடைய
மர வள்ளங்களும்
குறித்த நேரத்திலும் திறமையான
வேலைப்பாடுகளுடனும் அமைத்துக் கொடுக்கப்படும்.

'வளர்ந்து வரும் சிதம்பராவின் புகழ்
மென்மேலும் ஓங்க எமது நல்வாழ்த்துக்கள்.

யூனியன் அச்சகம் - பருத்தித்துறை

With the best compliments from

# UNITED FARMERS CORPORATION

2/6, STANLEY ROAD

JAFFNA